Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 28 திங்கட்கிழமை (10.02.2014) பக்கங்கள் 20 ஓசை – 132

06



தவறு என யார் சொன்னது?

14



பணிகள் ஆரம்பம்

## மாடறுப்பை நிறுத்தாவிடில் 499 பேர் உயிர்த்தியாகம் செய்வர்

### சிஹல ராவய எச்சரிக்கை


(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் மாடறுப்பு உட்பட மிருக வதையை ஒரு கிழமைக்குள் ஜனாதிபதி தடுத்து நிறுத்தா விட்டால் இன்னும் 499 பேர் உயிர்த் தியாகம் செய்ய உள்ளதாக சிஹல ராவய அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மிருகவதைக்கு எதிராக சிஹல ராவய அமைப்பு நேற்றைய தினம் கண்டியில் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணியை ஆரம்பித்து வைத்து கருத்துத தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளது.

கண்டி ஸ்ரீதலதா மாளிகையிலிருந்து கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை வரையில் இந்த

(19) ஆம் பக்கம் பார்க்க



## 10000 சொற்கள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கிறார் நவிப்பிள்ளை

(கொழும்பு)


ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பாக பத்தாயிரம் சொற்கள் அடங்கிய தனது அறிக்கையை எதிர்வரும் 26 ஆம் திகதி மனித உரிமை ஆணைய கூட்டத்தில் சமர்ப்பிப்பாரென தெரிவிக்கப்படுகிறது.


தனது அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன்னர் நவநீதம்பிள்ளை ஐந்து அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து இலங்கை இராணுவத்தை குற்றம் சுமத்தும் தகவல்களைப் பெற்றுக்கொண்டுள்ளாரென தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அரச சார்பற்ற நிறுவனங்கள் 60 நேரடி சாட்சியங்களிடமிருந்து மேற்குறித்த தகவல்களைப் பெற்றுள்ளன. எனினும் அவர்களது பெயர், விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் நிசா பிஸ்வாலுடன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்று முன்தினம் ஒரு மணிநேரம் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தேர்தலில் வெற்றிபெறச் செய்தும் ஏமாற்றி வருகிறது கூட்டமைப்பு





### பருத்தித்துறை மரக்கறி வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் விசனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து அவர்களை வெற்றி பெறச் செய்த போதிலும் அவர்களால் தொடர்ச்சியாக தாம் ஏமாற்றப்பட்டே வருவதாக பருத்தித்துறை மரக்கறி வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே வர்த்தகர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இதன்போது, பருத்தித்துறை நகரப் பகுதியில் அமையப் பெற்றுள்ள அங்காடியின் மேற்தளத்தில் மரக்கறி வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் தமது வியாபார நடவடிக்கைகளின் பேது தாம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் தொடர்பில் அமைச்சரிடம் எடுத்து விளக்கினர்.

குறித்த அங்காடிக் கட்டடத்தின் கீழ்த்தளத்தில் கடைத் தொகுதியும், மேற்தளத்தில் மரக்கறி கடைத் தொகுதியும் இருப்பதனால் நோயாளர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள் என பல்வேறு தரப்பினரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் நிலையில் தமக்கு கீழ்தளத்தில் மரக்கறி கடைத்தொகுதிகளை அமைத்து தருமாறு நகரசபைத் தலைவரிடம் தாம் கோரியிருந்த போதிலும் அதுவிடயம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தாத நகர சபைத் தலைவர் தமது கோரிக்கைக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் மரக்கறி வர்த்தகப் பிரதிநிதிகள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இந்நிலையில் தமக்கு நியாயத்தின் அடிப்படையில் நீதி கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்த பிரதி

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி ஜெனிவா செல்வதற்குத் தயார்

### என்கிறார் அமைச்சர் சமரசிங்க

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி கேட்டால், செலவதற்குத் தயாராகவுள்ளதாக அமைச்சரும் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா அமர்வில் பங்கேற்பது தொடர்பாக இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி செல்வதற்கு என்னை இதுவரை

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் விசாரணைகளை நடத்த ஆற்றலுள்ளவர்கள் உள்ளனர்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(அம்பாந்தோட்டை)

இலங்கையில் விசாரணைகளை மேற்கொள்ள எவரும் இல்லையென்ற காரணத்தால் சர்வதேச விசாரணை தேவையெனக் கோருகிறார்கள். ஆனால் நாட்டில் புத்திஜீவிகள், நிபுணர்கள், சுயாதீனக் கொள்கையை கொண்டவர்கள் பலர் உள்ளனரென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அம்பாந்தோட்டை மாவட்ட தேர்தல் காரியாலயம் நேற்று அம்பலத்தொட்டைப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்கம் என்ற வகையில்

(19) ஆம் பக்கம் பார்க்க

### ஐ.நா. உதவிச் செயலர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலரும், ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் (யு.என்.டி.பி) பணிப்பாளருமான ஹோலியங் சூ இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் மாலை இலங்கை வந்தடைந்தார்.

தனது விஜயத்தின் நோக்கம் குறித்து அவர் தெரிவிக்கையில்,

யு.என்.டி.பி.யினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து ஆராயவுள்ளதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் இதுவரை

(19) ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணைக்கு ஆதரவளிக்கப் போவதில்லை

### முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிற்கெதிரான சர்வதேச விசாரணைக்கு ஆதரவளிக்கப் போவதில்லை எனவும், விடுதலைப் புலிகளால் முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள் குறித்தும் சர்வதேச விசாரணைகளை கோரப் போவதில்லை எனவும் முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளதாவது,

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் உள்ளக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே தற்போதைய தேவையாக அமைந்துள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் 20000 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் சொந்த இடங்களிலிருந்து

(19) ஆம் பக்கம் பார்க்க

## சுண்டுக்குளி இளைஞனை காணவில்லையென முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி விடான்ஸ் வீதியினைச் சேர்ந்த சண்முகநாதன் சுரேஸன் (வயது - 36) என்ற இளைஞனைக் கடந்த புதன்கிழமை முதல் காணவில்லையென அவரது தந்தையினால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடந்த 7 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் இவர் கடந்த 5 ஆம் திகதி யாழிலிருந்து வவுனியாவிற்குச்

(19) ஆம் பக்கம் பார்க்க

# நான்கு வருட கற்கைநெறி குறைப்பு எதிர்த்து கையெழுத்துப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களினால் மேற்கொள்ளப்படும் கையெழுத்து வேட்டைப் போராட்டமொன்று நேற்றைய தினம் யாழ். பேருந்து நிலையத்திற்கு முன்னாலும் முன்னெடுக்கப்பட்டது.

நான்கு வருட இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைநெறி மூன்று வருடமாகக் குறைக்கப்பட்டதற்கு எதிராகவும் சகல இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களுக்கும் நான்கு வருட பட்டப்படிப்பை உறுதி செய்யுமாறு கோரி இலங்கையிலுள்ள அனைத்து இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களினால் இந்தக் கையெழுத்துப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலங்கையிலுள்ள 11 மாவட்டங்களில் இந்தக் கையெழுத்துப் போராட்டம் நேற்று மேற்கொள்ளப்பட்டது. இயன் மருத்துவம், ஊடுகதிர்படமெடுப்பு, மருந்தாக்கவியல், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், தாதியல் ஆகிய பட்டப் படிப்புக்கள் 2005ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆண்டு வரை நான்கு வருடங்களைக் கொண்ட பட்டப் படிப்புக்களாக இருந்தன.

எனினும், 2010ஆம் ஆண்டு இவை மூன்று வருடமாக மாற்றப்பட்டன. அதாவது 3' வருடங்கள் சாதாரண பட்டத்தினையும், அதன் பின் னர் ஜி.பி.ஏ 2.8 ஐ விட அதிகமாக எடுக்கும் மாணவர்கள் மேலும் ஒரு வருட விசேட பட்டப் படிப்பையும் மேற்கொள்ளக் கூடியதாக மாற்றப்பட்டது.

இந்த மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இந்தக் கையெழுத்திடும் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கு எதிரான போராட்டங்கள் கடந்த காலங்களிலும் பல்வேறு தரப்பினர்களினால் முன்னெடுக்கப்பட்டு வரப்பட்டதாக போராட்டத்தில் கலந்து கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர். (25)

# கொழும்பு கம்பன் கழகத்தின் இவ்வாண்டுக்கான கம்பன் விழா

(யாழ்.நிருபர்)

கொழும்பு கம்பன் கழகத்தின் இவ்வாண்டு கம்பன் விழா இம் மாதம் 13, 14, 15, 16 ஆம் திகதிகளில் கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் கம்பன் கழகத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 34 வருடங்கள் பூர்த்தியாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு கம்பன் விழாவின் முதல் நாளான எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு இராமகிருஷ்ண தோட்டம் இல.11 இல் அமைந்துள்ள ஸ்ரீ ஐஸ்வர்யலக்சுமி கோயிலிருந்து கம்பன் திருவுருவப் படமும், சீதா இராம விக்கிரகங்களும், நாதஸ்வர, தவில் வித்துவான்களின் மங்கல இசையுடன் ஊர்வலமாக விழா மண்டபத்தை நோக்கி எடுத்து வரப்படவுள்ளன.

இவ் ஊர்வலத்தில் நம் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகை தரும் பிரமுகர்களும், இந்தியா, மலேஷியா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரவுள்ள அறிஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு திருக்கேதீஸ்வரம் ஆலயத் திருப்பணி அறங்காவலர் சபைத் தலைவர் வி.கைலாசபிள்ளை தம்பதியர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்க, யாழ். மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும், கொழும்பு கம்பன்கழக பெருந்தலைவருமான ஜெ.விஸ்வநாதன் தலைமையில் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து காலை, மாலை இரு அமர்வுகளாக விழா நான்கு நாட்கள் நடைபெறவுள்ளன. (10)

## சிங்களப் பாடத்திற்கு ஆசிரியர் நியமனம்

(அச்சுவேலி)

நெல்லியடி மத்திய கல்லூரியில் சிங்களப் பாடம் கற்பிக்க வென ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் மொழியான சிங்களப் பாடநெறிக்கான கற்பித்தல் நடவடிக்கைகள் இதன் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், மாணவர்களும் இப்புதிய பாடநெறியினைக் கற்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இப்பாடநெறி தரம் 6 முதல் 10 வரையான வகுப்புக்களுக்கும் மற்றும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கும் கற்பிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (85)

# மருத்துவ பயிலுநர்கள் வைத்தியசாலைகளில் நியமனம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் முதல் யாழ்.மருத்துவ பீட இறுதி ஆண்டு மாணவர் ஒருவர் பயிலுநராக சுகாதார பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று சங்கானை, கோப்பாய், கோண்டாவில் ஆகிய பிரதேச வைத்தியசாலைகளுக்கும் இவ்வாறு ஒவ்வொருவர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஒவ்வொருவரும் 3 வாரங்களுக்கு மட்டுமே இவ் வைத்தியசாலைகளில் பணி புரிந்து பின்னர் வெவ்வேறு வைத்தியசாலைக்கும் சென்று பணி புரிவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நோயாளர்கள் எதிர்நோக்கிவந்த நெருக்கடி நிலை தீர்ந்து சுலபமாக சிகிச்சை பெற முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (104)

# மதபோதகராக முயற்சிப்பவர் பெறாமகள் மீது வல்லுறவு

20 வயது நிரம்பிய பெண் ஒருவர் தனது சித்தப்பாவினால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கருக்கலைப்பு செய்யப்பட்ட சம்பவம் ஒட்டுசுட்டான், கூழாங்குளம் பகுதியில் நடைபெற்றுள்ளது.

தற்போது யாழில் பாதிரியாராவதற்கு கல்வி கற்கும் நபர் ஒருவர் தனது அண்ணனின் மகளை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தியதுடன், கருவை கலைப்பதற்காக 5 ஆயிரம் ரூபா கொடுத்ததாக செய்யப்பட்ட முறைப்பட்டினடிப்படையில் சந்தேக நபர் கடந்த 6 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட வேளை சந்தேகநபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபருடன் படிப்பதற்காக தங்கியிருந்த வேளையிலேயே இச்சம்பவம் நடைபெற்றதாக பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். (170)

# கலாபூஷண அரச விருது விழாவில் வடக்கில் 44 கலைஞர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் வருடாந்தம் வழங்கப்படும் கலாபூஷண அரச விருது விழா 2013 டிசம்பர் 15 ஆம் திகதி கொழும்பு றோயல் கல்லூரி நவரங்கலா மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் சிங்கள, தமிழ், முஸ்லிம் கலைஞர்கள் அடங்கலாக 284 பேருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் வடமாகாணத்தைச் சேர்ந்த 44 கலைஞர்களும் அடங்குகின்றனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னாரைச் சேர்ந்த கலைஞர்களின் விபரம் வருமாறு,

இலக்கியம் எழுத்துத்துறைக்காக பின்வருவோர் விருது பெற்றனர்.

சின்னையா செகராசசிங்கம் (கரவெட்டி), செல்லையா குமாரசாமி (கைதடி), திருமதி வல்லிபுரம் பத்தினிப்பிள்ளை (கரவெட்டி) முத்தையா மாசிலாமணி (கொக்குவில்), செல்லத்துரை தேவராசா (வவுனியா), விசுவலிங்கம் செல்வரத்தினம் (வட்டுக்கோட்டை), வயிரமுத்து சிவநேசன் (சுன்னாகம்), நாகரத்தினம் கணேசலிங்கநாதன் (வட்டுக்கோட்டை), கதிரவேலூ நல்லதம்பி (சங்கானை), ஐயாத்துரை சண்முகலிங்கம் (கரவெட்டி), ஆறுமுகம் கனகரத்தினம் (சுழிபுரம்), இராசரெத்தினம் சரவணபவன் (வட்டுக்கோட்டை), கணபதிப்பிள்ளை எதிர்வீரசிங்கம் (அல்வாய்), அலேசு மரியதாஸ் (மன்னார்), நாலிங்கம் தர்மராசா (வவுனியா), மிரா லெப்பை லாபிர் (யாழ்ப்பாணம்),

இசைத்துறைசார் தவில், இசை, நாடகம், நாதஸ்வரம், வயலின், மிருதங்கம் ஆகிய துறைக்காக பின்வருவோர் விருது பெற்றனர்.

இராமநாதன் பாலகிருஷ்ணன் (இணுவில்), சவரிமுத்து லியோ (ஊர்காவற்றுறை), சண்முகம் பஞ்சாட்சரம் (அரியாலை), அழகர்சாமி பாலச்சந்திரன் (அளவெட்டி), கிருஷ்ணசாமி பத்மநாதன் (யாழ்ப்பாணம்), பொன்னையா பாலசுப்பிரமணியம் (முல்லைத்தீவு).

நாட்டுக்கூத்து, மேடை நாடகம், யோகா ஆகியவற்றுக்காக பின்வருவோரும் விருது பெற்றனர்.

முருகேசு செல்லத்துரை (கிளிநொச்சி), வேலுப்பிள்ளை சிற்றம்பலம் (மானிப்பாய்), இன்னாசிமுத்து யேசுதாசன் (மாதகல்), சங்கரப்பிள்ளை தியாகராசா (உடுவில்), சிவநாமம் சிவநேசன் (அல்வாய்), இராமசாமி பாலசுப்பிரமணியம் (பருத்தித்துறை) வல்லிபுரம் யோகானந்தசிவம் (வட்டுக்கோட்டை), சின்னப் பொடியன் ஐயாத்துரை (அளவெட்டி கிழக்கு), வெள்ளியம்பலம் முத்துச்சாமி (வல்வெட்டித்துறை), சதாசிவம் உருத்திரேஸ்வரன் (பருத்தித்துறை), நடராசா இராமநாதன் (முல்லைத்தீவு), வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை (கிளிநொச்சி), சீவரத்தினம் பாலசுப்பிரமணியம் (வட்டுக்கோட்டை).

மேலும் ஓவியம், சிற்பம், கிராமியக் கலை, பல்துறை ஆகியற்றுக்காக கலாபூஷண விருது வழங்கப்பட்டோர் விபரம் வருமாறு,

செல்லையா விசுவலிங்கம் (நீர்வேலி), சுப்பையா ஆச்சாரி நாகலிங்கம் (யாழ்ப்பாணம்), சுப்பிரமணியம் இரத்தினகோபால் (யாழ்ப்பாணம்), மரியநாயகம் அன்ரன் யோசேப் (யாழ்ப்பாணம்), கணபதிப்பிள்ளை கதிரவேல் (கோப்பாய்), பொன்னுத்துரை கனகரத்தினம் (வவுனியா), இராமுப்பிள்ளை முருகுப்பிள்ளை (முல்லைத்தீவு), சுப்பிரமணியம் அருமைநாயகம் (முல்லைத்தீவு), செல்லப்பா சண்முகநாதன் (மாவிட்டபுரம்) ஆகியோருக்கே மேற்படி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. (105)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2503 திகதி 08-02-2014

ஆங்கில எழுத்து: H

வெற்றி எண்கள்: 04 18 43 55

போனஸ் இல: 42

ஜக்பொட் பரிசு ரூ.14,978,450/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 230835 | 20/- | 4,616,700/- |
| 2 இல | 16437 | 100/- | 1,643,700/- |
| 3 இல | 348 | 1,000/- | 348,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9597 | 40/- | 383,880/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 737 | 1,000/- | 737,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 18 | 10,000/- | 180,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,978,450/- | - |
| 1 இல + போனஸ் இல | 10919 | 100/- | 1,091,900/- |
| 2 இல + போனஸ் இல | 496 | 500/- | 248,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 477 | 200/- | 95,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 33 | 1,500/- | 49,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 269906 | | 12,144,080/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.02.12 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 15,609,475/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3266)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# இடைவிலகும் மாணவர் தொகை குறைவு

## உதவிப் பிரதேச செயலர் தெரிவிப்பு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக எல்லைக்குள் பாடசாலையை விட்டு இடைவிலகும் மாணவர்களின் தொகை மற்றும் பாடசாலைக்கு செல்லாது வேலைக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களிலும் பார்க்க குறைவடைந்துள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச உதவிப் பிரதேச செயலரும், பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுத் தலைவருமான திருமதி. நே.செல்வகுமாரி தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் கண்காணிப்புக்குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேசத்தின் 28 கிராம சேவகர் பிரிவிலும் சிறுவர் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை சிறப்பாக செயற்படும் பட்சத்தில் பிரச்சினைகள் இல்லாத சிறுவர்கள் உருவாக முடியும்.

கடந்த தை மாதம் மேற்கொண்ட திடீர் சோதனைகளின் அடிப்படையில் சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லாது சுற்றித்திரிந்தமை கண்டறியப்பட்டது. அத்துடன் சில சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாது வேலைக்குச் செல்வதும் கண்டறியப்பட்டது. இவர்களுக்கும் இவர்களது பெற்றோர் பாதுகாவலர்களுக்கும் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இதன் பின்பாக பிரதேச செயலக எல்லைக்குள் பாடசாலையை விட்டு இடைவிலகும் மாணவர்களின் தொகை மற்றும் பாடசாலைக்கு செல்லாது வேலைக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளன.

எனினும் இவ்வாறான சோதனைகளை தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டும்.

இதனூடாக. மாணவர்களின் எதிர்காலத்தை சிறப்பாக மாற்ற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கூட்டத்திற்கு கிராம சேவகர்கள், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர், கல்வி மற்றும் தொழில் திணைக்கள அதிகாரிகள், மானிப்பாய் மற்றும் இளவாலைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார், பிரதம குடும்ப நல உத்தியோகத்தர், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர் எனப்பலர் கலந்து கொண்டனர். (48)

# மின்சாரசபை காரியாலயம் இடமாற்றத்தால் மக்கள் சிரமம்

நெல்லியடி பகுதியில் இதுவரை இயங்கி வந்த மின்சாரசபையின் காரியாலயம் பருத்தித்துறைக்கு புதிய கட்டடத்திற்கு சென்றமையில் நெல்லியடிப்பகுதியை அண்டிய மக்கள் மின்சார இணைப்பு மற்றும் புதிய மின் இணைப்புக்கான படிவங்களைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கரவெட்டி, உடுப்பிட்டி, இமையாணன், தொண்டைமானாறு மற்றும் கரவெட்டி பகுதியிலுள்ள கிராம மக்கள் மின்சார செயற்பாடுகளுக்காக தற்போது பருத்தித்துறைக்கு செல்லவேண்டியுள்ளதாக இக்கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். என்வே பாவனையாளர்களின் நன்மைகருதி நெல்லியடி அல்லது நாவலர் மடத்தடியில் தற்காலிகமாக மின் இணைப்பு காரியாலம் அமைக்கப்பட்டால் தாம் மின்சாரச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் இலகுவாக இருக்கும் எனவும் இது தொடர்பில் இலங்கை மின்சாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல்



மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகம், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரின் ஏற்பாட்டில் சுவிஸ் பபிக்கோன் தமிழர் ஒன்றியம் மற்றும் யாழ். எயிட் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையில் மாணவர்களுக்கான கற்றல் ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டின் முதல் அங்கமாக நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையில் கல்வி பயிலும் 27 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இவர்களுக்கான இவ் ஊக்குவிப்புகள் நேற்று முன்தினம் நடைபெற்ற பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் இறுதி நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் பாடசாலையின் அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், மானிப்பாய் மேற்கு இளைஞர் கழக தலைவர் எஸ்.கீர்த்தனா, ஆனைக்கோட்டை இளைஞர் கழகத் தலைவர் எப்.எக்ஸ்.டீ.கூரே ஆகியோர் மாணவர்களுக்கான கற்றல் ஊக்குவிப்புகளை வழங்கி வைத்தனர். இந் நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (48)

## கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு தண்டம்

கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு 5 இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்கள் மற்றும் உபகரணங்கள் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட இருவருக்கு 5 இலட்சம் ரூபா தண்டப்பணம் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். க்சிப்பு உற்பத்தி செய்யப்பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை அழித்துவிடுமாறு நீதிபதி உத்தரவிட்டதுடன், தண்டப்பணம் செலுத்த தவறின் தலா 8 மாத கால சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (170)

# போலிப் புரட்சியாளர்கள்!




அணுகுமுறைகள் சரியாக இருந்தால் நன்மைகள் தானாக உருவாகும் என்று நேற்று இதே பக்கத்தில் எழுதியிருந்தேன்.

இன்றைய உலகம் இதையே விரும்புகிறது. இன்றைய உலகத்தின் நடைமுறையும் இதுதான்.

சில அணுகுமுறைகளுக்கு கை மேல் உடனடியாகப் பலன் கிட்டும். சிலவற்றிற்கு சில காலம் தாமதமாகும்.

ஆனால், பொருத்தமான அணுகுமுறைகள் கல்லையும் கனிய வைக்கும். இரும்பையும் வளைக்கும்.

மனிதனைவிடப் பலமானது யானை. ஆனால், யானையை அடக்கி ஆள்கிறான் மனிதன்.

தன்னுடைய தோல்விகளில் இருந்தும், தவறுகளிலிருந்தும் பெற்றுக்கொண்ட அனுபவத்தை அறிவாக்கியே முன்னோக்கிய பயணங்களை வடிவமைத்தது மனித இனம்.

என்றபடியால்தான் மனிதனின் வளர்ச்சிகளும், முன்னேற்றங்களும் சாத்தியமாகின.

இதையெல்லாம் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் விளங்கிக் கொள்வதில்லை.

தங்களுடைய சொந்த வாழ்வின் முன்னேற்றத்திற்காக பலவற்றில் சமரசம் செய்யும் ஆட்கள் அரசியல் ரீதியாக தீவிர நிலைப்பாட்டில் இருப்பார்கள்.

தங்கள் சொந்தப் பிரச்சினை ஒன்றைத் தீர்க்க வேண்டும் என்றால், அதற்காக பல தந்திரோபாயங்களைக் கையாண்டு நாசூக்காக காரியம் பார்ப்பவர்கள், அரசியல் விவகாரம் என்றால் ஒரு படிகூட இறங்க முடியாது என்று அடம்பிடிப்பார்கள்.

உதாரணமாக புலம்பெயர்ந்தவர்களை எடுத்துக் கொள்வோம்.

இவர்களுடைய பயணங்கள் எப்படி அமைந்தன? கௌரவப் பிரஜைகளாகவா எல்லோரும் அந்த நாடுகளுக்கு சென்று சேர்ந்தனர்.?

அல்லது அங்கெல்லாம் செங்கம்பள வரவேற்பா இவர்களுக்கு வழங்கப்பட்டது?

அன்று இருந்த நிலைமையில், எப்படியோ, எங்கோ தப்பிச் செல்ல வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே இருந்தது.

அதற்காக எதையெல்லாமோ செய்துகொண்டார்கள். அப்படி எதையாவது செய்ய வேண்டியிருந்தது. ஏனென்றால், நோக்கம் நிறைவேற வேண்டுமே.

ஆனால், இதையெல்லாம் நம்மவர்கள் விளங்கிக்கொள்வதில்லை.

அரசியல் உரிமை என்பதும் சொந்த நாட்டில் அதைப் பெறுவது என்பதும் அப்படியானதல்ல என்று சிலர் இதையிட்டு மறுப்புக் கூறலாம்.

நானும் சொல்கிறேன் அரசியல் உரிமையை மட்டுமல்ல வாழ்வதற்கான எந்த உரிமைகளையும் யாரும் யாரிடமும் கையேந்திப் பெறுவதில்லை. யாசிப்பதும் இல்லை.

ஆனால், உலகம் அப்படியாக இருக்கிறது?

அது அதிகார வர்க்கத்தின் கால்களுக்குக் கீழே கட்டுப்பட்டிருக்கிறது.

இந்த அதிகார வர்க்கத்தை எதிர்ப்பவர்களும், விமர்சிப்பவர்களும் இதற்கெதிராக போராடவும் புரட்சி செய்யவும் தயாரா?

வேண்டுமானால், இந்த அதிகாரத்தரப்பின் மீது மக்களுக்கு இருக்கும் வெறுப்பையும் அதிருப்தியையும் சொல்லி அல்லது விமர்சித்து, அதன் மூலம் உருவாகும் போலிப் பிம்பத்தை கட்டமைத்துக் கொள்வார்கள்.

இந்த போலிப் பிம்பம் இவர்களை சுத்தமான எதிர்ப்பாளர்களாகவும், புரட்சியாளர்களாகவும் மக்களை நம்பவைக்கிறது.

ஆனால், உண்மை அதுவல்ல, மக்களின் உணர்வுகளை ஏமாத்தி தமது அரசியல் ஆதாயங்களை அடையும் எத்தனமே இது.

இந்த ஏமாற்று வித்தையில்தான் தமிழ் சமூகம் அலைக்கழிந்து கொண்டிருக்கிறது. தமிழ்த் தலைமைகள் பிழைத்துக் கொண்டிருக்கின்றன.

இது மனித விதிக்கு மாறானது.

மனித விதிக்கு மாறான எதுவும் மனித வளர்ச்சிக்கு ஏற்றதல்ல.

என்பதால்தான் தமிழர்கள் தோல்வியின் அடிவாரத்தில் குந்தியிருந்து புலம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

வாழ்க்கை பல கேள்விகளையும் பதில்களையும் கொண்டது: எப்பொழுதும் அது பௌர்ணமியாக இருப்பதில்லை, அமாவாசையும் வரத்தான் செய்யும். ஹோமர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நீரும் மண்ணும் இரு கண்கள்!

தண்ணீர் இல்லையேல், உயிர்கள் இல்லை. உயிர்கள் இல்லையேல் உலகம் இல்லை. அதனால் தான், "நீரின்றி அமையாது உலகு" என்றனர். ஆனால், தண்ணீர் பற்றிய தகவல்கள், நம் எதிர்காலம் பற்றிய அச்சத்தையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்துவதாக உள்ளன.

உலக சுகாதார அமைப்பின் புள்ளிவிவரப்படி, 1.10 கோடி பேர், அதாவது, உலக மக்கள் தொகையில், 18 சதவீதம் பேருக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைக்கவில்லை. வளரும் நாடுகளில், 80 சதவீத உடல் உபாதைகளும், மரணங்களும் தண்ணீர் தொடர்பான நோய்களால் நிகழ்கின்றன.

2025ல் உலக மக்கள் தொகையில், மூன்றில் இரண்டு பேருக்கு பாதுகாப்பான, சுத்தமான குடிநீர் கிடைக்காது. 21ம் நூற்றாண்டின் சரிபாதியில், அதாவது இன்னும் நாற்பது ஆண்டுகளில் 60 நாடுகளில் உள்ள, 700 கோடி மக்கள், தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கியின் கணிப்புப்படி, இனி வருங்காலங்களில், ஒவ்வொரு தனிமனிதனும், தன்னுடைய வருமானத்தில், 10 சதவீதம் வரை, தண்ணீருக்காகச் செலவிடும் நிலை ஏற்படக்கூடும். அதிகமாக செலவு செய்பவர்களைப் பார்க்கும் போது, தண்ணீர் போல் செலவு செய்கின்றனர் என, கூறுவதுண்டு. அப்படி தாராளத்துக்கு உதாரணமாகக் காட்டப்பட்ட தண்ணீர், இனி, பற்றாக்குறைக்கு உதாரணமாகும்.

தண்ணீர் பற்றாக்குறைக்கு, வறட்சி போன்ற இயற்கைக் காரணங்களை மட்டும், பெரிதாகச் சொல்ல முடியாது. நிலத்தடி நீர் அளவுக்கதிகமாக உறிஞ்சப்படுவது, முறையற்ற நீர்வள நிர்வாகம், சட்டங்களை கண்டிப்பாக அமுல்படுத்தாதது, நீர் நிலைகள் பராமரிப்பில் அலட்சியம் போன்றவையும் முக்கிய காரணங்கள்.

நமது அலட்சியத்தினால் நீர் மட்டுமல்லாது மண்ணும் கெட்டழிந்து கொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளாலும் வாகனங்கள் மற்றும் இரசாயன உபகரணங்களாலும் நாம் காற்றை நஞ்சூட்டிக் கொண்டிருப்பதற்குச் சமமாக இரசாயன உரங்கள், கழிவுகள் மற்றும் கிருமிநாசினிகளால் நிலத்தையும் நீரையும் நஞ்சூட்டிக் கொண்டிருக்கிறோம்.

இரசாயனங்களால் கெட்டழிந்து கொண்டிருக்கும் இந்த மண்ணைக் காக்கும் வழிமுறைகள் பற்றி அவுஸ்ரேலிய விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர். மண்ணின் உயிர்ச்சத்தை அதிகரிப்பதற்கு மண்புழு உரம் மற்றும் தாவரக்கரி சேர்ப்பதால் நுண்ணுயிர்கள் பெருகி, மண்ணின் உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஏற்படும் என்கிறார்கள்.

மண்ணில் வாழும் பெரும்பான்மையான பற்றீரியா, பூசணங்கள், பூச்சி வகைகளனைத்தும் தங்களது உயிர்வாழ் சக்திக்கு, மண்ணின் உயிர்ச் சத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. நல்ல வளமான பூமியில், ஒரு தேக்கரண்டி அளவுள்ள மண்ணில், சுமார் 6 கோடி நுண்ணுயிர்கள் இருக்கிறது.

மண்புழு உரம் மற்றும் தாவரக்கரி இடுவதால் மண்ணின் ஈரம், கடும் கோடையிலும், இது இடாத மண்ணை விட 40 சதவிகிதம் அதிகமாக உள்ளதையும், அதிக விளைச்சல் கிடைத்துள்ளதையும் அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இரசாயன உரங்களுக்கு பதிலாக இந்த இயற்கைத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மண்ணைக் காக்கும் வழிமுறை பற்றி நாமும் தீவிரமாக யோசிக்க வேண்டும். நீரின்றி அமையாது உலகு என்றால், மண் சீரின்றி அமையாது மன்னுயிர். உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் மண்ணைக் காக்காவிட்டால் நாம் காப்பாற்றப்பட மாட்டோம். - ஆசிரியர்.

# நேற்றைய எதிரிகளுடன்
# நாளைய தினத்தை திட்டமிட முடியுமா?
## அது இலகுவான காரியம் இல்லை என்கிறார் பாப்பரசர்

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்பது சாதாரணமான காரியம் அல்ல என்றும் நேற்றைய எதிரிகளுடன் நாளைய தினத்துக்கான நிகழ்ச்சிநிரலை தயாரிக்க முடியாது என்றும் கத்தோலிக்க திருச்சபையின் போப்பாண்டவர் தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் ஏற்பட்ட மனரீதியான காயங்களை குணப்படுத்துவதும், கடந்தகால எதிரிகளுடன் நாளைய தினத்தை திட்டமிடுவதும் இலகுவான காரியம் இல்லை என்றும் கத்தோலிக்க போபபாண்டவர் வணகத்துக்குரிய பிரான்ஸிஸ் தெரிவித்துள்ளார்.

வத்திக்கான் நகரில் வைத்து நேற்றுமுன்தினம் இலங்கை பிரதிநிதிகளை சந்தித்த போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

எனினும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும், மீளமைப்பினை செயற்படுத்தவும், இதனை தாண்டி வேறு வழிகள் இல்லை என்று அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

இதேவேளை அவர் அடுத்த வருடம் மேற்கொள்ளவுள்ள ஆசிய விஜயத்தின் போது, இலங்கைக்கும் விஜயம் செய்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தியாகராசா சுவாமிகளின் 167ஆவது ஆராதனை விழா

வட இலங்கை சங்கீத சபையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பகல் 10.00 மணியளவில் சற்குரு ஸ்ரீ தியாகராசா சுவாமிகளின் 167 ஆவது ஆராதனை விழா மருதனார் மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபையின் மண்டபத்தில் யாழ்ப்பாணம் கல்வி வலய கல்விப் பணிப்பாளரும் வட இலங்கை சங்கீத சபையின் தலைவருமான செ.உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஸ்ணஐயர், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன், கௌரவ விருந்தினராக இராமநாதன் கல்லூரியின் ஓய்வு நிலை இசைஆசிரியர் திருமதி ஞானகுமாரி சிவனேசன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பவனுஜா தெய்வேந்திரத்தின் இறைவணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் ஆசியுரையை மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ ப.ஜெயக்குமார் வழங்கியதை தொடர்ந்து வாழ்த்துரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் திருமதி கலாதேவி பொன்னம்பலம் வழங்கினார்.

தொடர்ந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட கலைஞர்களின் பஞ்சரத்தின கீர்த்தனாஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது. (48)

## சூதாட்ட நிலையங்களில் 82 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரில் 5 சட்டவிரோத சூதாட்ட நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டு 82 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது இந்த சூதாட்ட நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டன.

சூதாட்டத்தில் ஈடுபட்டவர்கள், சூதாட்ட நிலையங்களை நடத்திச் சென்றவர்கள் உள்ளிட்ட 82 பேர் இதன்போது கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. புறக்கோட்டை ஓல்கட் மாவத்தை, மல்வத்த வீதி போன்ற பகுதிகளில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## புதிய ஓய்வூதியத்திட்டம்; விவசாயிகளுக்கு விரைவில்

(கொழும்பு)

புதிய விவசாய ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக இலங்கை கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான வர்த்தமானி விரைவில் வெளியிடப்படவுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் பண்டுக்க வீரசிங்க கூறியுள்ளார்.

விவசாய ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்துள்ள விவசாயிகளின் வயதின் அதிகரிப்பிற்கு அமைய கொடுப்பனவு அதிகரிக்கும் வகையில் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் விவசாய ஓய்வூதியத் திட்டத்திற்கு பயனாளிகளை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்கு கமநல காப்புறுதி சபை உத்தேசித்துள்ளது.

# நீர்வளம் பற்றிய ஆய்வு நாடுமுழுவதும் ஏற்பாடு

(கொழும்பு)

நிலக்கீழ் நீர் தொடர்பில் நாடளாவிய ரீதியில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு நீர் வளச் சபை திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள செயற்றிட்டத்தின் கீழ் நிலக்கீழ் நீர்வளம் தொடர்பில் அனைத்து தகவல்களும் திரட்டப்படவுள்ளதாக நீர் வளச் சபையின் தலைவர் பந்துல முனசிங்க தெரிவித்துள்ளார.

நெதர்லாந்து அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்த செயற்றிட்டத்திற்காக நான்காயிரம் மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. நிலக்கீழ் நீரின் அளவு மற்றும் தரம் தொடர்பில் இந்த ஆய்வுகளின்போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. ஆய்வு நடவடிக்கைகள் நிறைவில் நிலக்கீழ் நீரை பாதுகாப்பதற்கான திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

# வேட்பாளர்களின் சொத்து விபரம் பிரகடனம் செய்வது கட்டாயம்

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான வேட்பாளர்கள் இந்த மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் தங்களின் சொத்து விபரங்களை வழங்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த முறை மாகாண சபைத் தேர்தலில் 3794 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களுள் சொத்து விபரங்களை முன்வைக்காத வேட்பாளர்கள் இந்த முறை தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று தேர்தல்கள் ஆணையாளர் முன்னதாக அறிவித்திருந்தார்.

கடந்த வாரம் இடம்பெற்ற அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளர்களுடனான சந்திப்பின் போது இந்த விடயம் வலியுறுத்தப்பட்டது. இதேவேளை, மாகாண சபைத் தேர்தலுடன் தொடர்புடைய முதலாவது துப்பாக்கி சூட்டுச் சம்பவம் நேற்று பதிவானது.

பெலியத்த பகுதியைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவரின் வாகனம் மீது சிலர் நேற்று துப்பாக்கி தாக்குதலை மேற்கொண்ட போதும், ஒருவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சம்பவம் தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும், விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வடக்கின் தீர்மானம் : ஒரு ஆபத்தான விஸ்தரிப்பு



## தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து

முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இலங்கை அரசாங்கத்திடம் ஒரு கேள்வியை தொடுத்துள்ளார், "இலங்கை அரசாங்கம் போர்க் குற்றம் எதுவும் செய்யவில்லை என்றால், ஒரு சர்வதேச விசாரணையை அவர்கள் எதிர்ப்பது ஏன்?" என்பதுத்தான் "த இந்து" பத்திரிகையில் அவர் கேட்டிருக்கும் அந்தக் கேள்வி.

மோசமான தந்திரமுள்ள அந்தக் கேள்வியில் "நீங்கள் உங்கள் மனைவியை அடிப்பதை நிறுத்தி விட்டீர்களா?" எனக் கேட்கும் அதே நகைப்புக்கிடமான தர்க்கம் அடங்கியுள்ளது. இந்தக் கேள்விக்கு ஒருவர் ஆம் எனப் பதிலளித்தால், அத்தகைய நடவடிக்கைகளில் உண்மையிலேயே ஈடுபட்டிராத ஒருவர் கூட, கடந்த காலங்களில் தனது மனைவியை அடித்ததை ஒப்புக்கொண்டது போலாகிவிடும். அத்தகைய செயலை ஒருபோதும் செய்திராத ஒருவர் இல்லை என்கிற பதிலைக் கூறுவாராானால், அவர் இன்னமும் தனது மனைவியை அடித்து துன்புறுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்வதற்கான சாத்தியத்தை ஏற்படுத்திவிடும்.

நல்லவரான முதலமைச்சர் "எல்.ரீ.ரீ.ஈ க்கு எதிரான இராணுவ நடவடிக்கையின்போது நடத்தப்பட்டதாக சொல்லப்படும் போர்க் குற்றங்கள் பற்றி ஒரு சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடும் வட மாகாணசபையின் தீர்மானம் இலங்கையின் வடபகுதியில் உள்ள தமிழ் மக்களின் உணர்வுகளை மட்டும் எதிரொலிக்கிறது" என்று கூறுகிறார்.

அதிலும் ஒரு சிறிய சிக்கல் உள்ளது. ஜேர்மனிய மக்களில் பெரும்பாலானோர் நாஸிகளுக்கும் மற்றும் ஹிட்லருக்கும் ஆதரவளித்து நடந்த போரில் தோல்வியடைந்து ஐந்து வருடங்களின் பின் டிரஸ்டென் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியதற்காக ஒரு சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுத்தால் என்று கற்பனை செய்து பாருங்கள். நிச்சயமாக ஜேர்மனிய மக்கள் அப்படியான ஒரு செயலைச் செய்யவில்லை.

அவர்கள் அப்படிச் செய்திருந்தாலோ அல்லது உண்மையில் ஜப்பானிய மக்கள் ஹிரோஷிமா மற்றும் நாகசக்கி மீதான அணுக் குண்டு தாக்குதலை எதிர்த்து அந்த போர்க்குற்றம் இழைக்கப்பட்ட ஐந்து வருடங்களின் பின் ஒரு சர்வதேச விசாரணையை கோரியிருந்தால், வெற்றி பெற்ற அணி மற்றும் சர்வுதேச சமூகம் என்பனவற்றின் பதில் என்னவாக இருநதிருக்கும் என்று ஒருவரால் கற்பன்ன செய்ய முடியும்.

அமெரிக்க அரசியல் என்னும் ஒரு இணையத்தளம், வட மாகாண-சபையில் இந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதற்கான உண்மையான முக்கியத்துவத்தை தொகுத்து ஒரு அருமையான ஆக்கத்தை வழங்கியுள்ளது.

'தீவில் வாழும் தமீழ் மக்களின் மனித நேயத்துக்கு எதிராக இலங்கை தலைவர்கள் புரிந்த இனப் படுகொலை, போர்க் குற்றங்கள் மற்றும் மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் என்பனவற்றை விசார்ணை செய்ய ஐக்கிய நாடுகள் சபை, ஒரு சர்வதேச போர்க்குற்ற விசாரணை மன்றத்தை நிறுவ வேண்டும் என்கிற ஒரு தீர்மானத்தை இலங்கையின் வட மாகாணசபை ஏகமனதாக நிறைவேற்றியிருப்பது, இலங்கை ஜனாதிபதிக்கு ஒரு பெரிய அவமானம்.

இதுவரை சர்வதேச விசாரணையை நிறுவும்படி கோரும் அழைப்புகள் சர்வதேச தொண்டு நிறுவனங்கள், மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் போன்ற புலம்பெயர் அமைப்புகள் என்பனவற்றிடம் இருந்துதான் விடுக்கப்பட்டு வந்துள்ளன. இதுதான் முதல் தடவையாக இலங்கைக்குள் இருக்கும் தமிழர்கள், தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஊடாக அப்படியான ஒரு விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளார்கள்".

(யுஎஸ்பொலிட்டிக்ஸ்.ஈஜஎன்நியுஸ்.கொம்)

எனவே வடக்கு தமிழ் மாகாண-சபை அங்கத்தவர்கள், வடக்கு மாகாணசபைக்கான முதலாவது மாகாணத் தேர்தலை நடத்திய ஜனாதிபதிக்கு பெரிய அவமானத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். பாரிய இராணுவ பிரசன்னம் இருந்த ஒரு மாகாணத்தில், தேர்தல் போதியளவு சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெற்றதன் காரணமாக எதிர்க்கட்சியை சேர்ந்த தமிழ் தேசியவாதிகளுக்கு பெரிய வெற்றியை பெறமுடிந்தது. சக்திமிக்க பாதுகாப்புச் செயலாளரான ஜனாதிபதியின் சகோதரரிடமிருந்து பகிரங்கமான எதிர்ப்பு வெளியானபோதிலும் சிங்கள பௌத்த கடும்போக்காளர்களின் வீதி எதிர்ப்பு போராட்டங்கள் எதுவுமின்றி ஜனாதி-பதியினால் வடக்கு மாகாணசபையை வெற்றிகரமாக அமைக்க இயலுமாக இருந்தது.

உண்மையில் எல்.ரீ.ரீ.ஈ.யை தோற்கடிப்பதற்கு தலைமை தாங்கியவர் ஜனாதி-பதி ராஜபக்ஷ, - இதற்காக ரி.என்.ஏ தீவிரவாதிகள் அவரை ஒருபோதும் மன்னிக்கப் போவதில்லை. இந்த ரி.என்.ஏ அரசியல்வாதிகள் யுத்தத்தை அதன் கொடிய இறுதிக் கட்டத்தில் முன்னின்று நடத்திய இராணுவத் தளபதிக்கு வாக்களித்துவிட்டு, அப்போது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களுக்காக சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுப்பதை பார்க்கும்போது சிறிது வேடிக்கையாகவும் இருக்கிறது.

ஐரிஸ் குடியரசின் சின்பெயின் அங்கு குழப்பங்கள் நடந்தபோது பிரித்தானிய துருப்புகள் மற்றும் அதிகாரிகள் இழைத்த குற்றங்களுக்காக ஒருபோதும் ஒரு சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுக்காததுக்கு ஒரு காரணம் இருந்தது. வட மாகாண சபையின் தீர்மானம் அந்தச் சபையை நிறுவுவதற்கான பாதையை திறந்துவிட்ட ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்துவதாக மற்றும் ஊக்கப்படுத்துவதாக இல்லை. அது ஆளும் கூட்டணிக்குள் இருக்கும் அதிகாரப் பரவலாக்கத்துக்கு சார்பான முற்போக்குவாதிகளையும் பலவீனப்படுத்துவதாக உள்ளது, அவிர்கள் 13ஆவது திருத்தத்தை பாதுகாப்பதற்காக பெரும்பான்மை பேரினவாதிகளுடன் வெற்றிகரமாகப் போராடி தேர்தல்களை நடைபெறச் செய்தார்கள்.

மறுபக்கத்தில் வட மாகாணசபையின் தீர்மானம் மாகாணசபை முறையை எதிர்ப்பதுடன் அதை நீக்கவேண்டும் என்றும் போராடும் முக்கிய சிங்கள கடும்போக்குவாதிகளின் கோரிக்கைக்கு வலுச் சேர்ப்பதாகவும் அமைகிறது. அதிகாரப் பகிர்வு மேலும் விரிவடையக்கூடாது, மற்றும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது ஆபத்தானது என்கிற அவர்களின் வாதத்தையும் அது பலப்படுத்துகிறது. வட மாகாண-சபையின் தீவிரவாதத் தீர்மானத்தின் பின்னர் இத்தகைய சாகசத் தன்மை கொண்ட மாகாணசபைக்கு மேலும் அதிகாரங்களை பரவலாக்குவதற்கு முரட்டுத் தன்மையான விவாதங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும், - சிங்கள சொல்வழக்கின்படி குரங்கின் கையில் நேராக ஒரு சவரக்கத்தியை கொடுப்பதற்கு ஒப்பானதாக இருக்கும்.

இது ரி.என்.ஏயினை நடைமுறைக்கேற்ற ஒரு சமாதானப் பங்காளியாக கருதுவது மிகவும் கடினமானது மற்றும் ஜனநாயக நீரோட்டத்தில் வடமாகாண சபையை ஒருங்கிணைப்பது போன்றவை கடினமானது என்பதைக் காட்டுகின்றன.

கட்சி அரசியல் அனுதாபங்களைக் கடந்து இந்தப் பிரேரணை பெரும்பாலான. சிங்களவர்கள் மத்தியில் நிச்சயமாக கடுமையான எண்ணங்களை தோற்றுவிப்பதுடன் அதிகாரப் பகிர்வுக்கான அதிக அனுதாபங்கள் ஏற்படுவதுக்குப் பதிலாக அதைக் குறைவடையச் செய்யும். வடமாகாண-சபைத் தீர்மானத்தின் எதிரொலியாக உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கை ஒன்று திரு. சம்பந்தன் அவர்களால், கையொப்பமிட்டு வெளியிடப்பட்டுள்ளது. அது தெரிவிப்பது என்னவென்றால், 2014,ஜனவரி 26இல் திருகோண-மலை நகர மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள், இதில் ஏனைய விடயங்களுக்கு மத்தியில் "ஒரு ....சர்வதேச விசாரணை மிகவும் முக்கியம்" என ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(கொழும்புடெலிகிராப்.கொம்)

வட மாகாணசபை தீர்மானம் மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் அறிக்கை என்பன, வெளிப்படுத்தியுள்ள ரி.என்.ஏ கதிரியக்கம் தெற்கின் எதிர்க்கட்சி ஏதாவது ரி.என்.ஏ உடன் கூட்டு வைத்திருந்தும் அதன் சொல்லாட்சியை கட்டுப்படுத்த தவறியுள்ளதனால் சிங்கள வாக்காளர்களால் தண்டிக்கப்படப் போகிறது என்பதையே காட்டுகிறது.

இதன்படி ரி.என்.ஏ மற்றும் வடமாகாண சபை என்பன ஜெனிவாவின் உணர்வு பூர்வமான ஓட்டத்தில் நிற்பதற்காக எடுத்துள்ள முடிவினால் தென் பகுதியில் உள்ள ஜனநாயக மற்றும் மிதவாதிகள் மத்தியிலுள்ள அதன் முக்கிய பங்காளிகளுக்கு குழி பறித்துள்ளது. தீவு முழுவதையும் ஒரு முழு அமைப்பாக எடுத்தால் அதிகாரப் பகிர்வுக்கு சார்பாகவுள்ள அரசியலமைப்பு, ரி.என்.ஏ - வட மாகாண சபைத் தேர்தல் மற்றும் அதற்குப் பின்னான சொல்லாட்சி காரணமாக விரிவடைதற்குப் பதிலாக சுருங்கிப் போயுள்ளது.

வடமாகாணசபை தீர்மானத்தைமிதவாத அடிப்படையின் எந்த உணர்விலும் விளக்க முடியாது. மிதவாத நடத்தையுள்ள ஒரு அரசியல் கட்சியின் அரசியல் நடத்தை இதுவல்ல.

வடமாகாணசபை - ரி.என்.ஏ என்பன இலங்கை ஒரு அரசாங்கம், ஒரு நாடு என்றவகையில் அதற்கு எதிரான தேசிய விரோத செயல்களில் ஈடுபடுவது அதிகரித்து வருவதைப் போல தோன்றுகிறது. பாதுகாப்பானதும் மற்றும் நிலையான சமாதானம் கடந்த வாரம் வட மாகாணசபை தீர்மானம் நிறைவேற்றியபின் முன்பிருந்ததை விட இன்னும் அதிக தூரம் சென்றுவிட்டது.

**வடக்கு தமிழ் மாகாணசபை அங்கத்தவர்கள், வடக்கு மாகாணசபைக்கான முதலாவது மாகாணத் தேர்தலை நடத்திய ஜனாதிபதிக்கு பெரிய அவமானத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். பாரிய இராணுவ பிரசன்னம் இருந்த ஒரு மாகாணத்தில், தேர்தல் போதியளவு சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெற்றதன் காரணமாக எதிர்க்கட்சியை சேர்ந்த தமிழ் தேசியவாதிகளுக்கு தேர்தலில் பெரிய வெற்றியை பெறமுடிந்தது. சக்திமிக்க பாதுகாப்புச் செயலாளரான ஜனாதிபதியின் சகோதரரிடமிருந்து பகிரங்கமான எதிர்ப்பு வெளியானபோதிலும் சிங்கள பௌத்த கடும்போக்காளர்களின் வீதி எதிர்ப்பு போராட்டங்கள் எதுவுமின்றி ஜனாதிபதியினால் வடக்கு மாகாண சபையை வெற்றிகரமாக அமைக்க இயலுமாக இருந்தது. வட மாகாணசபையின் தீர்மானம் அந்தச் சபையை நிறுவுவதற்கான பாதையை திறந்துவிட்ட ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்துவதாக மற்றும் ஊக்கப்படுத்துவதாக இல்லை. அது ஆளும் கூட்டணிக்குள் இருக்கும் அதிகாரப் பரவலாக்கத்துக்கு சார்பான முற்போக்கு வாதிகளையும் பலவீனப்படுத்துவதாக உள்ளது, அவர்கள் 13ஆவது திருத்தத்தை பாதுகாப்பதற்காக பெரும்பான்மை பேரினவாதிகளுடன் வெற்றிகரமாகப் போராடி தேர்தல்களை நடைபெறச் செய்தார்கள்.**

# இலங்கை அகதிகளின் வருகையில் சரிவு அவுஸ்ரேலியாவுக்கு இப்போது திருப்தி



(மெல்பேர்ன்)

இலங்கையிலிருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை க்ணிசமான அளவு குறைவடைந்திருப்பதாக அவுஸ்ரேலிய பிரதமர டோனி அபட் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அரசாங்கம் படகு மூலம் வருபவர்களில் தங்களது வழக்குகள் யாவும் தோல்வி அடைந்தவர்களையும் அவுஸ்ரேலிய சட்டத்தை மீறி செயல்பட்டவர்களையும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக கணிக்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள்தான் தமது சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுள்ளனர் என பிரதமர் டோனி அபட் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 50 நாட்களில் அகதிகளுடன் எந்த ஒரு படகும் அவுஸ்திரேலியா நோக்கிப் பயணிக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தமது அரசாங்கம் அமுலாக்கியுள்ள புதிய அகதிக் கொள்கைக்கு கிடைத்த வெற்றி எனத் தெரிவித்துள்ளார்.

# வீட்டுத்தொகுதி துஷ்ப்பிரயோகம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்பட்டுள்ள மாதியவெல நாடாளுமன்ற வீட்டுத்தொகுதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த வீட்டுத் தொகுதியை பெரும்பாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களை தவிர்ந்த வெளியாரே பயன்படுத்தி வருவதாக குற்றஞ் சுமத்தப்பட்டு வருகிறது.

நாடாளுமன்ற செயலாளர் நெய்ல் இடாவெல்ல, இது குறித்து கவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக புதிய வீட்டுத் தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# தேசிய பாதுகாப்பு இரகசியங்களை வெளிநாடுகளுடன் பகிர்ந்துகொள்வதா ?

## வடக்கு மாகாணசபை மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு தொடர்பான தகவல்களை வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் வடக்கு மாகாண சபை பகிர்ந்து கொள்கின்றதா? என்ற தோரணையில் மேற்படி மாகாண நிர்வாகம் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசு ஆலோசித்து வருவதாக சிங்களப் பத்திரிகையான திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி காரணத்துக்காக மத்திய அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக சிங்களப் பத்திரிகையான 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை அரசியலமைப்புச் சட்டத்தை மீறிச் செயற்பட்டது, தேசிய பாதுகாப்பு தொடர்பான தகவல்களை வெளி நாடுகளுக்குப் பகிர்ந்து கொள்வது, வெளிநாட்டு இராணுவத்துடன் சேர்ந்து திட்டங்களை முன்னெடுப்பது போன்றவற்றால், மத்திய அரசு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதன் காரணமாகவே இந்த நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் திவயின தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வடமாகாண ஆளுநர் சந்திரசிறியிடம் இருந்து முழுமையான அறிக்கை ஒன்றை அரசாங்கம் கோரியுள்ளது. அமெரிக்க இராணுவத்தினருடன் வட மாகாண கல்வியமைச்சர் கலந்துரையாடியமை குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. வடமாகாண பாடசாலைகளில் தேசிய கீதம் தமிழ் மொழியில் இசைக்கப்படுவது, தேசியக்கொடியை ஏற்றுவதற்கு மறுத்தமை, உட்பட பல்வேறு ,விடயங்கள் தொடர்பாக, மத்திய அரசு கவனம் செலுத்தியதையடுத்தே இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் திவயின மேலும் தெரிவித்துள்ளது.

# வேட்பாளர்களுக்கு விருப்பு எண்கள்

## நாளை முதல் வழங்கப்படும்

(கொழும்பு)


தென் மற்றும் மேல் மாகாண சபை தேர்தல் வேட்பாளர்களது விருப்பு எண் நாளை முதல் வழங்கப்படும் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இம்முறை இடம்பெறவுள்ள தென் மற்றும் மேல் மாகாண சபைக்கு வேட்பு மனுத் தாக்கல் கடந்த 6ஆம் திகதியுடன் நிறைவடைந்தன.

இந்நிலையில் வேட்பாளர்களுக்கான விருப்பு எண் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

# இந்தியாவின் நுழைவாயில் வீசா இலங்கைக்கு மறுக்கப்பட்டது ஏன்?

## பதிலடிக்கு கொழும்பு தயார்



(கொழும்பு)

வருகைக்கு பின் வீசா வழங்கும் இந்தியாவின் புதிய பட்டியலில் இலங்கை அரசு இடம் பெறாமை குறித்து இலங்கை அரசு தமது கவலையை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வெளியுறவு அமைச்சு இது தொடர்பில் இந்தியாவிடம் விளக்கம் கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது.

இந்தியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் விளக்கம் கோரவுள்ளதாக வெளியுறவு அமைச்சின் பொதுமக்கள் தொடர்பாடல் பணிப்பாளர் ரொட்னி பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டமைக்கான காரணத்தை இந்திய அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.


இலங்கையுடன் பாகிஸ்தான், சூடான், ஆப்கானிஸ்தான், ஈராக் ,ஈரான் போன்ற நாடுகளுக்கும் இந்தியாவின் வருகைக்கு பின்னர் வ்சா வசதி பட்டியலில் இடம் வழங்கப்படவில்லை.

பாதுகாப்பு காரணங்களை மையமாகக் கொண்டே இந்த வருகைக்கு பின் வீசா வசதி பட்டியலில் இருந்து சில நாடுகள் நீக்கப்பட்டதாக இந்திய அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இலங்கை குறித்த பாதுகாப்பு அச்சம் குறித்து அந்தத் தரப்பு உரிய தகவல்களை தரவில்லை.

இதேவேளை இந்தியாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இலங்கைக்கு வந்தபின்னர் இந்தியர்களுக்கு வழங்கப்படும் வீசா வசதிகளை நீக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஹிருணிக்காவுக்கு மாகாண அமைச்சர் பதவி அரச உயர் மட்டத்தில் ஆராய்வு

(கொழும்பு)



மேல் மாகாணசபை தேர்தலின் பின்னர் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவை மாகாண அமைச்சராக நியமிக்க ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆலோசனை மேற்கொண்டு வருகிறது

அரசாங்க கட்சி அமைச்சர்கள் மத்தியில் இது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் அவர் ஏற்கனவே கட்சியின் இணை அமைப்பாளராக செயற்படுகிறார்.

இந்தநிலையில் அவரின் திறமைகளை கருத்திற்கொண்டு மாகாண அமைச்சை அவருக்கு வழங்கலாம் என்று அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, மைத்திரிபால, சாலிந்த திஸாநாயக்க ஆகியோர் இந்தக் கூட்டத்தின் போது குறிப்பிட்டனர்.

இதேவேளை மேல் மாகாண சபை தேர்தலில் ஹிருணிக்காவின் வெற்றிக்காக அனைத்து அமைச்சர்களும் தமது ஆதரவை தரவேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கேட்டுக் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் பொலிஸ் அதிகாரிகள் கோடீஸ்வரர்கள் ஆனது எப்படி

## விசாரணைகள் ஆரம்பம்

பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றும் கோடீஸ்வரர்களை தேடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் திணைக்களத்தில் இணைந்து கொண்டு குறுகிய காலத்தில் கோடீஸ்வரர்களாக மாறிய நபர்கள் தொடர்பில் இப்போது விசாரணை நடத்தப்பட்வுள்ளது.

வருமானத்தை விடவும் அதிகளவில் சொத்துக்கள் எவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ளன என்பது குறித்தே விசாரணை நடத்தப்படவுள்ளது. பொலிஸ் பரிசோதகர்கள், சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் உள்ளிட்டவர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பாரிய சொகுசு வீடுகள், ஹைபைரைட் ரக வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆடம்பர வசதிகளுடன் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. புறக்கோட்டை, கோட்டை, மாளிகாவத்தை உள்ளிட்ட கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கடமையாற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகள் பாரிய சொத்துக்களை குவித்துக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடாத்தப் படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# நடிகைகள் அரசியலில் குதிப்பது தவறு என்று யார் சொன்னது?

## கொதிக்கிறார் அனார்கலி



(கொழும்பு)

சட்டத்தரணிகள், வைத்தியர்கள், ஆசிரியர்கள் எனக் கல்விமான்களுக்கு மட்டும் தானா அரசியல் சொந்தமானது? வர்த்தகர்கள், தொழில் எதுவுமே இல்லாதவர்கள், எட்டாம் வகுப்பு சித்தியடையாதவர்கள் என எத்தனையோ பேர் இன்று உலகில் அரசியலில உள்ளார்கள்.

அவ்வாறிருக்க நடிகர்கள், நடிகைகள் தேர்தலில் போட்டியிடக் கூடாது எனும் சட்டம் உள்ளதா? என தென்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான அனார்க்கலி கேள்வியெழுப்பியுள்ளார்.

நடிகர், நடிகைகளாலும் அரசியலில் சாதித்துக் காட்ட முடியும் என்பதை கடந்த தென் மாகாண சபையில் நிரூபித்துக் காட்டியவள் நான். நடிகர், நடிகைகள் என்றால் கல்வியறிவில்லாதவர்கள் எனும் தவறான எண்ணம் சிலர் மனதில் உள்ளது. அது தவறு. நான் பட்டப்படிப்பை மேற்கொண்டவள்.

எனது கல்வித் தகைமையை வெளிக் காட்டினால் பலர் ஆச்சரியப்ப டுவர். நடிப்பு என்பது நான் விரும்பித் தேர்ந்தெடுத்த எனது கலைத்துறை சம்பந்தப்பட்டது. இனிமேலும் நடிகர், நடிகை அரசியலுக்கு வருவதைக் குறைவான கண்ணோட்டத்தில் எவரும் பார்க்கக் கூடாது எனவும் அனார்கலி கேட்டுக் கொண்டார்.

தென்மாகாணத்தில் கடந்த காலத்தில் நான் மேற்கொண்ட வேலைத் திட்டங்களை அப்பகுதி மக்கள் நன்கறிவர். அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவே நான் அரசியலில் ஈடுபட விரும்புகிறேன்.

எனக்குப் பெயரும், புகழும் தேவையில்லை. அது என்னிடம் கலைத்துறை மூலமாகத் தாராளமாகவே உள்ளது. அரசியல் மூலம்தான் அதைத் தேட வேண்டும் எனும் தேவை எனக்கு இல்லை எனவும் அனார்கலி தெரிவித்தார்.

# சுயசிந்தனை ஆற்றலை வளர்ப்பதற்கு காந்தீய சிந்தனையே அடித்தளமாகும்

## மூத்தகாந்தீயவாதி தம்பிப்பிள்ளை

(கிளிநொச்சி)

மக்கள் சுயசிந்தனை பெறுவதற்கு காந்த்ய சிந்தனை தான் முக்கியமானது. காந்தீயத்தை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் மூத்த காந்தீயவாதி சோ.க. தம்பிப்பிள்ளை தெரிவித்தார்.

கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி சிறுவர் இல்லத்தில் அண்மையில் நடைபெற்ற மகாத்மா காந்தியடிகளின் 66ஆவது சிரார்த்தனதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

காந்தி இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது காற்றின் வேகத்தில் தனது பிரசாரத்தை இந்தியா முழுவதும் செய்தார். அவ்வாறு அவரின் கருத்துக்கள் வேகமாகப் பரவியதற்கு அவரின் செயல்களில் உண்மை மற்றும் சத்தியம் இருந்ததே காரணமாகும்.

இந்தியமக்கள் அந்நியருக்கு அடிமைப்பட்டு சுதந்திரம் இல்லாது வாழ்ந்துவந்தார்கள். மக்களைப் போராட்டத்திற்கு ஆயத்தப்படுத்துவதற்கு முதலில் மகாத்மா தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டார். அந்நியத்துணி எதிர்ப்பைக் காட்டுவதற்கு முதல் கைராட்டினம் மூலம் நெசவுசெய்து உடைத்தேவையை பூர்த்தி செய்து கொள்ளமுடியுமென மக்களிடத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தினார். இவ்வாறு தான் அவர் மக்களீடத்தில் மாற்றத்தை உருவாக்கினார். தான் ஆங்கிலேயர் பாணியில் உடையணிந்து கொண்டு சுதந்திரம் பெற்றுவிட முடியாது என நினைத்து ஏழை மக்களின் உடையைத் தானும் ஏற்றுக்கொண்டார்.

இந்த தாட்டில் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இதற்கு ஒரு பொறிமுறை அவசியம் என்பதை உணர்ந்த எமது சங்கம் தென்னிலங்கையில் உள்ள சர்வோதயத்துடன் இணைந்து சிரமதான வேலைத்திட்டத்தில் ஈடுபட்டது.

காந்தியின் கொள்கை மூலம் தான் எமது பிரச்சினை தீரமுடியும். புதிய சிந்தனை நிச்சியம் ஏற்படவேண்டும் என்றார்.

# மாகாணமட்டத்தில் முதலாமிடம்

(முழங்காவில்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி ஞானிமடம் அ.த.க. பாடசாலையில் தரம் 9 இல் கல்வி பயிலும் சதீஸ்கரன் சயிந்தா என்ற மாணவி சமூக விஞ்ஞானப் போட்டியில் மாகாணமட்ட போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.



இம்மாணவியின் சாதனையை இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தினர் பாராட்டியுள்ளனர். (112)

# இளைஞர் சேவைகள் மன்றத்தால் சுன்னாகத்தில் பார்த்தீனிய ஒழிப்பு

(சுன்னாகம்)

சுன்னாகம் இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் காலை பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கை சுன்னாகம் வயல் மற்றும் தோட்ட வெளிகளில் மேற்கொள்ளப்பட்டது. சுன்னாகம் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளைத் தொடர்ந்து பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கை இடம் பெற்றது.




கிராமஅலுவலர் பா.பாலபத்மன், சமுர்த்தி அலுவலர் திருமதி பாஸ்கரன், உடுவில் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர் எஸ்.அனுசன், நல்லூர் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர் இ.யுவராஜ் உட்பட மற்றும் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் தெற்கு தைலங்கடவை ஞானவைரவர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேக தின சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

# கைகளின் அசைவுகளில் வெளிப்படும் உண்மைகள்

## வணங்கா முடியர்கள்

சிலர் அடிக்கடி தங்கள் இடக்கையை மட்டும் இடுப்பில் வைத்த படி காணப்படுவார்கள். இப்படிப்பட்டவர்கள் எப்பொழுதுமே ஒருவருக்கு கீழ்ப்படிந்து வேலை செய்யவோ, அதிகாரத்திற்கு அடங்கி இருக்கவோ விரும்பமாட்டார்கள். தான் பிடித்த முயலுக்கு மூன்று தான் கால் என்பதே இவர்களின் சித்தாந்தம். மற்றவர்களை அடக்கி ஆள்வதற்கே முயல்வார்கள். "சுவர்க்கத்தில் வாழ்ந்து கொண்டு அங்கு கடவுளுக்கு அடிமையாக சேவகம் செய்வதை விட நரகத்துக்கச் சென்று அங்கே அரசனாக இருப்பதையே நான் விரும்புகின்றேன் என்றானாம் சாத்தான்" இடக்கையை இடுப்பில் வைத்திருப்பவர்கள் இந்த சாத்தானைப் போல் சுதந்திரமனப்பான்மை கொண்டவர்களாக இருப்பவர்கள். ஆனால் நன்மையின் விரோதியான சாத்தானைப்போல பிறருக்குத் தீயவர்களாக இருக்கமாட்டார்கள். இத்தகையோரின் சுதந்திரவேட்கை மனப்பாங்கு சில சமயங்களில் முன்னேற்றத்திற்கு பின்னடைவாக, முட்டுக்கட்டையாக, தடையாக இருந்து விடலாம் இவர்கள் எதற்கும் துணிந்தவர்களாக அஞ்சாதவராக எவரையும் பொருட்படுத்தாத ஒரு முற்றுந்துறந்த ஞானியாக விளங்கத் தலைப்பட்டு விடுவர். பயபக்தியுடன் இவருடன் பழகிவிடின் உதவிகள் தாராளமாககிட்டிவிடும்.

(தொடரும்)

ஜோதிர் வித்யா ரத்னா
V.A.சிவராசா,
[B.A.B.Phil.Dip - in -Ed]

# முச்சக்கரவண்டிச் சங்கத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா

(சுன்னாகம்)

சுன்னாகம் முச்சக்கர வண்டிச் சங்கத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுன்னாகம் சந்தை தெற்கு வீதியில் இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் சி.பிரதீபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.தெற்கு பிரதேச தவிசாளர் ரி.பிரகாஸ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் ஆர்.மனோகராஜா, சங்கச் செயலாளர் எம்.தர்மகுலராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி சு.முருகநேசன், வலி.தெற்கு பிரதேசசபை உப அலுவலக பொறுப்பதிகாரி ந.கணேந்திரன் சுன்னாகம் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி ஏம்.எம்.நயனகுமார ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். தொடர்ந்து இந்நிகழ்வில் வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைப்பார். பெயர்ப்பலகையை சங்கத் தலைவர் திரைநீக்கம் செய்துவைப்பார்.

(எஸ்.பி)

# பொதுக்கூட்டம்

(முழங்காவில்)

கரைச்சி பிரதேச அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிதியத்தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கரைச்சி உதவித் திட்டப்பணிப்பாளர் ச.பி.அமலராஜ், கரைச்சி கணக்காளர் ப.லுரேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் நிதியத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் இடம பெறவுள்ளது. (112)

# முரசின் இன்றைய பலன்

(10.02.2014 திங்கட்கிழமை)



விஜய வருஷம் தை மாதம் 28 ஆம் திகதி.
ஏகாதசி / அமிர்தசித்தம். மிருகசீரிட நட்சத்திரம் பி.ப. 4.06 வரை.
பின் திருவாதிரை.
இராகு காலம் 08.04 - 09.34 வரை. சுபநேரம் 12.34 - 02.04 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | ஆவணங்கள் இன்றி வாகனம் ஓட்டிச் சென்றதால் தண்டம் பெறல், காரியசித்தியை ஏற்படுத்தக் கூடிய நபரிடம் பொறுப்பினை ஒப்படைத்தல். |
| ரிஷபம் | திருட்டில் ஈடுபட்டமை கையும் களவுமாக பிடிக்கப்பட்ட நிலையில் மன்னிப்புக் கோரியதால் விடுவிக்கப்படல், பொறுமை, விவேகம் தக்க வைத்ததால் தேங்கியவை முடித்து வைத்தல். |
| மிதுனம் | மோசடி செய்தமை கண்டுபிடிக்கப்பட்டு விசாரணையின் பின் பதவிபறிபோகும் நிலை, கைநழுவிச் சென்றது பகீரதப்பிரயத்தனத்தினால் மீண்டும் கிடைத்தல். |
| கடகம் | தண்டம் செலுத்த முடியாமையினால் சமூகம் சார் பணிகளில் ஈடுபட்டு வர முஸ்தீபு, வெற்றியைத் தேடுவதை விடுத்து எதிர்ப்பினை இல்லாமல் செய்ய முயலுக. |
| சிம்மம் | பிரிவினைத்துயரினால் தனிமை வாட்டுவதினால் கவலை, மனோதிடம், தைரியம், துணிச்சலினால் வந்த துன்பம் விலகச் செய்தல். |
| கன்னி | இன்பத்திலும் துன்பவேளையிலும் மனம் கோணாமல் துணைவருக்கு உதவிடல், பணத்தையும், நாணயத்தையும் சிதறிப்போக விட்டுவிடாதீர்கள். |
| துலாம் | வெளிநாட்டுத்திருமணத்திற்காக ஐரோப்பிய மொழியொன்று கற்க ஆர்வம்மேலிடல், நாட்பட்ட உடல் உபாதைகள் குறைவடைந்து தேகநலம் மேம்படல். |
| விருச்சிகம் | விரயச் சனீஸ்வரனால் புதிய நிகழ்வுகளுக்கு பணச்செலவு ஏற்படும், பலரும் உங்களை வரவழைத்து மதிப்பும் மரியாதையும் செய்து விடுவர். |
| தனுசு | செய்த நன்றியை மறந்து அடாவழித்தனத்தில் ஈடுபட்டதால் பதகளிப்பு, கண்டிக்க வெளிக்கிட்டதால் குடும்பத்தில் கவின் நிலை அற்றுப்போதல். |
| மகரம் | விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பித்துச் செல்ல முயன்றவரை கலைத்துப் பிடித்கும் நிலை, நீண்ட நாட்களாக இழுபட்டு வந்த நிகழ்வு வெற்றியைத் தக்கவைத்தல். |
| கும்பம் | நிகழ்வுகளில் தம்பதிகள் சகிதம் பங்குகொண்டு சிறப்பிக்கச் செல்லல், காலாவதியான திகதியில் மாற்றம் செய்தமை கண்டு பிடிக்கப்பட்டதால் தண்டம். |
| மீனம் | ஏற்பாடாகியிருந்த நிகழ்வு துக்க சம்பவத்தினால் பிற்போடும் நிலைப்பாடு, மனோதிடம், உறுதி, உதிர் கொள்ளும் பக்குவம் இருந்ததால் காரியசித்தி. |

# போராடி வென்றது நியூசிலாந்து



இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி த்ரில் வெற்றிபெற்றது.

நியூசிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்று நியூசிலாந்தின் ஒக்லாண்டில் நிறைவடைந்தது.

முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி 503 ஓட்டங்களையும், இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக 202 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி 105 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இந்நிலையில் 407 என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இந்திய அணி மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, ஒரு விக்கெட்டை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தின் இரண்டாவது இனிங்ஸை இந்திய அணி தொடர்ந்தது. தவான், புஜாரா இணை நிதானமாக ஆட முற்பட்டது. ஆனால் ஒரு ஓட்டத்தைச் சேர்ந்த வேளை புஜாரா ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ஹோலி, தவானுடன் இணைந்த அணியின் ஓட்ட வேகத்தை அதிகரித்தார். இந்த ஜோடி நியூசிலாந்து பந்து வீச்சாளர்களின் பந்துகளை நாலாபுறமும் பவுண்டரிக்குப் பறக்கவிட்டு அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தது. இந்த ஜோடியின் ஆட்டம் நியூசிலாந்து அணியின் வெற்றிக் கனவைச் சிதைக்கும் விதமாக அமைந்திருந்தது.சிறப்பாக ஆடிய தவான் சதமடித்து அசத்த ஹோலி அசைச் சதத்தை எட்டினார். இருப்பினும் இந்த ஜோடி 126 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை (ஹோலி) நெய்ல் வேக்னரினால் பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒரு சீரான இடைவெளியில் தவான், ரோகித் சர்மா, ரஹானே ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்து அணியை நெருக்கடிக்கு உள்ளாக்கினர். இந்நிலையில், ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் டோனி, ஜடேஜா இணை அதிரடியாக ஆடி ஓட்டங்களைக்குவித்தது.அணியை நெருக்கடியிலிருந்து மீட்ட இந்த ஜோடி நியூசிலாந்து பந்து வீச்சாளர்களை புரட்டியெடுத்து, அணியின் வெற்றி வாய்ப்புக்கான ஒளியைப் பிரகாசப்படுத்தியது.நியூசிலாந்து அணியின் வெற்றி வாய்ப்பு கைமீறிப் போகும் நிலையில் போல்ட் ஆட்டத்தின் போக்கில் திருப்புமுனையை ஏற்படுத்தினார். ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த ஜடேஜாவின் விக்கெட்டைச் சாய்த்து அணிக்கு உத்வேகத்தை போல்ட் ஏற்படுத்தினர். 54 ஓட்டங்களைப் பெற்ற வேளை இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய சகீர்கான் சிறிது நேரம் தாக்குப்பிடித்து டோனிக்கு ஒத்துழைப்பு வழங்கினார். இந்த ஜோடி 25 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இதன் பின்னர் பொறுமையை இழந்து விளாசமுற்பட்ட கப்டன் டோனி நியூசிலாந்து அணியின் பொறியில் சிக்கிப் பலியானார். இதன் பின் களமிறங்கியஇசாந்த் சர்மா வந்தவேகத்தில் வெளியேற நியூசிலாந்து அணியின் வெற்றி உறுதி செய்யப்பட்டது. இறுதியில் இந்திய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 366 ஓட்டங்களைப் பெற்று 40 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் தவான் 211 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 12 பவுண்டரிகள் அடங்கலாக 115, ஹோலி 102 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள் அடங்கலாக 67,டோனி 41 பந்துகளில் 39, ஜடேஜா 21 பந்துகளில் 26, சகீர்கன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் போல்ட், ரிம் சௌத்தி ஆகியோர் தலா மூன்று, நெய்ல் வேக்னர் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக இரட்டைச் சதம் விளாசிய நியூசிலாந்து அணிக் கப்டன் மக்கலம் தெரிவானார்.

## முதல் இனிங்ஸ் சொதப்பல் தோல்விக்குக் காரணம்

(ஒக்லாண்ட்)

முதல் இனிங்ஸில் சொதப்பியதே முதல் டெஸ்ட் தோல்விக்கு அடிப்படையாக அமைந்துவிட்டது என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

பந்து வீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. இந்திய பந்து வீச்சாளர்கள் இப்படி ஒரு சிறப்பான பந்து வீச்சை நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை. விக்கெட்டுக்கு நேராக நேர்த்தியுடன் வந்து வீசினார்கள். தொடர்ந்து இது மாதிரி அவர்கள் பந்துவீசுவது அவசியமாகிறது.

முதல் இனிங்ஸில் எங்களது துடுப்பாட்டம் நன்றாக அமையவில்லை. மோசமானதாக இருந்தது. 2ஆவது இனிங்ஸில் எங்களது துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடினர்.

சில ஆட்டமிழப்புகள் துரதிரஷ்டவசமானது. இதில் ரகானேக்கு கொடுக்கீப்பட்ட எல்.பி.டபிள்யூ முடிவு துரதிஷ்டவசமானது. முக்கியமான கட்டத்தில் இந்த ஆட்டமிழப்புக் கொடுக்கப்பட்டது போட்டியின் திருப்புமுனையாக அமைந்துவிட்டது. எங்களுக்குப் பாதகமாகவும், நியூசிலாந்து அணிக்குச் சாதகமாகவும் இது அமைந்துவிட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெற்றி குறித்து கருத்துத் தெரிவித்த நியூசிலாந்துக் கப்டன் மக்கலம், ஒரு கட்டத்தில் தோல்வி ஏற்பட்டுவிடுமோ? என்ற பதற்றம் இருந்தது. வோக்னர் சிறப்பாக பந்து வீச்சினார். எனது ஆட்டம் சிறந்த ஒன்றாகும். இந்தியாவுக்கு எதிராக டெஸ்டில் வெற்றி பெற்றது சாதாரண சாதனை அல்ல எனத் தெரிவித்தார்.



## அமெரிக்காவுக்கு முதல் தங்கம்

(சோச்சி)

குளிர்கால ஒலிம்பிக்கின் முதல் தங்கப்பதக்கத்தை அமெரிக்க வீரர் சேஜ் கோட்சென்பர்க் தட்டிச்சென்றார்.

ரஷ்யாவின் சோச்சி நகரில் 22ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடைபெற்று வருகின்றது. 88 நாடுகளைச் சேர்ந்த 2,800இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். ஏராளமான பொருட் செலவில் ஆரம்ப விழா முடிந்து நேற்று முன்தினம் முதல் போட்டிகள் நடைபெறுகின்றன. ஸ்னோபோர்ட் போட்டியில் ஆண்கள் ஸ்லோப்ஸ்டைல் பிரிவில் அமெரிக்காவின் 20 வயது வீரர் சேஜ் கோட்சென்பர்க், முதல் தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட கனடாவின் மாக்ஸ் பாரட், மார்க் மெக்மோரிஸ் என, இருவரும் தடுமாறிவிட்டனர். இது கோட்சென்பெர்க் தங்கம் வெல்ல வசதியாகி விட்டது. இப்போட்டியில் நோர்வேயின் சாண்ட்பக் வெள்ளி வென்றார். கனடாவின் மெக்மோரிசிற்கு வெண்கலம் கிடைத்தது.

## பீற்றர்சன் மட்டும் பலிக்கடாவா?

(லண்டன்)

ஆஷஸ் டெஸ்ட் தோல்விக்கு பீற்றர்சனை பலிக்கடா ஆக்குவதாஎன இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் பிளிண்டொப் கேள்வி எழுப்பியுள்ளார். அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரில் 5-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி தோல்வியடைந்தது.

இதனைத் தொடர்ந்து அணியை வலுப்படுத்தும் நடவடிக்கை என்ற பெயரில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் இருந்து முன்னணி அதிரடி வீரர் கெவின் பீற்றர்சன் நிரந்தரமாக நீக்கப்பட்டுள்ளார்.

இவர் நீக்கப்பட்டது குறித்து பல்வேறு விவாதங்கள் எழுந்துள்ளன. முன்னாள் வீரர் பிளிண்டொப் கூறுகையில், ஆஷஸ் தொடரின் தோல்விக்கு பீற்றர்சன் பலிக்கடா ஆக்கப்பட்டுவிட்டார். இது போன்ற முடிவுகள் தவறானது, தனிப்பட்ட வீரர் மீது இதுபோன்று நடவடிக்கை எடுப்பது அணியின் உத்வேகத்தை சிதைத்துவிடும் எனத் தெரிவித்துள்ளார்.

## சவாலான தொடர்

(செஞ்சூரியன்)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் சவால் நிறைந்தது என அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நாளை மறுதினம் செஞ்சூரியனில் நடைபெறவுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்த ஜோன்சன், ஆஷஸ் தொடரில் அணியின் வெற்றிக்குப் பக்கபலமாக இருந்தது போன்று இந்தத் தொடரிலும் அணியின் வெற்றிக்குப் பக்கபலமாகச் செயற்படுவேன் எனத் தெரிவித்தார்.

## கோல் அடித்த மகிழ்ச்சி உயிரைப் பறித்த சோகம்

### இங்கிலாந்தில் நிகழ்ந்த துயரம்



(லண்டன்)

இங்கிலாந்தில் கால்ப்பந்தாட்ட வீரர் ஒருவர் மைதானத்தில் கோல் அடித்த மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தபோது திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலியால் மைதானத்திலேயே உயிரிழந்த சோக சம்பவத்தால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இங்கிலாந்தில் உள்ள மென்செஸ்டர் என்ற இடத்தில் உள்ள ஒரு கால்ப்பந்தாட்ட மைதானத்தில் மெத்தியூ பேர்கஸ் என்ற 20 வயது இளைஞர் உள்ளூர் போட்டி ஒன்றில் தனது நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தார். இதன்போது அவரது நண்பர்கள் கடத்திய பந்தை மிக லாவகமாக விளையாடி கோல் போட்டார். கோல் போட்ட மகிழ்ச்சியில் துள்ளி குதித்த மெத்தியூக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டது. அதனால் மைதானத்திலேயே நினைவிழந்தார்.

மெத்தியூ பேர்கஸின் நண்பர்கள் அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். வைத்தியசாலையில் அவரை பரிசோதித்த பின் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். பின்னர்தான் அவர் மைதானத்திலேயே இறந்துவிட்டது தெரிய வந்தது. மெத்தியூ பேர்கஸின் மரணமடைந்த செய்தியை கேட்டதும் அவரது தாய் சாரா, பாட்டி ஹல்டா கிரகரி மற்றும் அவரது சகோதரி எமி ஆகியோர் கதறி அழுதனர்.

சரியாக ஏழு வருடங்களுக்கு முன் இதே நாளில்தான் மெத்தியூ பேர்கஸ், தந்தையும் நெஞ்சு வலியால் மரணம் அடைந்ததாக அவரது தாய் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிறைவேறியது பி.சி.சி.ஐ. திட்டம்

இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைகளுக்கு கூடுதல் அதிகாரம் அளிக்க வகை செய்யும் புதிய சட்ட திருத்தங்களுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நிர்வாகக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில், மறுசீரமைப்பு விதிமுறைகள் மீது வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. பாகிஸ்தான், இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகிகள் இதில் கலந்துகொள்ளாமல் புறக்கணித்தனர். ஆதரவாக 8 வாக்குகள் கிடைத்ததை அடுத்து, புதிய விதிமுறைகள் அமுலுக்கு வரவுள்ளன. இதன் மூலமாக சர்வதேச கிரிக்கெட் சபையில் இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைகளின் செல்வாக்கு அதிகரிப்பதுடன், வருவாயில் அதிக பங்கும் கிடைக்கும்.


தற்போது இந்திய கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ.) தலைவராக உள்ள என்.சீனிவாசன், ஐ.சி.சி. அமைப்பின் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். எதிர் வரும் யூலை மாதம் அவர் பொறுப்பேற்பார். இரண்டு ஆண்டுகளுக்கு அவர் இந்தப் பதவியை வகிப்பார். ஜக்மோகன் டால்மியா, சரத் பவார் ஆகியோரைத் தொடர்ந்து ஐ.சி.சி. தலைவர் பொறுப்பை ஏற்கும் 3ஆவது இந்தியர் என்ற பெருமை அவருக்குக் கிடைத்துள்ளது.

புதிய சட்டத் திருத்தங்களின் விளைவாக எல்லா உறுப்பினர் நாடுகளுக்கும் கூடுதல் வருவாய் கிடைக்கும். 2023ஆம் ஆண்டு வரை டெஸ்ட் போட்டிகளை தொடர்ந்து நடாத்துவதற்காக கணிசமான நிதி ஒதுக்கப்படும்.

டெஸ்ட் தொடர்களை நடாத்துவதற்காக சம்பந்தப்பட்ட கிரிக்கெட் சபைகளுக்கிடையே ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

## விளையாட்டுச் செய்திகள்

# நிரோஜன் அதிரடிச் சதம் வென்றது யாழ். மத்தி



(மாத்தளை)

நிரோஜனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் மாத்தாளை சென். தோமஸ் கல்லூரி அணி யாழ். மத்திய கல்லூரி அணியை வீழ்த்தியுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மற்றும் மாத்தளை சென். தோமஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான சிநேகபூர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி கடந்த 2,3ஆம் திகதிகளில் மாத்தளை சென். தோமஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி நிரோஜன், அனல்ராஜ், சௌமிதரன் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. குறிப்பாக, நிரோஜன் சென். தோமஸ் கல்லூரி அணியின் பந்து வீச்சை பவுண்டரி, சிக்ஸர்களுக்குப் பறக்கவிட்டு சதம் விளாசினார். இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 344 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோஜன் 59 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது சிக்ஸர்கள், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 103 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் யாழ். மாவட்ட வீரர் ஒருவர் அண்மையில் வெளிமாவட்டத்தில் பெற்ற முதல் சதமடித்த வீரர் என்ற பெருமையை நிரோஜன் பெற்றுக் கொண்டார். மற்றும் அனல்ராஜ் 119 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 70, சௌமிதரன் 49 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 55, சஞ்சஜன் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டில்சான் 95 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய மாத்தளை சென். தோமஸ் அணி மதுஷன், நிருபன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் மாத்தளை சென். தோமஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராஜபக்ஷ 50, டில்சான் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுஷன் 64 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, நிருபன் 56 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

மாத்தளை சென். தோமஸ் கல்லூரி அணி 131 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்தமையால் யாழ். மத்திய கல்லூரி அணியில் மீண்டும் துடுப்பாடப் பணிக்கப்பட்டது. இதற்கமைய இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய மாத்தளை சென். தோமஸ் அணி நிருபனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் மாத்தளை சென். தோமஸ் அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அசாத் 44, கென்டங்க 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிருபன் 48 ஓட்டங்களைக் கொடுத்து நான்க, தனுசன் ஆறு ஓட்டங்களைக்கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

யாழ். மத்திய கல்லூரி அணியின் வெற்றிக்கு 48 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் ஆட்ட நேரம் நிறைவுக்கு வந்தது. இந்நிலையில் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் போட்டி விதிக்கு அமைய முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்று யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இதேவேளை, இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட பயிற்றுவிப்பாளர் லக்சித, பிரிவு இரண்டில் உள்ள அணிக்கெதிராகயாழ். மத்திய கல்லூரி அணி சிறப்பாக விளையாடியதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன் இப்போட்டி சிறப்பான முறையில் ஆடி சதம் விளாசிய நிரோஜன் சிறந்த வீரர் என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றார். ஒட்டுமொத்தத்தில் யாழ். மத்திய கல்லூரி வீரர்கள் சிறப்பான முறையில் ஆடியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார். (எஸ்.பி.)

# இல்ல மெய்வல்லுநர்

(கரணவாய்)

கரவெட்டி கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி குமுதினி ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் முதன்மை விருந்தினராக வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் சு. ஜெயானந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி சு. ஜெயானந்தகுமார் வழங்கவுள்ளார்.

(கைதடி)

கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் கல்வி நிர்வாகத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம்,சிறப்பு விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் கைதடி கிளை முகாமையாளர் ம.கோபி கிருஸ்ணா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (90)

(பூநகரி)

கிளி. ஞானிமடம் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி த. கனகசபை தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு. தருமரெத்தினம், சிறப்பு விருந்தினர்களாக பூநகரிப் பிரதேச சபை தவிசாளர் பொ. ஸ்ரீஸ்கந்தராசா, பூநகரி அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி ப. கோகிலன், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பா. ஸ்ரீகுமார், முன்னாள் பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் கணபதிப்பிள்ளை, ஞானிமடம் கிராம அலுவலர் ச. தவராசா, பள்ளிக்குடா கிராம அலுவலர் ம. இராஜகோபால், முன்னாள் பூநகரி கொத்தணி அதிபர் கா. குலசேகரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (112)

(அச்சுவேலி)

புத்தூர் நவற்கிரி அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இராதகிருஸ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு. சற்குணராஜா, சிறப்பு விருந்தினர்களாக நவற்கிரி பிரதேச கிராம சேவகர் திருமதி கீர்த்திகா ஸ்ரீவரன், சமுர்த்தி உத்தியோகஸ்தர் ப. பிரவீன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி ஞானமலர் இராஜவினோதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (03)

# நெடுந்தீவில் இன்று கபடி

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் ஆண், பெண்களுக்கான கபடிப் போட்டி இன்று முற்பகல் 10.00 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அணிகள் குறித்த நேரத்திற்கு வருகை தந்து நேரவிரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் மயூரன் கேட்டுள்ளார். இதேவேளை, பிரதேச செயலக விளையாட்டு விழா நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# விரைவில் 2ஆவது சுற்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்றுப் போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளதாக மேற்படி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் கடந்த வாரம் நிறைவடைந்தது. இதில் யாழ். மாவட்டம் சார்பாக யாழ். மத்திய கல்லூரி, கொக்குவில் இந்து, யாழ்ப்பாணக் கல்லூரி, சென். ஜோண்ஸ், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் போன்ற பல அணிகள் மோதின.

இப்போட்டிகளின் வெற்றிகள் அடிப்படையில் இரண்டாவது சுற்றுக்கு யாழ். மாவட்டம் சார்பாக ஐந்து அணிகள் தகுதி பெற்றுள்ளன. இதில் யாழ். மத்திய கல்லூரி, சென். ஜோண்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகள் தகுதி பெற்றுள்ளன.

இந்நிலையில் இரண்டாவது சுற்றுப் போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதல் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியையும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி, கொக்குவில் இந்துக் கல்லூரியையும், யாழ். மத்திய கல்லூரி இசுர மத்திய கல்லூரி அணியையும் எதிர்கொள்ளவுள்ளன.

இதேவேளை, இரண்டாவது சுற்றில் மோதவுள்ள அணிகள் பயிற்சிப் போட்டிகளில் அதீத ஈடுபாட்டுடன் பங்குபற்றி வருகின்றதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. (எஸ்.பி.)

# பிரதமர் உருக்கம்

அணியை வலுப்படுத்தும் நடவடிக்கை என்ற பெயரில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் இருந்து முன்னணி துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் நிரந்தரமாக கழற்றி விடப்பட்டுள்ளார். ஆஷஸ் தோல்விக்கு அவரை பலிக்கடாவாக்கி விட்டதாக முன்னாள் வீரர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர். இந்த சர்ச்சைகளுக்கு மத்தியில் இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் வானொலிக்கு அளித்தபேட்டியில், பீற்றர்சனின் மிகப்பெரிய இரசிகன் நான். மைதானத்தின் நாலாபுறமும் பந்தை அவர் விளாசுவதை பலமுறை பார்த்து இரசித்து இருக்கிறேன். „டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் 47.28 சராசரி வைத்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்று. ஆனால் இங்கிலாந்து அணியை தேர்வாளர்கள் தேர்வு செய்யட்டும். தேர்வு விடயத்தில் நான் விலகி இருப்பதே நல்லது என்று நினைக்கிறேன் என்றார்.

# இறுதியில் சென்.நியூஸ்ரார், திருமகள்

(அராலி)

சங்கானைப் பிரதேச இளைஞர் அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு திருமகள் இளைஞர், சென். நியூஸ்ரார் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

அராலி வடக்கு சில்வெஸ்ரார் இளைஞர் கழகம் சங்கானைப் பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளிற்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டித் தொடரை நடாத்தி வருகின்றது. இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த எட்டாம் திகதி அராலி வடக்கு சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் சென்.ஸ்ரார் இளைஞர் கழக அணியும் சென். நியூஸ்ரார் இளைஞர் கழக அணியும் மோதின.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் சென். நியூஸ்ரார் இளைஞர் கழக அணி வெற்றி பெற்று முதல் அணியாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் திருமகள் இளைஞர் கழக அணியும் பாரதி இளைஞர் கழக அணியும் மோதின. இதில் திருமகள் இளைஞர் கழக அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி மின்னொளியில் நடைபெறவுள்ளது. (48)

**'சாத்திரி' எனப்படும் ஸ்ரீகௌரிபால் புலிகளின் சர்வதேசப் பிரிவின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்தவர். ஆரம்பத்தில் புலிகள் அமைப்பில் வெடி பொருள் பிரிவில் பணியாற்றியதால் 'சக்கை சியாம்' என அழைக்கப்பட்டவர். தற்சமயம் 'சாத்திரி' என்கிற புனைபெயரில் எழுத்துலகில் அறியப்படுபவர்.**

**பேட்டி கண்டவர்: அருளினியன்**

# சாத்திரி பேசுகிறேன்

4

விடுதலையின் பெயரால், விடுதலைப் புலிகள் எத்தனை சக தமிழர்களை கொலை செய்து இருப்பார்கள் என நினைக்கிறீர்கள்?

அதுபற்றிய சரியான தரவுகள் யாரிற்கும் தெரியாது என நினைக்கிறேன். நான் உட்பட.

நீங்கள் உலகத்தில் அதிகம் நேசிப்பவர் யார்?

எனது மகள்.

உங்களின் மகளை நீங்கள் நேசிப்பது போல நீங்கள் கொலை செய்தவர்களை சில உயிர்கள் நேசித்திருப்பார்கள், நேசிப்பவர்களை கொலை செய்தது மூலம் அவர்களின் வாழ்வில் மிகப் பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியது சரியா?

தவறுதான். இதற்கான பதிலை ஏற்கனவே கூறிவிட்டேன். அதாவது கட்டளைகளிற்கு கீழ்ப்படிதல். இன்றும் நான் செய்த கொலைகளுக்காக மிகவும் வருந்துகிறேன்.

நீங்கள் கொலை செய்த ஒருவரின் உறவினரை, அல்லது நீங்கள் கொலை செய்த ஒருவரை நேசிப்பவரை சந்திக்க நேர்ந்தால் என்ன செய்வீர்கள்?


சொல்லத் தெரியவில்லை.

புலிகள் அமைப்பானது இலங்கை இந்தியா தவிர்ந்து வெளி நாடுகளிலும் குறிப்பாக பிரான்சிலும் சில கொலைகளை செய்ததாக அறிய முடிகிறது அதைப் பற்றி சொல்ல முடியுமா?

பிரான்சில் மாத்திரம் சபாலிங்கம், நாதன், கஜன் என மூன்று பேரை புலிகள் கொலை செய்துள்ளார்கள்.

சாபாலிங்கம் புலிகளால் கொல்லப் படவில்லையென்று நீங்களே முன்பு சில இடங்களில் மறுத்திருக்கிறீர்களே?


சபாலிங்கம்


நாதன்

உண்மைதான். காரணம் அன்று புலிகள் அமைப்பு தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்தது. அதற்கென பல தேவைகளும் நோக்கங்களும் இருந்தது. அதன் காரணமாக புலிகள் அமைப்பை கடுமையாக விமர்சனம் செய்து வந்த சபாலிங்கம் புலிகளின் அன்றைய சுவிஸ் பொறுப்பாளரின் வழிநடத்தலில் கொல்லப்பட்டார். அந்த சுவிஸ் பொறுப்பாளர் இப்பொழுது வேறொரு நாட்டில் வசிக்கிறார். அதனை புலிகள் தாம் செய்யவில்லையென மறுத்தோடு பத்திரிகைகளில் எழுதிக்கொண்டிருந்த என் போன்றவர்களிற்கும் சபாலிங்கத்தின் கெலையை மறுக்கும்படி உத்தரவு கிடைத்திருந்தது. ஆனால் இன்று புலிகளோ அவர்களின் தேவைகளோ நோக்கங்களோ எதுவும் இல்லாத காரணத்தால் நான் அதனை மறுத்துக்கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை. சபாலிங்கத்தை கொலை செய்தது விடுதலைப்புலிகள் தான்.

**நாதன், கஜன் கொல்லப் பட்டதற்கான காரணங்கள் தெரியுமா?**

உண்மையில் நாதன்தான் புலிகளின் இலக்கு. காரணம் நாதனே புலிகளின் பிரான்சிற்கான நிதிப் பொறுப்பில் இருந்தவர். இவர் புலிகளின் பெருமளவு நிதியை கையாடல் செய்ததால் பல தடவை புலிகளின் புலனாய்வு பொறுப்பாளரால் எச்சரிக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் தொடர்ந்தும் நிதி கையாடல் செய்ததால் அவரை பாரிசில் வைத்து புலிகள் கொலை செய்தனர். ஆனால் அவரோடு கூடவே நின்றிருந்த கஜன் கொலையாளியை அடையாளம் கண்டுவிட்டிருந்ததால் அவரும் கொல்லப்பட்டார்.

**விடுதலைப் புலிகள் அமைப்பு அழிந்து விடும் என, அதன் அமைப்பில் அங்கத்தவராக இருந்த காலங்களில் நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா?**


இல்லை கனவிலும் நினைத்திருக்கவில்லை. புலிகள் அமைப்பு மிகத் திறமையான போராளிகளின் வீரத்தாலும், தியாகங்களாலும் திறமைகளாலும் நன்கு திட்டமிடப்பட்டு சிறுகச் சிறுக கட்டியமைக்கப் பட்டதொரு விடுதலை அமைப்பு. ஒற்றைக் கைத் துப்பாக்கியோடு தொடங்கப்பட்டு ஆட்லெறிகள், பல குழல் எறிகணைகள், ஏவுகணை, விமானம் என கண் முன்னாலேயே வளர்ந்து நின்ற இயக்கம். இப்படி அழிந்து போகும் என நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

**விடுதலைப் புலிகள் அமைப்பின் தோல்விக்கு பிரதான காரணமாக நீங்கள் நினைப்பது என்ன?**

அதற்கு நிறைய அக புற காரணிகள் உள்ளன. பிரதான காரணங்களில் முதலாவது சர்வதேச அரசியல் ஓட்டத்தை சரியாக கணித்து அதற்கேற்ப சில ராஜதந்திர நகர்வுகளை செய்து புலிகள் தங்களிற்கானதொரு நெளிவு சுழிவு அரசியலை செய்யாதது. இரண்டாவது, புலிகளின் பெரு வெற்றிக்குப் பின்னர் அவர்கள் ஒரு நிழல் அரசை அமைக்கத் தொடங்கியபோது இயக்கத்தினுள் எழுந்த அதிகார குழுக்கள் தங்களில் யார் அதிகம் பிரபாகரனை புகழ்ந்தும் போற்றியும் அதிக அதிகாரங்களை தங்கள் கைவசப்படுத்த முயல்வது என்பதில் போட்டியிட்டனர். இந்தப் புகழ்ச்சிகளுக்கு இறுதிக் காலங்களில் பிரபாகரனும் மயங்கத் தொடங்கியிருந்தார் என்பது கவலைக்குரிய விடயம். இந்த அதிகாரக் குழுக்களில் முக்கியமானவை வெளிநாட்டு பிரிவுகளை கையகப்படுத்திய கஸ்ரோ தலைமையிலான அனைத்துலகச் செயலகம், மற்றும் சூசை தலைமையிலான கடற்புலிகள். இந்த அதிகாரப் போட்டியில் அதுவரை உண்மையாக விசுவாசத்தோடு உழைத்த பலர் புலிகள் இயக்கத்தை விட்டு தூக்கியெறியப்பட்டனர். அதே போல 2001 ஆம் ஆண்டு என்னையும் புலிகளின் தலைமை வெளியேற்றியது.

**சூசை தலைமையிலான கடற்புலிகள் அமைப்பு விட்ட தவறு என்ன?**

கடற் புலிகளின் தவறு என்று சொல்லமுடியாது, சூசையின் பேராசை என்றுதான் சொல்லவேண்டும். புலிகளின் கே.பி கம்பனியின் சர்வதேச வலையமைப்பில் 96 களிற்கு முன்னர் இருந்த பெரும்பாலானவர்கள் சம்பளத்திற்கு பணிபுரிபவர்களாகவே இருந்தனர். ஆனாலும் அவர்கள் விசுவாசத்தோடும், நேர்மையாகவும் வேலை செய்தனர். 96 களின் பின்னர் பெருமளவான பயிற்றப்பட்ட கடற்புலிகள் சர்வதேச வலையமைப்பில் இணைக்கப்பட்டனர். சர்வதேச கடலோடிகளில் பெரும்பாலானவர்கள் கடற்புலிகளாக இருந்தார்கள். ஆனால் ஆயுதச் சந்தை முகவர்களுடனான தொடர்புகள், பேரம் பேசுதல் என்பன பழையவர்களிடமே இருந்தது. ஆனால் சூசையோ கப்பல் ஓடத் தெரிந்து விட்டால் ஆயுதங்களை கொண்டு வந்து இறக்கிவிடலாமென


சாத்திரி

நினைத்தார். அதனால் பல குழுக்களாக இயங்கிய சர்வதேச வலையமைப்பை மொத்தமாக பறித்தெடுத்து தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருந்தார். அதுவரை பல நவீன ஆயுதங்களை வன்னிக்குள் கொண்டு போய் சேர்த்தவர்களை ஒட்டு மொத்தமாக நீக்கி சூசை பொறுப்பெடுத்த பின்னர் ஒரு ஆணியைக் கூட சூசையால் வன்னிக்குள் கொண்டு போய் சேர்க்கமுடியவில்லையென்பது சோகமான உண்மை.

**இறுதிப் போரின் முடிவை எப்படிப் பார்கிறீர்கள்?**

30 ஆண்டுகாலம் இடைவிடாத யுத்தம் முடிவிற்கு வந்தது மகிழ்ச்சிதான். ஆனால் இந்த 30 ஆண்டு காலம் ஈழத் தமிழினம் கொடுத்த விலையின் பலாபலன் என்னவென்று பார்த்தால் எதுவும் இல்லை என்பதுதான் பதிலாக அமையும். உயிரிழப்புக்களை தவிர்த்து எமக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ளக்கூடிய பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் புலிகள் அமைப்பு அதனை சரியாக தமக்கு சாதகமாக பயன்படுத்தாமல் நழுவ விட்டது. இன்று அந்த அமைப்பும் முழுதாக அழிந்துபோனதோடு ஈழத் தமிழ் மக்களையும் ஒரு அரசியல் சூனியத்திற்குள் தள்ளிவிட்டு சென்றுள்ளனர். இதிலிருந்து தமிழினம் மீண்டு வருவதற்கு பல காலங்கள் எடுக்கும். ஈழத் தமிழ் மக்களை சரியாக வழி நடத்தும் ஒரு தலைமையும் அமையவேண்டும். அமையுமா என்பது கேள்விக் குறிதான்?.

(தொடரும்...)



## மராட்டிய மொழியிலிருந்து....

அடி ஆத்தே!

✧ மராட்டிய மொழியிலிருந்து தமிழுக்கு வந்த சொல் "சம்பார்". மராட்டிய மன்னன் சிவாஜியின் மூத்த மகன் சம்பாஜி, அவருக்கு மிகவும் பிடித்தது பருப்புக் குழம்பு. எனவே அந்த பருப்புக் குழம்பிற்கு மக்களும் அரண்மனைவாசிகளும் சாம்பார் என்று பெயர் சூட்டினர்.

✧ "அடி ஆத்தே" என்று தமிழ்ப் பெண்கள் பலர் கன்னத்தில் கை வைத்திருப்பதை நாம் பார்த்திருப்போம். "ஆத்தே" என்றால் மராட்டியில் அத்தை என்று பொருள்.

✧ சில்லறை, காஜா, சோளி, சாரி, ஜட்டி, துப்பட்டா, இஸ்திரி, டபரா, ஜிலேபி, மசால், பீப்பா, கறார், தகராறு, நக்கல், குஸ்தி, கல்லா, போணி, தராசு, கோணி, காகிதம், கோந்து... எல்லாமே மராட்டியிலிருந்து வந்தவை.

"ஆயிரத்தில் ஒருவன்" எம்ஜியார் படத்தில் மண்டை ஓடு ஒன்றை பார்த்துவிட்டு நாகேஷ் சொல்வார் : "எவனோ ஒருத்தன் சிரிச்சிக்கிட்டே செத்துருக்கான்!"

Human skull is always smiling!

சுஜாதா இருபது வருடங்களுக்கு முன் எழுதினார் "மண்டை ஓடுகள் சிரிப்பதற்கு காரணம் "சாவின் ரகசியம்" தெரிந்து விட்டதால்."

தொன்ம ரகசியம் ஒன்று - பரமேஸ்வரன் கழுத்தில் மண்டைஓட்டு மாலை அணிபவர். அந்த மண்டை ஓடுகள் - அவருடைய பிரிய சகி பார்வதியின் முந்தைய பிறப்புகளின் உடல்களுடைய கபாலங்களைத் தான் பித்தன் சிவன் மாலையாக கோர்த்து அணிந்துள்ளாராம்.

ஷேக்ஸ்பியரின் ஹம்லெட் தன்னை சிறுவனாய். இருக்கும்போது உப்பு மூட்டை தூக்கி விளையாடி, சிரிக்கவைத்து ஆசுவாசப்படுத்திய பால்ய நண்பன் கோமாளி யோரிக்கின் மண்டை ஓடு கண்டு உணர்ச்சி வசப்படுகிறான்.

ஹம்லெட் கல்லறை ஒன்றில் ஒரு மண்டையோட்டை பார்த்து சொல்கிறான் "Alas, poor Yorick. I knew him...A fellow of infinite jest.

Yorick was once the court fool.

# நம்பிக்கைக் கீற்று

- சுகு-ஸ்ரீதரன்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முன்முயற்சியில் ஜனாதிபதி-அரசின் உதவியுடன் கிளிநொச்சியில் அறிவியல் நகரம் பல்கலைக்கழக பொறியியல் பீடம் - விவசாய பீடங்களைச் சாத்தியமாக்கியது வன்னி மற்றும் வடக்கு கிழக்கின் எதிர்காலத்திற்கான பெரு நம்பிக்கைக் கீற்று. இவை சாதாரண காரியங்கள் அல்ல.

இவை வன்னியின் வாழ்வில் தீவிர மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவை. வன்னி மற்றும் வடக்கு- கிழக்கின் கல்வி அறிவியல்- தொழில் நுட்ப - தொழில் துறை -விவசாய மீன்பிடி- இயற்கைப்பாதுகாப்பு -வறுமை ஒழிப்பு- சூழலியல் விடயங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அறிவுத்தாகமும் சமூக மலர்ச்சியும் விளைவோருக்கு இது நம்பிக்கை அளிக்கும் செய்தி.

யுத்தம் முடிவடைந்த பின்னர் வன்னிக்கு வந்து சென்ற இந்திய பசுமைப்புரட்சியின் தந்தை என்று அழைக்கப்படுகின்ற வேளாண் விஞ்ஞானி எம்.எஸ் சுவாமிநாதன் அவர்கள் கிளிநொச்சி இலங்கை முழுவதற்கும் உணவளிக்கக் கூடிய ஆற்றல் கொண்டது என்று எனக்குத் தெரிந்த தமிழக இடது சாரித் தோழர்களிடம் தெரிவித்திருந்தார்.

கண்ணி -மிதி வெடிகள் அகற்றப்பட்டு நெடுஞ்சாலை, புகையிரதப்பாதை, இந்தியாவின் பிரமாண்டமான வீடமைப்புத் திட்டம் மற்றும் உள்ளக கட்டமைப்பு வசதிகள் பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வன்னியில் உள்ள 900 இற்கு மேற்பட்ட குளங்களைச் செப்பனிடுவது, நீர்வளத்தை அதிகரிப்பது, தொழில் துறைகள் வாழ்வாதாரங்களை உருவாக்குவது மூலவளங்கள்-பயன்பாட்டைக் கண்டறிவதில் இந்த பீடங்கள்- அறிவியல் நகரம் செல்வாக்குச் செலுத்தும்.

கிளிநொச்சி அறிவியல் தொழில் நுட்பத்தில் ஆக்க சக்திகளை உருவாக்குவதில் அகிலம் பேசும் நகராவது நிச்சயம்..

கூட்டத்தில் கூடிநின்று கூவிப்பிதற்றலன்றி நாட்டத்தில் கொள்ளாக் கூட்டத்தைப் பொருட்படுத்தாமல் மேற்கொள்ளப்பட்ட இந்த காரியம் பெரும் சாதனையே.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகளும் இத்தகைய விடயங்களையும் அனுபவ பாடங்களாக எடுத்துக் கொண்டு பல காரியங்களை ஆற்றமுடியும்ளூ சாதிக்கமுடியும். மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் வெறுப்புணர்வுகளைத் தவிர்த்து, தீண்டாமை பாராட்டாமல் இது போன்ற விடயங்களில் தம்முள் இணங்கிச் செயற்படமுடியும்.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் இவை பெரும் சமூக பொருளாதார மாறுதலை ஏற்படுத்தும்.

வன்னியில் பள்ளிகளில் கணிதம்- விஞ்ஞானம்- ஆங்கிலம் ஆகிய துறைகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. மிகத் துரிதமாக இது நிவர்த்திக்கப்படவேண்டும்.

உரிய வசதிகளைச் செய்துகொடுத்து தேர்ந்த ஆசிரியர்களை அங்கு குடியமர்த்த வேண்டும்.


ஒரு காலத்தில் கல்வியில் மிகப் பின்தங்கிய அம்பாறை மாவட்டத்தின் கல்வி வளர்ச்சி -சமூக பொருளாதார மலர்ச்சியில் இன்று தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஒரு நிர்ணயமான பாத்திரத்தை வகிக்கிறது. அதற்கு மறைந்த தலைவர் அஸ்ரப் அவர்களின் தீர்க்கதரிசனமே காரணம்.

இந்திய- இலங்கை ஒப்பந்த காலத்தில் வட- பகுதி குறிப்பாக யாழ்ப்பாணம் மென்பொருள் உற்பத்திக்கு சிறப்பான ஒரு இடம், இந்திய கர்நாடக மாநில தலைநகர் பெங்களூர் போல் ஒரு அலை- யை இங்கு ஏற்படுத்தலாம் எதிபார்க்கப்பட்டது திருமலையை ஒரு நவீன நகரமாக்குவது - கிளிநொச்சியில் ஒரு பொறியியல் கல்லூரி நிறு வுவது பற்றியும் சிந்திக்கப்பட்டது. ஆனால் அவற்றை செயற்படுத்துவதற்கான ஜனநாயக இடைவெளிகள் இருக்கவில்லை.

இவையெல்லாம் எமது கனவுகளாகவே இருந்தன.

யுத்தத்திற்கு முந்திய காலத்தில் யாழ்.பல் கலைக்கழகம் கீர்த்தியின் உச்சத்தில் இருந்தது. யுத்தகாலத்தில் சுயாதீனத்தைப் பேணமுடியாத தாலும் ஜனநாயக இடைவெளி இல்லாததாலும் அது நலிவடைந்தது. தற்போது பொறியியல் பீடமும், விவசாய பீடமும், வன்னியின் சமூக பொருளாதார வாழ்வில் நிச்சயமாக ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தும். சர்வதேச அளவில் பிர- தியுபகாரம் பாராமல் பங்களிப்பதற்கு ஏராள- மான கல்வியாளர்கள்- துறைதோய்ந்தவர்கள் சமூக பிரக்ஞை உள்ளவர்கள் -நம்மவர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தேடிப்பிடித்து இங்கு






கொண்டு சேர்த்து கற்பிப்பதற்கான ஏது நிலைகள் ஏற்படுத்தப்படவேண்டும். கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்போம்.

இந்த நாட்டு மாணவர்கள் மாத்திரமல்ல வெளிநாட்டு மாணவர்களும் கல்வி கற்பதற்கான நிலைமைகள் ஏற்படுத்தப்படும் என உயர் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி தென்னாசியாவில் பெங்களூருக்கு நிகரான ஒரு அறிவியல் நகரமாக மாறுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகவே இருக்கின்றன.

ஆக்கச் செயற்பாடுகளுக்கு நிறைய களங்கள் இருக்கின்றன. அவற்றை கண்டறிந்து எமது மக்களின் பிரதிநிதிகள் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு மனப்பூர்வமாக செயற்பட முன்வரவேண்டும்.

சவால்களும்- தீர்க்கவேண்டிய பிரச்சினைகளும் பிரமாண்டமான அளவில் உள்ளன. அவற்றை முயல்வதற்கு மனசில் மானசீகமான ஒளி வேண்டும்.

நீண்டகாலமாக பெரும் அவலமும் இருளும் சூழ்ந்த வீடு துப்புரவு செய்யப்பட்டு அங்கு ஒரு சிறிய விளக்கை ஏற்றும் போது வாழ்வதற்கான நம்பிக்கைகள் பிரவாகிக்கின்றன.

இந்த சிறு பொறி பெரும் காட்டுத்தீயை மூட்டும். நூறு மலர்கள் மலரட்டும்! நூறு பள்ளிகள்



இந்த ஊரில் மட்டுமல்ல
இந்தப் பாலத்தில் மட்டுமல்ல
எல்லாப் பாலத்திலும்
இப்படி ஒரு சிலர் நடுவில் நின்று
குனிந்து பார்க்கிறார்கள்.
வெளியூர்க்காரர், உள்ளூர்க்காரர்,
கடன் வாங்குவதற்கு சைக்கிளில் அலைபவர்,
மருத்துவரிடம் காண்பிக்க
பையனை அழைத்துச் செல்பவர்,
ஜவுளிக்கடைப் பைகளோடு மனைவியுடன் வந்தவர்,
சிறையில் இருந்து விடுதலையாகி
வீட்டிற்குப் போகத் தயங்கி அலைபவர்,
பாத யாத்திரை கோஷ்டியில் விலகி
பச்சை வேட்டியுடன், ஆற்றில் மூழ்கிய
நண்பரை நினைப்பவர்,
கணவனைத் தவிர வேறொரு ஆணுடன் வாழ்ந்து
சூலுற்ற வயிறுடன் நதிபார்த்து நிற்பவள்,
இதுவரை மூன்றே மூன்று பஞ்சு மிட்டாய் விற்றிருப்பவர்,
எலும்புமுறிந்த கன்றுக்குட்டியை
கால்நடை ஆஸ்பத்திரிக்கு இட்டுச் செல்பவர்,
தானாய் முளைத்த சிறுசெடி பார்த்து
ஆயுள் முழுதையும் நினைக்கிற கிழவர்.... ...
எல்லோரும் பாலத்தில் மிகச்சரியாக
நடு மையத்தைத் தேர்ந்தபடி
குனிந்து நிற்கிறார்கள் கைகளை ஊன்றி.
நிற்காமல் கடந்து செல்கிறவர்களை விடவும்
நடுவில் குனிந்து பார்ப்பவர்களையே
பாலம் விரும்புகிறது.
இதைத் தாண்டுகிறோம்
என்பதே தெரியாமல்
எதைத் தாண்டிப் போயும்தான்
என்ன ஆகப் போகிறது?

- வண்ணதாசன்



## மனித மண்டை ஓடு

- R.P.ராஜநாயஹம் -

# நவரத்தின மாலிகை!

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான சியாமா சாஸ்திரி மதுரையை நோக்கித் தன் சிஷ்யர்களுடன் சென்று கொண்டிருந்தார். அவரின் குருநாதர் சங்கீதசுவாமி அவர் கனவில் தோன்றி மதுரை மீனாட்சி அம்மனைப் போற்றிப் புகழ்ந்து பாட வேண்டும் என்று கூறவே போகும் வழியிலேயே நவரத்தின மாலைப் பாடல்களை இயற்றிக்கொண்டே சென்றார். தியாகராஜருக்கு பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் மாதிரி, முத்துசுவாமி தீட்சிதருக்கு நவாவரண கீர்த்தனைகள் மாதிரி, சியாமா சாஸ்திரிக்கு நவரத்தின மாலிகைப் பாடல்கள்!

மதுரைக்கு அவரது முதல் விஜயம் அது. அவரது புகழ் ஏற்கெனவே மதுரையில் பரவியிருந்தாலும் யாரும் அவரை நேரில் பார்த்தது கிடையாது. மீனாட்சி அம்மன் சந்நிதியில் நவரத்தின மாலிகையைப் பாட ஆரம்பித்தபோது "யாரோ பாடுகிறார்" என்றுதான் அர்ச்சகர்களும் பக்தர்களும் அசட்டையாக இருந்திருக்கிறார்கள். நவரத்தின மாலிகையில் ஒன்றான "மாயம் மயனி நே பிலசிதே" என்ற பாடலை ஆஹிரி ராகத்தில் அவர் பாட அதைக் கேட்டு சந்நிதியில் இருந்த அனைவரும் அசந்து போனார்கள். பாடிக் கொண்டிருப்பது சியாமா சாஸ்திரி என்று தெரிந்ததும் பரவசப்பட்டார்கள்!


பார்வையாளர்களில் ஒருவர் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்து, பக்தி உணர்வு மேலோங்க, கர்ப்பகிரகத்துக்கு ஓடிச் சென்று அம்மன் மீது சாத்தப்பட்டிருந்த பட்டுத்துணியை எடுத்து வந்து, "அன்னை மீனாட்சியின் அருளாசியைப் பெற உங்களைவிடத் தகுதியானவர் வேறு யார் இருக்க முடியும்?" என்று கூறி அதை சாஸ்திரியின் தலையில் பரிவட்டமாகக் கட்டி மரியாதை செய்தார்!

இசைப் புரவலர் ஒருவர், "அப்பனே... நீ தம்புராவுடன்தானே பாடினாய்.. நீ பாடியபோது வீணை வாசிப்பதுபோல இருந்தது" என்று சொல்லி மேற்புறம் யாளிமுகம் பொருத்தப்பட்ட தம்புரா ஒன்றை சாஸ்திரிக்குப் பரிசாகத் தந்து தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்!

எம்.எஸ். சுப்புலட்சுமி பாடிப் பாடி பிரபலப்படுத்திய சங்கராபரண ராகப் பாடலான "சரோஜ தள நேத்ரி" சியாமா சாஸ்திரியின் நவரத்தினமாலிகையில் ஒரு ரத்தினம்!

('சியாமா சாஸ்திரி' என்ற நூலில் வீயெஸ்வி)






# நிகழ்வுகளின் பதிவுகள்....

மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது... (11)




நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவையின் கலாசார விழா அண்மையில் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் எழுத்தாளர் தேவி பரமலிங்கம் பொன்னாடைபோற்றி விருது வழங்கி கௌரவிக்கப்படுவதைக் காணலாம். (68)



கொக்குவில் கிருஷ்ணா அறநெறிப்பாடசாலையின் பட்டிப்பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றபோது மாணவன் ஒருவனுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்படுவதைக் காணலாம். (48)






யாழ். ஹாதி அபுபக்கர் வீதியில் அமரர் ஏ.டபிள்யூ எம்.அமீர் ஞாபகார்த்தமாக முன்பள்ளி பாடசாலை ஆரம்ப நிகழ்வில் மும்மதத்தின் தலைவர்கள் ஒன்று கூடி திறந்து வைப்பதையும், மாணவர்களையும் காணலாம். (105)



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுனர் நாள் நிகழ்வு அண்மையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றுவதையும் வடமாகாண கல்வி அமைச்சருக்கு நினைவுப்பரிசில் வழங்கப்படுவதையும் காணலாம். (10, 48, 11, 63)

காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மணவாளக் கோல விழா அண்மையில் இடம் பெற்றபோது.. (50)

# தற்காலிக வீட்டில் வைத்திய சிகிச்சை; புதிய வைத்தியசாலை திறக்கப்படுமா?

## கேள்வி எழுப்பும் பூநகரி மக்கள்





(பூநகரி)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அமைச்சின் அனுசரணையோடு 44மில்லியன் ரூபாசெலவில் அமைக்கப்பட்ட பூநகரி பொது வைத்தியசாலையின் கட்டடவேலைகள் முடிவடைந்தும் திறந்து வைக்கப்படாத நிலையில் உள்ளதால் சீரான வைத்தியவசதியை பெறமுடியாமல் இருப்பதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சென்றமாதம் நடைபெற்ற பூநகரி சுகாதார் சேவைப் பணிமனைத் திறப்பு விழாவில் இருவாரங்களில் புதிய வைத்தியசாலை திறக்கப்படுமென கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தும் ஒரு மாதம் கடந்த நிலையில் ஒரு சிறிய தனியார் வீட்டில் கடந்த இரு வருடமாக நிரந்தரவைத்தியர் இல்லாமல் பெரும் நெருக்கடிக்கு மத்தியில் இயங்கிவருகிறது.

தற்பொழுது புதிய வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரது அயராத முயற்சியினால் கடுமையான நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற ஒழுங்கு செய்துவருவதால் காலை தொடக்கம் மாலை வரை நோயாளிகள் வேறு இடங்களுக்குச் செல்லாமல் இங்கு வருவதால் போதிய இடமின்மையால் வெய்யிலில் நின்று மருந்து பெறும் அவல நிலை உள்ளது. ஒரு வைத்தியரே போதுமானதாக இல்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

கட்டடவேலை முடிந்து பூட்டிவைக்கப்பட்ட வைத்தியசாலை உடனடியாக திறந்து மக்கள் சேவைக்கு விட வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (112)

# தேசிய கல்வியியற்கல்லூரி அனுமதியில் நாடகமும் அரங்கியலும் பாடநெறி நீக்கம்

## அதிர்ச்சியில் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

இம்முறை தேசிய கல்வியியற்கல்லூரிகளில் மாணவர்களினை இணைத்துக்கொள்வதற்கான அனுமதிப்படிவத்தில் நாடகமும் அரங்கியலும் பாடநெறி நீக்கப்பட்டுள்ளமை நாடக பாடத்தினை கற்ற மாணவர்களிடையே அதிருப்தியையும் கவலையினையும் ஏற்படுத்தியுள்ளதாக நாடக பாடத்தினை கற்ற மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்வியியற் கல்லூரிகளில் நாடகமும் அரங்கியலும் பாடநெறிமூலம் ஆசிரிய மாணவர்கள் உள்வாங்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு நாடக ஆசிரியர்கள் ஒவ்வொரு வருடமும் வெறியேற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள் இதன் மூலம் ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்பட்டதுடன் நாடகத் துறை சார்ந்த ஆசிரியத் தொழில்வாய்ப்பினை நாடகபாடத்தினை தெரிவு செய்து கற்ற மாணவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

கடந்த வருடம் தேசிய கல்வியியற்கல்லூரிகளுக்கான அனுமதியில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியில் ஆசிரிய பயிற்சிக்குரிய பாடநெறியில் இருந்து நாடகபாடம் நீக்கப்பட்டது. மட்டக்களப்பு தேசிய கல்வியியற்கல்லூரியில நாடகமும் அரங்கியலும் பாடநெறிக்கு மாணவர்கள் உள்வாங்கப்பட்டார்கள். ஆனால் இம்முறை தேசிய கல்வியியற்கல்லூரிகளில் மாணவர்களினை இணைத்துக்கொள்வதற்கான அனுமதிப்படிவத்தில் நாடகமும் அரங்கியலும் பாடநெறி நீக்கப்பட்டுள்ளமை குறித்து மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். நாடகமும் அரங்கியலும் பாடநெறியின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளதாக நாடகவியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இச்சூழ்நிலை எதிர்காலத்தில் கலைத்துறையில் நாடகபாடத்தினை விரும்பிக்கற்க வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையில் மேலும் பெரு வீழ்ச்சியினை ஏற்படுத்தும் காரணம் கல்வி கற்பதன் பிரதான நோக்கம் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளவதாகும். கலைத்துறை பாடநெறியினைத் கற்பவர்களின் பிரதான தொழிலாக ஆசிரியர் தொழிலே காணப்படுகின்றது. அத்தொழிலினை பெற்றுக்கொள்வது கூட இயலாத காரியமாகப் போகின்ற வேளையில் அத்துறையினை கற்பதில் மாணவர்கள் பெரு விருப்பினைக் காட்டமாட்டர்கள் என கல்வியலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (63)

# சண்டிலிப்பாய் கோட்டத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடம் நிரப்பப்படும்

## கோட்டக்கல்வி பணிப்பாளர் தெரிவிப்பு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் இம் மாத இறுதிக்குள் நிரப்பப்படவுள்ளதாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்த ராஜா தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் கண்காணிப்புக்குழுக் கூட்டம்கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போது ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவர்கள் பாதிப்படைவதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்கள், தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் 7 வருட சேவையின் அடிப்படையில் இவ் வருட ஆரம்பத்தில் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

எனினும் பல பாடசாலைகளில் அவர்களுக்கு பதிலாக ஆசிரியர்கள் கடமைக்கு நியமிக்கப்படவில்லை. இதன் காரணமாக இவ் வருட ஆரம்பத்திலிருந்து கணிதம், ஆங்கிலம், தமிழ் உட்பட்ட முக்கிய பாடங்கள் கற்பிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்ட கருத்திற்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இது சம்பந்தமாக வலயக் கல்விப் பணிப்பாளருடாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். நியமிக்கப்பட்ட சில ஆசிரியர்கள் கடமையினை பொறுப்பேற்கவில்லை. இதனை இம்மாத இறுதிக்குள் ஒழுங்கிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் உறுதியளித்தார். (48)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

கண்டியில் வசிக்கும் வயதான இருவர்ரை தாய், தந்தையரைப் போல பார்ப்பதற்கு நம்பிக்கையான, வயதெல்லை (20-45) வரையான பணிப்பெண் உடனடியாகத் தேவை. சம்பளம் 15000 வரை வழங்கப்படும். தொடர்புக்கு 0815636011, 0772140994.

---

யாழிலிருந்து வந்து கொழும்பில் வசிக்கும் சிறிய குடும்பத்திற்கு சமையல், கிளீனிங் செய்து கொண்டு வீட்டில் தங்கியிருப்பதற்கு நம்பிக்கையான பெண் உடனடியாகத் தேவைப்படுகின்றார். வயது (18-60) சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். 0115920004, 0770132998.

---

வளமான வாழ்வைத் தேடி அலையும் உங்களின் வாழ்க்கையை வளமாக்க புதியதோர் வாய்ப்பு நம்பிக்கையோடு இணையுங்கள், பிரதான தொழிற்சாலைகளான ஜேம், தேயிலை, ஆடை பிளாஸ்டிக், க்ளவுஸ், டயர் போன்ற உற்பத்தி நிலையங்களில் வேலைவாய்ப்புகள் உற்பத்தி பொதியிடல், தரம் பிரித்தல், Dalivery, Loding, unloading பிரிவுகளுக்கு வயது (18-50) ஆண், பெண் உடனடியாகத் தேவை. சம்பளம் 18,000-25,000 வரை உணவு தங்குமிடம் சகாய விலையில் குழுக்களாகவோ, தம்பதிகளாகவோ இணைந்து கொள்ளலாம். இதைத் தவிர விமான நிலையம், கப்பல் துறைமுகம், ஹோட்டல், வாகன சாரதிகளுக்கான வேலைவாய்ப்புகளும் உண்டு இப்பொழுதே தொடர்புகளுக்கு முந்துங்கள். தொடர்புக்கு: 0770734757.

---

கொழும்பில் இயங்கிவரும் பிரபல வைச உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. சமையல், உதவி சமையல், மரக்கறி வெட்டுபவர், அரவை வடை போடுபவர், தோசை, ரொட்டி, சேர்ட்டிஸ் போடுபவர், பார்சல் கட்டுபவர், டீமேக்கர், வெயிட்டர், உணவு, தங்குமிட வசதி உண்டு. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். சுத்திகரிப்பாளர் பெண்கள் தேவை. பெண்களுக்கு காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை வேலை தொடர்பு கொள்ளவும், தொடர்புக்கு:2685700, 0719049432.

---

கொழும்பில் இயங்கும் பிளாஸ்டிக் தொழிற்சாலைக்கு தொழிலாளர்கள் தேவை. உணவு, தங்குமிடம் வழங்கப்படும் 0725284165.

---

நாட்டில் சகல பிரதேசங்களுக்கும் சென்று வரக்கூடிய சாரதியான எனக்கு உடனடியாக வேலை தேவை. தொடர்புகளுக்கு சந்திரன் 0752057382.

---

தொழில் தேடும் நபரா நீங்கள்? மாதம் 20,000- 32,000, 44,000 வரையிலான சம்பளத்தை பெறும் விசேட தொழில் வாய்ப்புக்கள் பல உங்களின் தொழில் கல்வி தகைமைகளின் அடிப்படையிலும் மற்றும் அனுபவமுள்ள, அற்ற அனைவருக்கும் 18-55 வயதுக்கிடைப்பட்ட நிரந்தர தொழில் ஒன்றை எதிர்பார்க்கும் நபராயின் அழையுங்கள் 0779141804.

---

உடனடியான வேலை வாய்ப்புக்கள் நீங்கள் 17-50 வயதுடையவர்களாயின் (ஆண்,பெண்) சம்பளம் 18,000 -தொடக்கம் 25,000 - 32,000 உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளுடன் வேலைவாய்ப்பு பிரதான தொழிற்சாலைகளான ஜேம், கோடியல், கோழி இறைச்சி, கிளவுஸ், தேயிலை, பெயின்ட் மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல், தரம்பிரித்தல், களஞ்சிய பிரிவுகளுக்கு தேவை. (நண்பர்கள், குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலைக்கு சேர்த்து கொள்ளப்படுவீர்கள் உடன் தொடர்பு விசேடம் அனைத்து பிரதேசங்களிலும் எமது காரியாலயங்கள்), 0770224156, 0777 999157.

---

நிரந்தரத் தொழில் ஒன்றை பெற்று வாழ்வை முன்னேற்றத்தில் கொண்டு செல்ல எங்களுடன் இணையுங்கள், சம்பளம் 35,000 வரை கண்டி, மாத்தளை, பெரதெனிய, கலஹா, கம்பளை, பூண்டுலோயா, கொத்மலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா, அவிசாவளை, யட்டியந்தோட்டை, பலாங்கொட போன்ற இடத்தில் உள்ள 17-55 வயது தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கு முதலிடம் பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளில் உற்பத்திலேபல், பொதியிடல், தரம்பிரித்தல், களஞ்சியம் போன்ற பிரிவுகளில் வெற்றிடம்... உணவு, தங்குமிடம் குறைந்த விலையில், அன்றைய தினமே வேலை வாய்ப்பு. தொடர்புக்கு: 0766031098.

---

இலங்கையில் பிரசித்தி பெற்ற பிரதான தொலைத் தொடர்பு அலுவலகங்களுக்கு வயது 18-40 வரையான ஆண்,பெண் தேவைப்படுகிறார்கள். கம்பியூட்டர் ஒப்பரேட்டர், மார்கட்டிங் எக்ஸ், கிடிவ், செல்ஸ்மேன், எழுத்தாளர் தொடர்புக்கு: 0770570081, 0775742738,

---

இலங்கையில் பிரதித்தி பெற்ற அலுவலகங்களுக்கு Sales (வயது 18-26) ஆண், பெண் 40 பேர் (பெண்) கணக்காளர் 25பேர் அவசரமாகத் தேவை (வயது 18-24) தொடர்புக்கு 0113056242.

# புலிச் சந்தேக நபர்களென கைதானவர்கள் விடுதலை

( சென்னை)

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த 2009 ஆம் ஆண்டு சென்னையில பொலிஸாரால் கைது செய்யப பட்ட 13 பேர் விடுதலை செய் யப்பட்டுள்ளனர்.

இலங்கையர்கள் 12 பேர் உப்பட்ட 25 பேர் செய்மதி தொலை பேசிகள் உட்பட்ட தொலைத் தொடர்பு உபகரணங்களை வைத் திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு •தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இதில் குற்றஞ் சுமத்தப்பட்டி ருந்த 13 பேர் நேற்று சென்னை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தொடர்பில் பொலிஸார் சமர்ப்பித்த ஆவ ணங்களில் முரண்பாடுகள் காணப் படுகின்றன.

அத்துடன் சந்தேகநபர்கள் தொடர்பில் சந்தேகம் கொள்வ தற்கு காரணங்கள் இல்லை என்ற காரணத்தினால் அவர்களை விடுதலை செய்வதாக நீதிபதி கள் தீர்ப்பளித்தனர்.

# யாழ்.போதனா மருத்துவமனையில் உணவகத்துக்கு தற்காலிக மூடுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை உணவகம் கடந்த சனிக் கிழமை மூடப்பட்டது.

இதனால் வைத்தியசா லையில் தங்கியுள்ள நோயாளர் மற்றும் ஊழியர்கள் வெளிநோ யாளர், தாதியர், வைத்தியர்கள் எனப் பல்வேறுதரப்பட்ட வர்க ளும் தேனீர், உணவுத் தேவை களை நிறைவேற்ற வெளியிடங் களை நாடவேண்டி ஏற்பட்டுள் ளது.


யாழ்போதனாவைத்தியசாலை உணவகத்திலும் மேற்படி உண வகத்துக்காக யாழ்.கச்சேரியடி யிலுள்ள வீடொன்றில் இயங்கும் சமையல் கூடம் என்பவற்றை சோதனை இட்ட சுகாதாரப் பரி சோதகர்கள் அடிப்படை சுகா தாரச் சீர்கேடுகளைக் கண்டு யாழ் நீதிமன்றில் உணவக நடத்து நரை பாரப்படுத்தினர்.

விசாரணை நடத்திய நீதிபதி பெ.சிவகுமார் நடத்துநருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித் ததுடன் உணவக் குறைபாடு களை நீக்குவதற்கு இருவார அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

மேற்படி நடவடிக்கைகளை அடுத்து உணவகம் திருத்த வேலைகளைச் செய்வதற்காக தற்காலிகமாக மூடப்பட்டிருப்ப தாகத் தெரியவருகிறது. (68)

# இரணைமடுக் குளத்தின் உட்கட்டுமானம் இலக்கு நிர்ணயித்து பணிகள் ஆரம்பம்

## நிபுணர் குழுவும் சிபாரிசுகள் சமர்ப்பிப்பு



(வலி.மேற்கு)

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பா சன திணைக்களத்தின் ஊடாக இரணைமடு மேல்தள, கீழ்தள உட்கட்டுமான அபிவிருத்திக்கு ஐந்தாயிரத்து 940 மில்லியன் ரூபா ஆசிய அபிவிருத்தி வங்கி இபாட் (Ifad) மற்றும் இலங்கையும் அரசும் இணைந்து ஒதுக்கியுள் ளது.

2015 ஆம் ஆண்டுக்குள் திட் டத்தை நிறைவேற்றி அறிக்கை யிடுமாறு மத்திய அரசினால் பணிக்கப்பட்டுள்ளது.

யாழ். - கிளிநொச்சி குடிதண் ணீர் மற்றும் சுகாதார திட்டத்தின் அபிவிருத்திக்காக 25 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளது.

அதாவது164.04 மில்லியன் அமெரிக்கன் டொலர் நிதி ஒதுக் கப்பட்டுள்ளது. இதேவேளை இர ணைமடுக்குளத்தின் மேல்தளம், கீழ்தளம், வாய்க்கால், மதகு, பாலம், ஏற்று நீர்ப்பாசனம் மற்றும உட்கட்டுமான அபிவிருத்திக் காக 5940 மில்லியன் ரூபா முதற கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த 40 ஆண்டு காலத் திற்கு மேலாக முற்றாக அழிவ டைந்து இரணைமடு அணைக் கட்டு, துருசு, பாலம், ஏற்று நீர்ப் பாசனம் என்பன 2015 இற்குள் புனரமைப்பு பணி முடிவுற வேண்டும்.

இல்லாவிடில் இன்னும் 5 ஆண்டுகளில் இரணை மடுக் குளத்தின் அணைக்கட்டுக்கள் பாதிக்கப்பட்டு மக்களுக்கு பாரிய இடர் ஏற்படலாம் என பொறியியல் நிபுணத்துவ குழு ஆலோசனைகளை வழங்கி யுள்ளது.

இதேவேளை, 2011 - 2013 வரையிலான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பா சன திணைக்களத்தின் உட்கட் டுமான முன்னேற்றம் மந்தமான நிலையையே அறிக்கையிட் டுள்ளனர்.

இத்திட்டம்2014 இல் இருந்து துரிதப்படுத்த ஆசிய அபிவி ருத்தி வங்கி நிபுணத்துவகுழு ஆலோசனை வழங்கியுள்ள தாக மாகாண செய்திகள் தெரி விக்கின்றன.

# கும்பாபிஷேகம

காரைநகர் களபூமி பாலா வோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ் தான பாலஸ்தாபன கும்பாபி ஷேகம் இன்று காலையில் நடை பெறவுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் விநாயக வழிபாடு சாந்தி பூசை, யாகபூசை ஹோமம் ஆரம பமாகியுள்ளன. ஆலய பிரதம குரு ஈசானசிவாச்சாரியர் சிவசி ஸ்ரீ பால.ஸ்கந்தரூப குருக்கள் பாலஸ்தான கும்பாபிஷேக கிரி யைகளை முன்னின்று நடத்து வார். (10)

# பேச்சு சிகிச்சையாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

சுகாதார அமைச்சின் வைத் தியசாலைகளுக்கு பேச்சு சிகிச் சையாளர் பதவியின் தரம் III இற்கான பதவி வெற்றிடங்க ளுக்கு இலங்கைப்பிரஜைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப படுகின்றன.


கல்வித் தகைமையாக பல்க லைக்கழகங்களிலிருந்து பெறப் பட்ட பேச்சுச் சிகிச்சைக் கான டிப்ளோமா பட்டம் வயது 21- 35 வரைக்கும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடிய உடல் உள நலத்து டனும் நற்பணிவுடையவராகவும் இருத்தல் அவசியமாகும்.

பதவி நிரந்தரமானதும், ஓய் வூதியற்குட்பட்டதாகும். நேர் முகப்பரீட்சையுடன் எழுத்துப் பரீட் சையாக நுண்ணறிவுப் பரீட்சை யும், பொது அறிவுப் பரீட்சை யில் இடம்பெறும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், சுகாதார அமைச்சு (பணிப்பாளர் நிர்வாகப் பிரிவு 06) இல 385 வண பத்தே கம விமலவங்க தேரே மாவத்தை கொழும்பு 10 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

பரீட்சைக் கட்டணம் ரூபா 500 செலுத்தி விண்ணப்பத்தின் கடித உறையின் இடது மேல் மூலையில் “பேச்சுச் சிகிச்சை யாளர் பதவிக்கான விண்ணப்ப படிவம்” என குறிப்பிடல் வேண் டும்.தற்போது அரச சேவை யில் உள்ளோர் அவ் அரச நிறு வனத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பங்கள் அனுப்பப்ப டல் வேண்டும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (105)

# உரிய விசாரணைகள் முடிய முன்னரே மரணச் சான்றிதழ் வழங்குவது நியாயமா?



யுத்தத்தில் காணாமற்போனோர் தொடர்பாக ‘விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்கு ழுவின் அமர்வுகள் நடக்கும் இடங்களில்- அதே தினங்களில் வேறு குழுவினரால் மக்கள் அச்சுறுத்தப்பட்டு மரணச் சான்றி தழ் வழங்கும் நடவடிக்கை களும் நடந்துவருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விசனம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் நடந்துவரும் இவ் வாறான சம்பவங்கள் தொடர் பாக குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு கவனத்தில் எடுக் காதுள்ளமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர்களில் ஒருவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் விமர்சித் துள்ளார்.

கிளிநொச்சியில் ஜனாதிபதி ஆணைக்குழு வாக்குமூலங் களைப் பதிவுசெய்துகொண்டி ருந்த சந்தர்ப்பங்களில், பயங்க ரவாத புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட வேறுகுழுவினர் மக் களை நிர்ப்பந்தித்து மரணச் சான்றிதழ் வழங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

சில இடங்களில் மக்களுக்கு அவர்களின் உறவினர்கள் உயி ரிழந்துவிட்டனர் என்ற அடிப்ப டையில் நட்டஈடும் வழங்கப்பட் டுள்ளதாகவும் பிரேமச்சந்திரன் கூறினார்.

ஜனாதிபதி ஆணைக்குழு காணாமற்போனோர் தொடர் பாக விசாரணை நடாத்தி, காணா மல்போனவர்கள் உயிருடன் உள்ளனரா அல்லது உயிரிழந் துவிட்டார்களா போன்ற முழு மையான தகவல்களையும் திரட்ட முன்னரே, அரசாங்கம் மக்களுக்கு மரணச்சான்றி தழ்கள் கொடுக்கப்படுவதை ஏற்கமுடியாது என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

இலங்கை அரசாங்கம் திட்ட மிட்டு செய்கின்ற இந்த நடவடிக்கையை நிறுத்து வதற் காக மனித உரிமை அமைப் புகள் குரல்கொடுக்க வேண்டும என்றும் நாடாளுமன்ற உறுப் பினர் கேட்டுக் கொண்டுள் ளார்.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணக மவை தொடர்பு கொண்டு வினவியது. அப்படி யாக மக்கள் அச்சுறுத்தப்பட்ட தாகத் தகவல் இல்லை என்றார்.

# இன்று பாலஸ்தானம்

(யாழ்.நிருபர்)

காரைநகர் மணற்காடு அருள்மிகு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பாலஸ்தானம் இன்று திங்கட்கிழமை காலை 9.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் கடந்த வருடம் இராஜகோபுரம், மணி மண்டபம் என்பன கட்டி முடிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்குகிறது.

இன்று ஆலயத்தின் உட்புற வேலைகளுக்காக பாலஸ்தானம் செய்யப்படுகிறது. (10)

# பரமர் சங்கமம்



கரணம் தப்பினால் மரணம் எண்டு சொல்லப்படுவது சாகசம் காட்டும் சர்க்கஸ் தொழில் செய்யிற வைக்ஜெண்டில்லாமல் வீதிகளில் வாகனங்களில் ஏன் கனக்கப் பாதசாரிகளாகப் போறவைக்கும் இக்காலத்தில் பொருந்தித்தான் போகிறது.

எண்பது தொண்ணூறுகளில் இருந்து இரண்டாயிரத்துப் பத்தாமாண்டுவரை யாழ்ப்பாண வீதிகள் கடந்த நிலையை வருங் கால சமுதாயம் அறிய வேணுமெண்டல் பரமர் ஒரு வார்த்தையில் வருணிச்சுப் போடுவன் அதாவது தொழுநோய் பிடித்த மனிதனின் மேனிக்குச் சமன்.

இப்ப விளங்குது தானை எப்படி இருந்திருக்குமெண்டு? அப்படி இருந்தும் போக்குவரத்துச் செய்யப்பயமில்லை. ஏனென்டா வாக னங்கள் இப்பதைப்போல புழுத்துப்போய் இருக்கேல்லை. இப்பமோட்டுச் சைக்கிளும், எலி வாகனமும் அதுதான் ஆட்டோ எண் டில்லாமல் பெரிய பெரிய மிருகங்களும் ஒரு றாத்தல் பாணைப் போல காருகளும் யாழ்ப்பாணத்தில் கொட்டிக்கெல்.


காப்பெற்றுப் போட்டு றோட்டெல்லாம் பெருப்பிச்சும் குட்டிக் கரணம் போட்டுக்கொண்டுபோய் வரவேண்டிக் கிடக்கு போன 16 ஆம் தேதி வியாழக்கிழமை யாழ்ப்பாணக் கோட்டியாலை மெயின் றோட்டாலை மேற்கையிலிருந்து கிழக்கை சைக்கிலோடி வந்தன்.

நிதானமாக அவதானத்தோடை என்ர இடதுபக்கச் சைட்டாலை போனன். நீதிமன்ற பின்புற கிழக்கு வீதியை நெருங்கி இருப்பன் முன்னாலை கிழக்க இருந்து வந்த காரொண்டு திரும்பு வதற்கு அறிகுறி தெரிஞ்சிச்சு ஊண்டி உளக்கினால் அதுக்கி டைஞ்சலில்லாமல் தாண்டிடுவன்.

அப்பதான் அதைக் காண்ட காவல்துறை கையை நீட்டி நிறுத்தும் சைகை காட்டவில்லை நெருங்கி விட்ட என்ரை இடது கையைத் தட்டியதால் அப்பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட என்னால் கால்களை ஊண்டி நிற்க முடியாமல் அந்தக் காரை தட்டுத் தடுமாறிக் கொண்டு போன சைக்கிளை ஒரு மாதிரித் திருப்பி வீதியோரத்துக்குப் போய் வார்க்கம்பியில் இறங்கி நிண்டன்.

இதுக்கிடேல்ல வாகனம் நீதிமன்றத்துக்கை போயிட்டது. இல்லையெண்டாக் கார்ச்சில்லுக்கைதான் விழுந்திருப்பன். காவல்துறையைத் திரும்பிப் பாத்தன், சகோதர மொழிக்காரானான அவருக்கும் தன்னுடைய பிழை உறுத்தி இருக்கிறது. கிட்ட வந்த அவரிடம் நானொரு ஊடகவியலாளரரெண்டதைத் தெரிவித்தும் இன்னும் கீழிறங்கிவிட்டார்.


காரில் நீதிபதி ஆனந்தராசா போவதாகவும் கூறினார். நீதிவான் கவனிச்சு இருந்தா அவரைக் கூப்பிட்டு அறிவுரை கூறியிருப்பார். இப்படித்தான் பிரயாணங்களிலும் கரணம் தப்பினால் மரணம் எண்ட நிலைதான் இல்லையே பின்னை..



# க.பொ.த. (சா/த) பரீட்சை - 2013

# கல்வி முரசு

O/L



## கணிதம் - பகுதி I


ஆர்.கே.மேனன்

### பகுதி - A

1. ரூபா 78 விலையான தொப்பி ஒன்று வாங்கிய மாணவன் கடைக்காரனுக்கு எவ்வளவு பணம் கொடுத்தால் மீதியாக ரூபா 22 கிடைக்கும்.

2. 2.5 m ஐ cm இல் தருக.

3. உருவில் a இன் பெறுமானம் யாது.





4. தீர்க்க. $\frac{6}{X}=2$

5. கழிக்க. $1101_{இ} - 101_{இ}$

6. சுருக்குக. $(-0.2)^3$

4. அடைப்பு நீக்கிச் சுருக்குக. 7-2(X+3)

5. உருவில் A ∩ B என்ற பகுதியை நிழற்றுக.





9. 10,15,15,20,25,30,35 என்ற புள்ளிகளின் இடையம் யாது?

10. $\begin{pmatrix} 3 & 2 & 0 \\ 0 & -1 & -2 \\ 1 & 4 & 1 \end{pmatrix}$ தாயவரிசை தருக? எவ்வகைத் தாயம் எனத் தருக.


6. ஒரு நோயாளிக்கு மூன்று விதமான மருந்துவில்லைகள் கொடுக்கப்பட்டன. ஒன்று 20 நிமிடத்துக்கு ஒரு தடவையும் மற்றையது 25 நிமிடத்துக்கு ஒரு த்டவையும் மூன்றாவது வில்லை 30 நிமிடத்துக்கு ஒரு தடவையும் உட்கொள்ள வேண்டும். காலை 8 மணிக்கு 3 விதமான மருந்து வில்லைகள் உட்கொண்டால் மீண்டும் எந்த நேரத்தில் மூன்றும் ஒன்றாக உட்கொள்ள வேண்டும்?

7. ஒரு நிமிடத்தில் 120 m தூரம் செல்லும் ஒரு வாகனம் ஒரு மணித்தியாலத்தில் எத்தனை km தூரம் செல்லும்.

8. நாற்பக்கல் ABCD இல் X இன் பெறுமானம் யாது?





9. உருவில் $PQ \parallel SR$ ஆகும். PQRS ஒரு வட்டநாற்பக்கல் x, y இன் பெறுமானம் காண்க.




15. $x \leq -3$ உம் $x > 2$ என்ற சமனிலியை எண் கோட்டில் வரைக. $x > 2$ இல் நிறை எண்கள் இரண்டு தருக.

10. ABCD ஓர்நாற்பக்கல் $AD \parallel BC$ ஆகும். AC, BC என்பன O இல் இடைவெட்டுகின்றன.
அ) முக்கோணம் BCD இற்கு சமமான முக்கோணி எது?
ஆ) OCD முக்கோணிக்கு சமபரப்பான முக்கோணி எது?




17. ரூபா 85000 இற்கு ரூபா 8.50 விலைப்படி எத்தனை 10 ரூபாய் பங்குகள் வாங்கலாம்? பங்குகளின் மொத்தப் பெயர்மாத்திரைப் பெறுமானம் யாது?

11. 2x + 3y = 10 என்ற நேர்கோட்டில் கீழே தரப்பட்ட எந்த ஆள்கூறுகள் தரப்பட்ட நேர்கோட்டில் அமைந்திருக்கும். $A\left(\frac{1}{2}, 3\right)$ $B(1, -3)$ $C(-1, 4)$


12. $\frac{2}{3}, 2, 6$ ..... பெருக்கல் விருத்தியில்
அ) பொதுவிகிதம் என்ன?
ஆ) n ஆம் உறுப்பை முதன்மை எண்களின் பெருக்கத்தின் சுட்டியாக எளிய வடிவில் தருக?

13. $S = \frac{n}{2}(a + l)$ ஆனது ஒரு கூட்டல் விருத்தியில் n ஆம் உறுப்புகளின் கூட்டுத் தொகை யாகும். a ஐ எழுவாயாக மாற்றுக?


14. 8 மனிதர் ஒரு வேலையை 7 மணித்தியாலத்தில் செய்து முடிப்பர்.
அ) இவ்வேலை எத்தனை மனித மணித்தியாலங்கள் ஆகும்?
ஆ) அந்த 8 மனிதர்களும் அவ்வேலையை ஆரம்பித்து $2\frac{1}{2}$ மணித்தியாலங் களின் பின்னர் மின்தடை காரணமாக வேலை நிறுத்தப்பட்டது. அப்போது எத்தனை மனித மணித்தியாலம் வேலை செய்யபபடாமை இருந்தது.

15. மடக்கை வாய்ப்பாடு பயன்படுத்தாது தீர்க்க. $\log\frac{12}{5} + 2\log x = lg60$


16. ஒரு வட்டத்தில் AB, DC என்ற இரு நாண்கள் X ஐ இடைவெட்டுகின்றன. AX=12 cm, CX=8cm, AD=15cm ஆகும். BC இன் நீளம் யாது?





17. உருளை திண்மமொன்றின் விட்டம் 2r உம், உயரம் 3r உம் ஆகும். இரு வட்டப்பரப்புக்கும் வளைபரப்புக்கும் உள்ள விகிதம் எளிய வடிவில் தருக. (உருளையின் வளை பரப்பு $2\pi rh$ )




18. A,B என்பன வட்டங்களின் மையங்கள் ஆகும். AC, BC வட்டங்களின் தொடலிகள் ஆகும்.
1) கோணம் ACB இன் பருமன் யாது?
2) $AC = 4\sqrt{2}cm$, $BC = 2cm$ எனின் AB இன் நீளம் என்ன?





19. உருவில் A இற்கு வடக்கே 15 km தூரத்தில் B யும் மேற்கே 15km தூரத்தில் P யும் உள்ளது.
அ) தரவுகளைப் படத்தில் குறிக்க?
ஆ) B இல் இருந்து P இன் திசைகோள் யாது?




20. இருபடிச் சமன்பாடு தீர்க்க. $6x^2-3x=0$

21. 1) AB என்பது காணியின் ஒரு எல்லையாகும்.
I) O இல் இருந்து 7m தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை பருமட்டாக வரைக?




22. ஒரு சதுரத்தில் 3,3,2,5 என்ற இலக்கம் எழுதப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 3 | 5 |
| 2 | 3 |

அ) தீபன் எழுமாறாக 3 என்ற இலக்கம் தொடுகிறான். அவன் தொட்ட இலக்கத்தின் நிகழ்தகவு யாது?
ஆ) தீபன் தொடும் சில நிமிட நேரத்தில் ராஜியும் வேறு ஒரு இலக்கம் தொடுகிறார். இருவரும் தொட்ட இலக்கத்தின் நிகழ்தகவு யாது?

23. அ) $1\frac{1}{2}l$ குளிர்பானத்தை 75ml கொண்ட குவளை எத்தனை பாவித்து முற்றாக நிரப்பலாம்?

ஆ) குவளையின் கொள்ளளவு $1\frac{1}{2}l$ குளிர்பானத்தின் கொள்ளளவின் எத்தனை சதவீதமாகும்?





### பகுதி - B

01. சப்பாத்து சோடி ஒன்றின் உற்பத்தியில் மூலப்பொருளுக்கும் கூலிக்கும் உள்ள விகிதம் 2:3 ஆகும். ஒரு சோடி சப்பாத்து உற்பத்தி செய்ய ரூபா 2000 செலவாகின்றது. உற்பத்தியாளன் 40% இலாபம் வைத்து விற்கின்றான்.
1. மூலப்பொருள் செலவு யாது? கூலிச்செலவு யாது?
2. உற்பத்தியாளன் அச்சோடிச் சப்பாத்தை விற்றவிலை யாது?
3. மூலப்பொருள் 45% ஆலும் கூலிச் செலவு 10% ஆலும் அதிகரித்தால்
   I) புதிய மூலப்பொருள் செலவு யாது?
   II) புதிய கூலிச் செலவு யாது?
4. புதிய உற்பத்திச் செலவு யாது?
5. பழைய சதவீத இலாபம் பெற என்ன விலைக்கு விற்க வேண்டும்?

02. ஒருவன் தனது பயணத்தின் 3/5 பங்கை புகைவண்டியிலும் எஞ்சியதில் 1/3 பங்கை பஸ்வண்டியிலும் மிகுதியை நடந்தும் பயணம் செய்தான்.
அ) புகை வண்டியில் பயணம் செய்தபின் இன்னும் எவ்வளவு பங்கு பயணம் செய்ய உள்ளது?
ஆ) புகைவண்டி, பஸ்வண்டியில் பயணம் செய்த மொத்தப் பங்கு யாது?
இ) நடந்து செல்வதற்கு முழுவதன் என்ன பங்கு மிகுதியாக உள்ளது?
ஈ) நடந்து சென்ற தூரம் 8km எனின் பயணத்தின் மொத்தத் தூரம் யாது?
உ) நடந்து சென்ற தூரம் முழுப் பயணத்தின் என்ன சதவீதம்?

03. ஒரு பாடசாலையில் உள்ள க.பொ.த (சாதாரணதரம்) வகுப்பில் உள்ள மாணவர் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி பார்ப்பது தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.





A- நாடகம்

B- நடனம்

C- சினிமாப்படங்கள்


1. நாடகம், நடனம் மட்டும் பார்ப்போர் பகுதியை நிழற்றுக?
2. சினிமாப்படங்கள் பார்ப்போர் எத்தனைபேர்?
3. நாடகம் பார்ப்போர் 32 பேர் எனின் நாடகம் நடனம் மட்டும் பார்ப்போர் எத்தனை பேர்?
4. குறைந்தபட்சம் இரு நிகழ்ச்சியாவது பார்ப்போர் எத்தனை பேர்?
5. வகுப்பில் உள்ள மாணவர் தொகை 75 பேர் எனின் தரப்பட்ட ஒரு நிகழ்ச்சியினையும் பார்க்காதோர் நிகழ்வு யாது?

04. ஒரு பாடசாலை நுழைவாயிலில் ஒரு அலங்கார முகப்பு இரும்புக் கம்பிகளினால் ஆக்கப்பட்டுள்ளது. AP = BQ = 6m உம் PQ = 13m உம் AD =BC = 8m உம் DR = CT = 3m உம் RS = 5m உம் ஆகும்.




1. அரைவட்டமொன்றின் விட்டம் என்ன?
2. பைதகரசின் தேற்றத்தின்படி DP இன் நீளம் என்ன?
3. நிழற்றிய பகுதியின் சுற்றளவு?
4. நிழற்றிய பகுதிக்கு மின்வயர் மூலம் நிற மின்குமிழ்கள் 6m இற்கு ஒரு மின் குமிழாக எத்தனை மின்குமிழ்கள் பொருத்த வேண்டும்?
5. நிறம் தீட்டிய பகுதியின் பரப்பு யாது?

05. மாணவர் குழு ஒன்று கணித பாடத்தில் பெற்ற புள்ளிகளை வலையுரு வரையம் ஒன்று காட்டுகிறது.




அ) ஆயிடை 10-30 இல் எத்தனை மாணவர்கள் வகை குறிக்கப்படுகிறது?
ஆ) இவ்வலையுரு வரையத்தில் எத்தனை மாணவர்கள் விபரம் எடுக்கப்பட்டது?
இ) ஆகார வகுப்பு யாது?
ஈ) இவ்வலையுரு வரையத்தில் மீடிறன் பல்கோணி ஒன்று அமைக்க?

06. ஒரு செய்தித்தாளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வங்கி ஒன்றில் காணி கொள்வனவு செய்வதற்கு கடன்பெறலாம். ஆண்டுக்கு எளிய வட்டி 12 வீதம் ஆகும். |
| --- |

| தனியார் வங்கி ஒன்றில் 150,000 ரூபா கடன் பெற்றால் 3 ஆண்டுகள் முடிவில் வட்டியாக ரூபா 49500 ஐக் கொடுக்கலாம். |
| --- |

மேற்குறிப்பிட்ட தகவல்களுக்கு ஏற்ப வங்கியில்

அ. 100 ரூபா கடனுக்கு ஓர் ஆண்டு வட்டி யாது?

ஆ. எக்கடன் முதலுக்கு ஓர் ஆண்டு முடிவில் வட்டியாக 2400 ரூபா கொடுக்க வேண்டும்.

இ. 150,000 ரூபா கடன்பெற்ற ஒருவர் 3 ஆண்டுகள் முடிவில் கொடுக்க வேண்டிய வட்டி யாது?

ஈ. தனியார் வங்கியில் அறவிடப்பட்ட வருட வட்டி வீதம் யாது?

07. I. A என்ற அப்பிள் வியாபாரி 3 தட்டுகளில் 3 தரங்களில் அப்பிள் விற்பனை செய்கின்றார்.

| | பெரிது | நடுத்தரம் | சிறிது |
| --- | --- | --- | --- |
| முதலாவது தட்டில் | 6 | 4x | 12 |
| இரண்டாவது தட்டில் | 2 | 6 | 4 |
| மூன்றாவது தட்டில் | 2x | 4 | 8 |

அ. இதனைத் தாயமாகத் தருக. வரிசையில் தருக.

II. B என்ற வியாபாரி

| | முதலாவது தட்டில் | இரண்டாவது தட்டில் | மூன்றாவது தட்டில் |
| --- | --- | --- | --- |
| பெரிது | 8 | 7 | y |
| நடுத்தரம் | y | 4 | 6 |
| சிறிது | 5 | 8 | 5 |

ஆ. இதனைத் தாயமாகத் தருக. வரிசையில் தருக.

இ. $A+B=\begin{pmatrix}14 & 20 & 17\\ 9 & 10 & 12\\ 12 & 12 & 13\end{pmatrix}$ எனின் x,y இன் பெறுமானத்தைத் தருக.

ஈ. பெரிய அப்பிள் ஒன்று 40 ரூபா. நடுத்தர அப்பிள் ஒன்று 30 ரூபாவும் சிறிய அப்பிள் ஒன்று 25 ரூபா எனில் இரு வியாபாரிகளும் பெரிய அப்பிள் முழுவதும் விற்றால் ஒவ்வொருவரும் பெறும் பணத்தொகையைத் தனித்தனியாகக் காண்க.

08. $y=x^2-4x$ இன் வரைபை வரைவதற்கு x,y ஆகியவற்றின் பெறுமானங்களின் வெற்றிடப் பகுதியை நிரப்புக.

| x | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| y | 5 | 0 | -3 | -------- | -3 | 0 | 5 |

அ. x=2 ஆகும் போது y இன் பெறுமானம் காண்க.

ஆ. வரைபுத்தாளில் x-அச்சு, y- அச்சு வழியே பத்து சிறிய சதுரங்களை ஒரு அலகாகக் கொண்டு சார்பின் வரைபை வரைக.


இ. வரைபின் சமச்சீர் சமன்பாடு யாது?

ஈ. $y=x^2-4x$ இன் இழிவுப் பெறுமானம் யாது?

உ. $y=x-3$ என்ற நேர்கோட்டை அதே வரைபுத் தாளில் வரைக.

ஊ. $y=x^2-4x$ உம் $y=x-3$ உம் ஆகியன வெட்டும் x இன் ஆள்கூறு சமன்பாடு $x^2-5x+3=0$ திரும்பதி ஆக்குமெனக் காட்டுக.

09. a. புகைவண்டி நிலையத்தில் இருந்த பயணிகளில் 48 பேரிடம் கைத்தொலைபேசி இருந்தது. 43 பேர் பெண்களாவர். தொலைபேசி வைத்திராத பெண்கள் எண்ணிக்கை 27 ஆகும். தொலைபேசி வைத்திராத ஆண்களின் எண்ணிக்கை 35 ஆகும். இத்தரவுகளை தரப்பட்ட வெண் உருவில் குறித்துக் காட்டுக.




அ. தொலைபேசி வைத்திருக்கும் பெண்களின் எண்ணிக்கை யாது?

ஆ. தொலைபேசி இல்லாத ஆண்களின் பகுதியை வென் உருவில் நிழற்றிக் காட்டுக.

இ. புகைவண்டி நிலையத்தில் இருந்த பயணிகளின் எண்ணிக்கை யாது?

b. அ. வானூர்தி ஒன்றினால் எதிரிகள் முகாமுக்கு குண்டுகள் போடப்பட்டன. குண்டுகள் எதிரி முகாமுக்குள் சரியாக விழுவதற்கான நிகழ்தகவு 4/5 ஆகும். அடுத்தடுத்த இரு குண்டுகள் போடப்பட்டன. எதிரிகள் முகாமுக்குள் விழுவதற்கான அல்லது விழாதிருப்பதற்கான நிகழ்ச்சியைக் காட்டும் மரவரிப்படம் ஒன்று தருக.

1. இரு குண்டுகளும் எதிரிகள் முகாமுக்குள் விழுவதற்கான நிகழ்தகவு யாது?

2. ஒரு குண்டு மட்டும் எதிரிகள் முகாமுக்குள் விழுவதற்கான நிகழ்தகவு யாது?

3. குறைந்தபட்சம் ஒரு குண்டேனும் எதிரி முகாமுக்குள் விழுவதற்கான நிகழ்தகவு யாது?

10. அ. அடியின் ஆரை 2r ஆகவும் உயரம் h கொண்ட உருளை வடிவத் திண்மத்தின் கனவளவு $\pi r,h$ இல் தருக.

ஆ. உருளை வடிவப் பகுதியில் ஆரை r ஆகவுள்ள அரைக்கோணப் பகுதி சமச்சீராக வெட்டி எடுத்தால் அதன் கனவளவு $\pi r$ இல் தருக.


இ. ஆரை 2r ஆகவும் உயரம் a ஆகவும் கொண்ட கூம்பின் பகுதி சமச்சீராக வெட்டி எடுத்தால் அதன் கனவளவு $\pi, r, a$ இல் தருக.

ஈ. $a=4r$ ஆகவும் $h=6r$ ஆகவும் இருப்பின் எஞ்சிய உருளைப் பகுதியின் கனவளவு $18\pi r^3$ எனக் காட்டுக.

உ. $\pi=3.14, r=0.7$ என்ற மடக்கை வாய்ப்பாடு பயன்படுத்தி எஞ்சிய உருளைத் திண்மத்தின் கனவளவு யாது?

## பகுதி - C

01. I. நீளமான கம்பியில் இருந்து வெட்டப்பட்ட ஒரு சென்றிமீற்றர் நீளமான சர்வசமக் கம்பித்துண்டு ஒட்டிப் பொருத்தப்பட்டு மேல்மாடிக் கிரில்கள் செய்யப்படுகின்றன.




அ. முதலாவது வடிவத்துக்கு இரண்டாவது வடிவத்தைவிட எந்தக் கம்பித்துண்டுகளைத் குறைவாக வேண்டும்.

ஆ. முதல், இரண்டாம், மூன்றாம் வடிவத்துக்குத் தேவையான கம்பித்துண்டுகள் தனித்தனியே காண்க.

இ. 12ஆவது வடிவம் அமைக்க எத்தனை கம்பித்துண்டுகள் தேவை?

ஈ. 12 வடிவமும் அமைக்க 3.6 m நீளமான நேரிய கம்பி போதுமானது என ஒரு மாணவன் கூறினார், இக்கூற்று உண்மையானதா? காரணம் தருக?

II. ஒரு பெக்கல் விருத்தி $T_n = 5 \times 2^{n-1}$ இல் $T_n = 160$ எனில் $n$ இன் பெறுமானம் யாது?

02. cm, mm அளவிடையும், நேர்விளிம்பும், கவராயம் மட்டும் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டி வரைக.

I. PQ=6cm, QR=7.2cm கோணம் PQR $=120^0$ ஆகுமாறு முக்கோணி PQR ஐ அமைக்க. அடிக்கோடு QR ஐ வரைக.

II. பக்கம் QR ஐ Qவில் செங்குத்து வரைக.


III. PQ இன் செங்குத்து இருசம கூறாக்கி வரைக.

IV. இரு நேர் வரைகளும் சந்திக்கும் புள்ளி O எனக் குறித்து OQ ஐ ஆரையாகக் கொண்டு வட்டம் வரைக. ஆரையை அறிந்து எழுதுக.

V. நீங்கள் வரைந்த வட்டத்துக்கும் QR இற்கும் உள்ள தொடர்பு.

03. அ. ஒரு வட்ட நாற்பக்கல் எதிர்க்கோணச் சோடி பற்றிய தொடர்பைக் காட்டும் தேற்றத்தை எழுதுக.

ஆ. உருவில் AB ஓர் விட்டம், AC ஓர் நாண். கோணம் CAB இன் இருசம கூறாக்கி AP ஆகும். AP=DP ஆக இருக்குமாறு நாண் AC ஆனது D வரை நீட்டப்பட்டுள்ளது. பின்வருவனவற்றை நிறுவுக.




I. கோணம் CPB=180-2x


II. கோணம் APD=180-2x

III. கோணம் CPD=$90^0$

IV. $\Delta APB = \Delta DPC$

04. a. நடுப்புள்ளித் தேற்றத்தின் மறுதலைத் தேற்றத்தைக் கூறுக.


1. உருவில் AB, AC இன் நடுப்புள்ளிகள் முறையே P,Q ஆகும். BC=CD வரை நீட்டப்படுமாறு AC ஆனது E ஆரை நீட்டப்படுவது CS=ES ஆகும். உருவை வரைந்து தரவுகளைக் குறிக்க.




2. $PQ//BC$ என நிறுவுக.
3. $CD//SR$ எனின் DR=ER என நிறுவுக.
4. PQRS ஓர் இணைகரமாகும்.

05. DB என்பது கிடைத்தளம் ஆகும். DC என்பது 20 m உயரமான கட்டடத்தில் C என்ற யன்னல் உண்டு. அதற்கு எதிரே BA என்ற மாடிக்கட்டடம் உண்டு.

I. உருவைப் பிரதி செய்து C இல் இருந்து பார்க்கும்போது மாடிக்கட்டட உச்சி A இன் ஏற்றக்கோணம் $45^0$ உம், அதன் அடி B இன் இறக்கக் கோணம் $35^0$ உம் எனக் குறிக்க.




II. DB இன் தூரம் என்ன?

III. AB இன் உயரம் என்ன?

IV. D இலிருந்து உச்சி A ஏற்றக்கோணம் (θ)யாது?

# குடாக்கடலில் கடற்றொழில் "நச்சுநீர்" என்ற புதிய அச்சுறுத்தல்

## தொழிலாளர்களை பாதுகாக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாக்கடலில் கடற்றொழில் செய்யும் கடற்றொழிலாளர்களுக்கு அண்மைக்காலமாக புதிய அச்சுறுத்தல் ஒன்று தோனறியுள்ளது.

குறிப்பாக பூநகரி, கல்முனை கடற்பகுதியில் நச்சுநீர் என்ற இந்த அச்சுறுத்தல் மிக அதிகமாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நச்சு நீரின் தாக்கத்திலிருந்து கடற்றொழிலாளர்களைப் பாதுகாக்கும்படி தொடர்புடைய அதிகாரிகளிடம் பாசையூர் புனித அந்தோனியார் கிராமிய கடற்றொழில் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். குடாக்கடலை அண்மித்த ஆழம் குறைந்த பகுதியில் 90 வீதம் கற்பாறைகளைக் கொண்ட கடற்பகுதியில் "நச்சுநீா" அல்லது சுணை எனப் பெயர் குறிப்பிடப்படுகின்ற கண்களுக்கு புலப்படாத பதார்த்தம் கடற்றொழிலாளர் தொழிலை மேற்கொண்டிருக்கு போது உடலில் படுவதால் இத்தாக்கம் ஏற்படுகின்றது.

1/2 சென்ரிமீற்றர் அளவு பகுதியிலேயே நச்சுநீர் தாக்கியது உணரப்படும். பின்னர் உடல் முழுவதும் அதன் தாக்கத்தின் வேதனை பரவிவரும் இத்தாக்கம் ஒரு சிலருக்கு மரணத்தைக்கூட ஏற்படுத்தியுள்ளது. பூநகரி, கல்முனை கடற்பகுதியில் இத்தாக்கம் தற்போது அதிகரித்துக் காணப்படுகிறது. ஜனவரி மாதம் 10 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி தாக்கத்திற்கு உள்ளானவர்களிடமிருந்து பெற்ற அனுபவங்களை உள்ளடக்கிய மேலும் பல தகவல்களைக் கீழே தருகின்றோம்.

இத்தாக்கம் ஏற்பட்டதும் அக்கடற்பகுதியை அவதானித்தால் கண்ணுக்குத் தெரியக்கூடிய எந்தப்பொருளோ அல்லது அக்கடற்பகுதியில் நிறமாற்றமோ புலப்படமாட்டாது.

தாக்கத்திற்குள்ளான உடற்பகுதியில் நெருப்புச் சுட்டது போன்ற உணர்வு உடன் உணரப்படும்.

அதிகமாக 30 நிமிடத்துக்குள் உடல் முழுவதும் தாங்கமுடியாத வேதனை பரவிவிடும். இது 24 மணிநேரம் வரை தணியாது தாக்கத்தின் செறிவிற்கேற்ப 2, 3 நாட்கள் வரை நீடிக்கும்.

ஒரு மணிநேரத்தினுள் நாக்கு, உதடு, கண் இமைகள், வியர் வைத்துவாரம் போன்ற மென்மை யான பகுதிகளில் ஊசியால் குத்து வது போன்ற வேதனை உணரப்படும்.

உடல் முழுவதும் குத்துவதால் தொடர் இருமலும், தும்மலும், மூக்கில் நீரும் கண்ணீரும், நாவில் அதிக உமிழ்நீரும் உண்டாகும்.

ஒரு நிமிடத்திற்குள் பல கோணங்களில் படுக்கவும், எழும்பவும், நடக்கவும், இருக்கவும் தூண்டும். இச்செயற்பாடானது தாக்கத்தின் செறிவிற்கேற்ப பல மணித்தியாலங்கள் வரை நீடிக்கும்.

சிறுநீர், மலம் கழிக்க முடியாது. நச்சுநீர்பட்ட இடத்தில் ஏற்பட்ட எரிவு அல்லது அளத்தல சாதாரண "கடற்சொறி" தாகியது போன்று தான் உணப்படும்.

தாக்கம் ஏற்பட்ட பின் உணவு அருந்தினால் அதன் வேதனை இரட்டிப்பாகும்.

தென்மேற்குப் பருவக்காற்றுக் (சோழகக்காற்று) காலங்களில் கூடுதலாக இத்தாக்கம் ஏற்படுவதில்லை.

இத்தாக்குதலுக்கு உள்ளானவரின் மனநிலை இதைவிட சாவதேமேல் எனத் தோன்றுவதாகவும் கூறியுள்ளனர்.

எனவே மேற்கூறிய அனுபவக் குறிப்புக்களை முன்னிறுத்தி ஆய்வுகளை மேற்கொண்டு தடுப்பு முறைகளையோ அல்லது தாக்கத்திற்கு உடன் நிவாரண மருந்து களையோ கண்டுபிடித்து தொழிலாளர்களுக்கு உதவ ஆவன செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

# கிளிநொச்சியில் மக்கள் ஒன்றியம்

## யுத்த பாதிப்பை அகற்ற வெகுஜன அமைப்பு




(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிராமிய மக்களின் மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக மக்கள் ஒன்றியம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வருட இறுதியில் கிளிநொச்சி மாவட்டத்தின் பொது வேலைத்திட்டப் பணியினை கருத்திற்கொண்டு அவற்றினை முன்னெடுத்துச் செல்வதற்காக அனுபவம் வாய்ந்த பொது வேலைத்திட்டப் பணியினை சிறப்புறச் செய்யக்கூடிய சிலரினால உருவாக்கப்பட்ட அமைப்பே கிளிநொச்சி மாவட்டமக்கள் ஒன்றியம் என்ற பெயரில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் தலைவர் கந்தசாமி சிவசுப்பிரமணியத்தின் வழிநடாத்தலின் கீழ் உறுப்பினர்கள் 16 பேர் கொண்ட குழுவே இந்த மக்கள் ஒன்றியம் மக்களின் தேவை எமது சேவை என்பதனைக் கருப்பொருளாகக் கொண்ட இவ் அமைப்பானது முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தின் பின் தங்கிய கிராமங்களின் முன்பள்ளி சிறார்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

அதன் அடிப்படையில் 2014.01.07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள கோரக்கன் கட்டு குயில் மொழி முன்பள்ளி, செல்வாநகர் கிராமத்தின் செல்வாநகர் முன்பள்ளி சிறார்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வழங்கி தனது நற்பணியின் பயணத்தினை ஆரம்பித்துள்ளது.

இதைத் தொடர்ந்து இன்னும் சில தெரிவு செய்யப்பட்டுள்ள முன்பள்ளி சிறார்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கு ஆலோசித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் தலைவர் கந்தசாமி சிவசுப்ரமணியம் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

(77)

# முற்போக்கு எழுத்தாளர் பிரேம்ஜி கனடாவில் காலமானார்

## அவர் பற்றிய நினைவுக் குறிப்புக்களின் பகிர்வு



இலங்கை முற்போக்கு எழுத்தா ளர் சங்கத்தின் மூத்த உறுப்பினரும் நீண்டகாலமாக அந்த அமைப்பின் செயலாளராகவும் பணியாற்றிய எழுத்தாளரும் ஊடகவியலாளருமான பிரேம்ஜி ஞானசுந்தரன் நேற்றுமுன்தினம் மாலை கனடாவில் காலமானார்.

அச்சுவேலியில் 17-11-1930 ஆம் திகதி பிறந்த ஞானசுந்தரன் தமது . ஆரம்பக் கல்வியை அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியிலும் பின்னர் யாழ். பரமேஸ்வராக்கல்லூரியிலும் கற்றார். 1947 இல் தமது 17 ஆவது வயதிலேயே சுதந்திர இளைஞர் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். அன்றிலிருந்து ஞானசுந்தரன் தீவிரமான வாசிப்பிலும் எழுத்துத் துறையிலும் ஈடுபடத்தொடங்கினார்.

தமிழகம்சென்று மூத்த அறிஞர்கள் நாமக்கல் கவிஞர் வி.க. வா.ரா- சுவாமிநாத சர்மா - குயிலன்,-பேராசிரியர் ராமகிருஷ்ணன் தமிழ் ஒளி முதலானோரின் தொடர்பினால் இடதுசாரிக்கருத்துக்களை உள்வாங்கி இடதுசாரியாகவும் முறபோக்கு எழுத்தாளராகவும் இயங்கிய ஞானசுந்தரன் அங்கு கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி இதழிலிலும் பணியாற்றினார். தாயகம் திரும்பிய பின்னர் கே.கணேஷ் மற்றும் கே.ராமநாதன் ஆகியோரின் தொடர்புகளினால் இலங்கை கம்யூனிஸ்ட கட்சியின் தேசாபிமானி - மற்றும் சுதந்திரன் முதலான இதழ்களிலும் ஆசிரியர் குழுவில் இணைந்தார்.

தேசாபிமானியில் அவர் அக்காலப் பகுதியில் எழுதிய தேசபக்தன் கண்ணோட்டம் என்ற பத்தி எழுத்து வாசகர்களை பெரிதும் ஈர்த்தது. 1954 இல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து அதன் வளர்ச்சிக்கு அல்லும்பகலும் தொண்டாற்றினார்.

சுயநலமற்ற தன்முனைப்பு உணர்வுகளற்ற பொதுநோக்குடன் அவர் இயங்கியதனால் மாற்றுக்கருத்துள்ளவர்களும் அவரை நேசித்தனர். அந்த நேசிப்பே அவரை தொடர்ந்தும் பல வருடகாலமாக சங்கத்தின் பொதுச்செயலாளர் பதவியில் நீடிக்கச்செய்தது.

பிரேம்ஜி என்ற புனைபெயரில் அவர் எழுதத் தொடங்கியது முதல் பிரேம்ஜி ஞானசுந்தரன் என்ற பெயரிலேயே அவர் அழைக்கப்பட்டார்.

சோவியத் தூதரகத்தின் சோவியத் நாடு சோஷலிஸமும் தத்துவமும் - சக்தி முதலான இதழ்களிலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் புதுமை இலக்கியம் இதழிலும் ஆசிரியராக பணியாற்றினார்.

சிறந்த பத்திரிகையாளருக்கான சோவியத்தின் லெனின் விருதும் அவருக்கு கிடைத்துள்ளது. இலங்கையில் பாரதி நூற்றாண்டு விழா உட்பட பல இலக்கியம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மாநாடு, முதலானவற்றில் பிரேம்ஜியின் கடுமையான உழைப்பு குறிப்பிடத்தகுந்தது.

அவரது பிரேம்ஜி கட்டுரைகள் நூல் 2008 இல் வெளியாகியது.

கனடாவுக்கு தமது இரண்டு பெண் பிள்ளைகளின் வேண்டுகோளை ஏற்று சென்றார். அவரது புலப் பெயர்வு இலங்கை தமிழ் இலக்கிய உலகிற்கு பேரிழப்பாகவே கருதபபட்டது.

புலம்பெயர்ந்தாலும் ஈழத்து இலக்கிய் வளர்ச்சிக்கு தம்மாலியன்ற ஆதரவையும் அவர் வழங்கத்தவறவில்லை.

அவரது எழுத்துலகப்பிரவேச பொன்னாண்டை முன்னிட்டு அவரது இலக்கிய நண்பர்கள் 1998 இல் கனதியான தொகுப்பு நூலையும் வெளியிட்டுள்ளனர்.

கொழும்பில் சில மாதங்களுக்கு முன்னர் சில மூத்த முற்போக்கு எழுத்தாளர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வை இலங்கை முற்போக்கு கலை இலக்கிய அமைப்பு நடத்தியபொழுது பிரேம்ஜியும் பாராட்டப்பட்டார்.

தமது மனைவியையும் மக்கள் மருமக்களையும் ஒரு பேரக்குழந்தையையும் உலகெங்கும் வாழும் அவரை நேசித்த இலக்கிய நெஞ்சங்களையும் விட்டு விட்டு அவர் நிரந்தரமாக விடைபெற்றுவிட்டார்.

எம்மிடம் எஞ்சியிருப்பது அவர் பற்றிய நீங்காத நினைவுகளே.

## உல்லாசப் பயணிகளின் வருகை குவிகிறது வருமானம்

பேராதனை பூங்கா உள் ளிட்ட நாடளாவிய ரீதியாக உள்ள பூங்காக்களை பார்வையிடச் சென்றவர்களிடம் இருந்து சேகரிக்கபபட்ட நுழைவுக் கட்டணம் மூலம் அதிகளவிலான நிதி பெறப்பட்டுளளது.

கடந்த வருடத்தில் இதன் மூலம், 41 கோடியே 65 இலட்சம் ருபா பெறப்பட்டுள்ளதாக தேசிய பூங்கா இயக்குநர் நாயகம் சிரில் விஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் தேசிய பூங்கா சரித்திரத்தில் இவ்வளவு தொகை சேகரிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த வருடம் 2013 ஆம் ஆண்டில் 22 இலட்சம் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் தேசிய பூங்காக்களுக்கு விஜயம் செய்துள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

## பயணிகள் பஸ் சாரதிகளுக்கு விசேட சாரதி அனுமதிப்பத்திரம்

(யாழ். நிருபர்)

வாகன சாரதி அனுமதி பத்திரத்தில் புதிய தரப்பிரிவு ஒன்றை இணைக்க வாகன போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது. தற்போது சாரதி அனுமதிப் பத்திரத்தில் 13 தரப்பிரிவுகள் காணப்படுகின்றன.

இதன்படி புதிதாக பயணிகள் பேருந்துக்கான சாரதி அனுமதி தரப்பிரிவு ஒன்றும் சேர்க்கப்படவுள்ளது. பயணிகள் பேருந்துகளின் விபத்துக்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பயணிகள் பேருந்து ஒன்றில் சாரதியாக கடமையாற்றுவதற்கு இந்த சாரதி அனுமதி பத்திரத்தை வைத்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

# தேவ்யானி விவகாரம் சூடு தணிய சாத்தியம்

# அனுசரித்துப்போக இருதரப்பும் விருப்பம்

தேவ்யானி விவகாரத்தால் இந்திய-அமெரிக்க நட்புறவில் விரிசல் ஏற்பட்டு விடக்கூடாது என அமெரிக்க அதிபர் ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் வலியுறுத்தியுள்ளார்.

சமீபத்தில், அமெரிக்காவில் வீசா மோசடி செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு பொது இடத்தில வைத்துக் கைது செய்யப்பட்டார் இந்தியாவிற்கான துணைத் தூதரான தேவ்யானி. இந்தியத் துணைத்தூதரை இவ்வாறு கைது செய்தது இந்தியாவையே அவமானப் படுத்தும் செயல் எனக் கண்டனம் தெரிவித்தது இந்தியா. இதனால், இந்திய-அமெரிக்க உறவில் விரிசல் உண்டாகும் நிலை ஏற்பட்டது.

தொடர் சர்ச்சைகளுக்கு மத்தியில் அமெரிக்காவில் இருந்து தாயகம் திரும்பினார் தேவ்யானி. அவர் மீது தொடரப்பட்ட வழக்கு தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க-இந்திய பேச்சுவார்த்தை தொடராக ஏஸ்பென் அமைப்பில் நேற்று முன்தினம் உரையாற்றி அந்நாட்டு அதிபர் ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ், சமீபத்திய நிகழ்வுகள், ஒத்துழைப்பு முயற்சிகளுக்கு பதிலாக வேறுபாடுகளுக்கு வழிவகுக்கும் வகையில் கவனத்தை கொண்டு சென்றுள்ளது. ஆனால் இந்தக்கடினமான விவகாரங்கள் நம்முடைய நட்புறவுடன் ஒப்பிடும்பொழுது மிக சிறியவை. எனவே, நாம் ஒன்றிணைந்து செயற்பட முடியும். நமக்கு இடையேயான பிரச்சினைகளையும் நாம் கவனத்திற் கொண்டு அவற்றை ஆக்கப்பூர்வமான முறையில் களைய வேண்டும்.

இரு நாடுகளும், தீவிரவாத எதிர்ப்பு, உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் எல்லை பாதுகாப்பு ஆகிய விவகாரங்களில் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். மேலும் இந்தியாவானது அமெ




ரிக்க ஆயுதங்களை வாங்குவதில் மிக பெரும் சந்தையாக விளங்குகிறது.

இது போன்ற (தேவ்யானி விவகாரம்) பிரச்சினைகளால் வளமிக்க எதிர்காலம் தடம் மாறி செல்ல நாம் அனுமதிக்க முடியாது. மிகப்பெரிய அளவிலான வளமை, பெரும் பாதுகாப்பு மற்றும் நம்மிடையேயான உறவுகள் ஆகியவற்றிற்கான வருங்காலத்தை பாதிக்கும் விடயங்களை நாம் அனுமதிக்க முடியாது.

இந்தியாவில் நடைபெறவுள்ள தேர்தலின் முடிவு எதுவாக இருந்தாலும், இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பு மற்றும் உயர்மட்ட அளவிலான நட்புறவானது வளர்ச்சி அடையும் வகையில் தொடரும் என்று அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# மரணிக்காதவருக்கு மரணச் சடங்கு கியூபாவில் விசித்திர பண்டிகை



கியூபாவில் உயிருடன் இருக்கும் நபரை சவப்பெட்டியில் வைத்து புதைப்பது போன்ற திருவிழா மிக கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

கியூபாவின் கவானா நகரில் உள்ள கிராமம் Santiago de las Vegas.

இங்கு கடந்த 1984ஆம் ஆண்டில் இருந்து பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி Burial of Pachencho என்ற திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இதில் உயிருடன் இருக்கும் நபர் ஒருவரை இறந்தவர் போன்று கருதி, அவருக்கு சடங்குகளை மக்கள் செய்கின்றனர். முதலில் இதற்காக நாடக குழுவில் இருந்து நபர் ஒருவரை தெரிவு செய்கின்றனர்.

பின் இவரை சவப்பெட்டியில் வைத்துக் கொண்டு ஊர் முழுவதும் சுற்றி வருகின்றனர். அப்போது ஆட்டம், பாட்டம் என மது அருந்திக்கொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் தெருக்களை சுற்றி வருகின்றனர்.

முடிவில் கல்லறையில் வந்து சவப்பெட்டியுடன் குறித்த நபரை புதைத்து விடுகின்றனர். அனைத்து சடங்குகளும் முடிந்த பின் அந்த நபர் மீண்டும் எழுந்து வருகிறார், தான் புதிதாக பிறந்தவர் போன்று உணர்வதாகத் தெரிவிக்கின்றார்.

# மயிர் இழையில் தப்பினார் ஜோர்டான் மன்னர்



ஜோர்டான் நாட்டு மன்னர் அப்துல்லா பயணம் செய்த ஹெலிகொப்டர் மோசமான வானிலை காரணமாக மெக்சிகோ நாட்டில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

மெக்சிகோ நாட்டில், பெயர் வெளியிடப்படாத இடத்திற்கு, ஜோர்டான் நாட்டு மன்னர், ஹெலிகொப்டரில் பயணம் மேற்கொண்டிருந்தார்.

அந்நாட்டின் கடற்கரை மாகாணமான வெராக்ரூஸில் உள்ள, கியூட்லாஃஹவாக்கில் ஹெலிகொப்டர் சென்று கொண்டிருந்தது. அப்போது நிலவிய மோசமான வானிலை காரணமாக, அங்குள்ள பேஸ்பால் மைதானத்தில் ஹெலிகொப்டர் அவசரமாக தறையிறக்கப்பட்டது. ஹெலிகொப்டர் தரையிறங்கியதும், சட்டம் ஒழுங்கு அதிகாரிகள் அவரை பாதுகாப்பாக அருகில் இருந்த விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர் என்று கியூட்லாஃஹவாக் மேயர் தெரிவித்தார்.

மெக்சிகோ ஜனாதிபதி என்ரிக் பெனா நீட்டோவை மன்னர் அப்துல்லா சந்தித்துப் பேசினார். ஆனால் சந்திப்பின் விவரம் வெளியிடப்படவில்லை.

# "மூன்று எஸ்" தத்துவம் இந்திய வளர்ச்சிக்கு தேவை

## இது மோடியின் விருப்பம்


(சென்னை)

உள்நாட்டு தொழில்நுட்பம் வளர்ச்சி பெற, மாணவர்கள் இந்தியாவிலேயே பணிபுரிய வேண்டும் பா.ஜ.,பிரதமர் வேட்பாளர் நரேந்திரே மோடி தெரிவித்துள்ளார்.

சென்னை, எஸ்.ஆர்.எம்., பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, பா.ஜ., பிரதமர் வேட்பாளரும், குஜராத் முதல்வருமான மோடி, மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து பேசியதாவது :

இந்தியாவிற்கு ஒரு நற்செய்தி மைக்ரோசாப்ட், அப்பிள் போன்ற நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் துவங்க வேண்டும். பல பழமையான பலகலைக்கழகங்களின் பிறப்பிடமாக இந்தியா விளங்குகிறது இவற்றில் ஆரியபட்டா போன்ற மேதைகள் உருவாக்கப்பட்டுள்ளனர் எங்கு சென்றாலும் எப்போதும் தாய்நாட்டை நினைவில் வைக்க வேண்டும்.தாய்மண்ணிற்கு உங்களின் பங்களிப்பை எப்போதும் அளிக்க வேண்டும். நாட்டின் வளர்ச்சிக்கு உங்களால் இயன்றதை தயங்காமல் செய்யுங்கள்

சுதந்திரம் அடைந்து 65 ஆணடுகள் ஆன பின்னரும் இன்னும் நாம் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தாமல் உள்ளோம் அறிவு மிகச் சிறந்த சொத்து வறுமைக்கு எதிராக போராடவும் அது சிறந்த ஆயுதம் இந்தியப் பல்கலைக்கழகங்கள் ஏதும் சர்வதேச தரவரிசைப்பட்டியலில இடம்பெறாதது வருத்தம் அளிக்கிறது கல்விக்கழக கட்டடங்கள் அரசால் துவங்கப்பட வேண்டும



நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலும் ஐஐடி, ஐஐஎம், எய்ம்ஸ் உள்ளிட்டவைகள் அமைக்கப்பட வேண்டும் 35 வயதிற்கு உடபட்ட 65 சதவீதம் இளைஞர்களை கொண்ட இளமைத் துடிப்பான நாடு இந்தியா் ஒவ்வொரு மணி நேரத்திலும் திறன் வளர்ச்சி தேவை திறமையில்லாத பட்டதாரிகளையே நமது நாடு கொணடுள்ளது் 10 நாட்களில் செய்ய வேண்டிய செயல்களுக்கு நாம் 10 வருடங்கள் எடுத்துக் கொள்கிறோம்

உலகச் செய்திகள்

# முஷாரப் மீதான வழக்கு நேரில் ஆஜராக அழைப்பானை

இஸ்லாமாபாத்: தேச துரோக வழக்கில் 18ஆம் திகதி முஷாரப் நேரில் ஆஜராக வேண்டும் என பாகிஸ்தான் நீதிமன்றம் அழைப்பினை அனுப்பியுள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டு முஷாரப் ஆட்சியின் போது அவசர நிலை பிரகடனப்படுத்தியது உட்பட பல்வேறு நடவடிக்கைகளில் தற்போதைய நவாஸ் ஷெரீப் அரசு தொடுத்துள்ள தேச துரோக வழக்கில் கடந்த ஆண்டு முதல் விசாரணை நடைபெற்று வருகிறது. இதில் ஒருமுறை கூட முஷாரப் ஆஜராகவில்லை. கடந்த ஜனவரி 2ஆம் திகதி தனக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், 18ஆம் தேதிக்கு முன்பாக நேரில் ஆஜராக வேண்டும் என்று முஷாரப்புக்கு சிறப்பு நீதிமன்றம் அழைப்பினை அனுப்பியுள்ளது. வழக்கில் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்ற முஷாரப்பின் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்ததைத் தொடர்ந்து அவர் நேரில் ஆஜராவார் என முஷாரப்பின் சட்டத்தரணி அன்வர் மன்சூர் நீதிமன்றத்தில் உறுதி அளித்தார். அவர் மேலும் கூறுகையில், 'மருத்துவமனையில் இருந்து முஷாரப் (டிஸ்சார்ஜ்) ஆனதும் அவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராவார்' என்று தெரிவித்தார்.

# கண்திறந்தால் கற்கள் விழும் ஏமன்நாட்டில் அதிசய சிறுமி

ஏமன் நாட்டில் வசிக்கும் சிறுமியின் கண்களில், கண்ணீருக்குப் பதில், சிறுசிறு கற்கள் வருவது, அனைவரையும் வியப்படையச் செய்துள்ளது

வளைகுடா நாடான, ஏமனைச்சேர்ந்த, சாதியா சாலேக், என்ற 12 வயது பெண்ணின், கண் இமைகளின் உட்பகுதியில், தானாக இந்தக் கற்கள் உருவாகிறது. இவை எப்படி சாத்தியம் என்ற கேள்விக்கு, மருத்துவர்களால் பதில் அளிக்க முடியவில்லை. இமைகளின் உள்ளே உருவாகும் கற்கள், முழுமையடைந்ததும், தானாகவே வெளியில் வந்து விழுவதாகவும், அவ்வாறு விழுந்த கற்களை சேமித்து வைத்துள்ளதாகவும், சாதியா கூறியுள்ளார். இவரை பரிசோதித்த டாக்டர்கள், சாதியா ஆரோககியமாகவுள்ளதாக கூறியுள்ளனர்.





# இம்மாத இறுதிப்பகுதியில் வவுனியாவில் மஞ்சள் அறுவடை



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் முதன் முறையாக பரீட்சார்த்தமாக 10 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட மஞ்சள் செய்கைக்கான அறுவடை இம்மாத இறுதியில் மேற்கொள்ளப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் அ.சகிலா பாணு தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் பிரிவின் ஆலோசனையுடனான வழிகாட்டலில் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் ஊடு பயிராகவும் தனியாகவும் மஞ்சள் செய்கை பண்ணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஞ்சள் செய்கைக்கான நிதியை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபை வழங்கிய நிலையில், ஒவ்வொருவருக்கும் 15,000 ரூபா படி நாட்டுவதற்கான மஞ்சள் கிழங்கும் பசளையும் மொத்தமாக 25 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மஞ்சள் ஏற்றுமதி வாய்ப்பை மையமாகக் கொண்டு இந்தச் செய்கை மேற்கொள்ளப்பட்டதுடன் மஞ்சள் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளிடமிருந்து மஞ்சளை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ஒன்பது முதல் 12 மாதச் செய்கையான மஞ்சள் செய்கை குறைவான பராமரிப்புச் செலவுகளுடன் அதிகளவான வருமானம் ஈட்டும் செய்கையென விவசாயிகள் தெரிவித்தனர்.

தற்போது இங்கு மஞ்சள் செய்கை பண்ணப்படுவதால் மலிவாக நுகர்வோர் மஞ்சளைப் பெறும் வாய்ப்புள்ளதாகவும் விவசாயிகள் கூறினர்.

மேலும், மஞ்சள் செய்கை அறுவடையின் பின்னர் சந்தைப்படுத்தலில் தாம் பிரச்சினைகளை எதிர்நோக்கலாம் எனவும் விவசாயத் திணைக்களம் தங்களிடம் மஞ்சளை கொள்வனவு செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமெனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

## குருநகரில் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம் குருநகர் இறங்குதுறைப் பகுதியில் இருந்து கைக்குண்டு ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநகர் இறங்குதுறைப் பகுதியில் கைக்குண்டொன்று இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் அவ்விடத்திற்குச் சென்ற இராணுவத்தினர் மேற்படி குண்டினை மீட்டுச் சென்றதுடன் அதனை செயலிழக்கவும் செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (25)

## பேருந்து சாரதிகளுக்கு புதிய அனுமதிப் பத்திரம்

வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தில் புதிய தரப்பிரிவு ஒன்றை இணைக்க வாகன போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது. தற்போது சாரதி அனுமதிப் பத்திரத்தில் 13 தரப்பிரிவுகள் காணப்படுகின்றன.

இதன்படி புதிதாக பயணிகள் பேருந்துக்கான சாரதி அனுமதி தரப்பிரிவு ஒன்றும் சேர்க்கப்படவுள்ளது.

பயணிகள் பேருந்துகளின் விபத்துக்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்த தீமானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## செயற்கைமுறை சினைப்படுத்தல் உடுவிலில் மீளவும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கால்நடை சுகாதார அபிவிருத்தி திணைக்களத்தினால் உடுவில் பிரதேசத்திலுள்ள கால்நடைகளுக்கான செயற்கை முறையிலான சினைப்படுத்தும் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உடுவில் பிரதேச கால்நடை வைத்தியதிகாரி ரி.விமலகுமார் தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாதங்களாக கால்நடைகளுக்கு பரவிய கால் வாய் நோய் காரணமாக செயற்கை முறையில் சினைப்படுத்தும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இருந்தும், தற்போது கால் வாய் நோய் பரவுவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் கால்நடைகளுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி கால்வாய் நோய் தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பரவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதியோருக்கு கொடுப்பனவு; 37 மில்லியன் ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

சமூக சேவைகள் அமைச்சினால் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு வழங்கப்படும் 1,000 ரூபா உதவித்தொகையை இந்த வருடம் கிளிநொச்சி மாவடடத்தில் 3,036 முதியோர்கள் பெற்றுவருவதாக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் சுகிந்த எஸ்.சிங்கப்புலி தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முதியோர்களுக்கான மேற்படி கொடுப்பனவுக்காக 37 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் 1,510 பேரும் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் 727 பேரும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் 357 பேரும் பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் 442 பேரும் இந்த உதவித் தொகையைப் பெற்றுவருவதாகவும் அவர் கூறினார்.

இந்த உதவித் தொகையை தங்களது பிரதேசங்களிலுள்ள தபாலகங்கள் அல்லது உபதபாலகங்களில் பெறமுடியும் எனவும் அவர் கூறினார்.

## தேர்தலில்...

நிதிகள் தேர்தல் காலங்களின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் வழங்கப்படுகின்ற அவர்களது பொய்யான பரப்புரைகளை நம்பி அவர்களுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த போதிலும் அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரம் அவர்களால் எதையும் பெற்றுத்தர முடியவில்லையென்றும், நாம் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டே வருகின்றோம் என சுட்டிக்காட்டினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த விடயம் தொடர்பில் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி உரிய தீர்வினை பெற்றுத் தரும் வரையில் மாற்று ஏற்பாடாக சந்தைக்கு அருகாமையிலுள்ள காணியில் தற்காலிகமாக மரக்கறி சந்தையை நடத்துவதற்கும் வர்த்தகர்களுக்கு மட்டுமல்லாது பொதுமக்களுக்கும் அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் நியாயத்தின் அடிப்படையில் தீர்வு பெற்றுத் தரப்படுமென்றும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் எமது கோரிக்கைகளின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்தவகையில், குறித்த அங்காடிக்கான கட்டடத்தின் அமைப்பானது கீழே மரக்கறி வர்த்தகத்தையும், மேலே கடைத் தொகுதியையும் கொண்டமைந்ததாக அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், வர்த்தகர்களது ஏனைய பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

அத்துடன், நகரசபை ஆளும்கட்சி உறுப்பினர்கள் வெவ்வேறு பெயர்களில் குறித்த அங்காடியில் கடைகளை பெற்றுள்ளதாகவும் இதன் காரணமாகவே மரக்கறி வியாபாரிகள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி, அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஐ.நா. உதவி...

யு.என்.டி.பி.யினால் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதாபிமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னேற்றமடைந்துள்ளன எனவும் தெரிவித்தார்.

இன்றைய தினம் அரசின் உயர்மட்ட அதிகாரிகளையும், சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதேவேளை வடபகுதிக்கும் விஜயம் செய்யவுள்ள அவர், அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்திப்பதுடன் ஐ.நா. மற்றும் யு.என்.டி.பி.யினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிடவுள்ளார்.

## மாடறுப்பை...

ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட உள்ளது.

நேற்று முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை சிஹல ராவய அமைப்பு மிருகவதைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

இலங்கையின் எந்தப் பாகத்திலும் போராட்டங்களை நடத்தக் கூடாது என நீதிமன்றம் சிஹல ராவய அமைப்பிற்கு உத்தரவிட்டுள்ள நிலையிலும் அந்த அமைப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றது.

மிருகவதையை எதிர்த்து கடந்த வருடம் தலதா மாளிகையின் முன் உயிர்த்தியாகம் செய்த போவத்தே இந்திர ரத்ன தேரர் தெரிவித்தபடி நாம் ஒரு சங்கம் அமைத்துள்ளோம். அச்சங்கத்தில் 500 பேர் உள்ளனர். அதில் ஒருவரே மேற்படி இந்திரரத்ன தேரர். அவரே மிருகவதைக்கு எதிராக தனது உயிரைத் தியாகம் செய்தார்.

எனவே இன்னும் ஒரு கிழமைக்குள் ஜனாதிபதி நாட்டில் இடம் பெறும் மிருகவதையை நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் மீதமிருக்கும் 499 பேர் உயிர்த்தியாகம் செய்ய வேண்டிவரும் என தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கையில் பிறமத தடை சட்டமூலம் உடன் கொண்டு வரப்பட வேண்டும். இலங்கையிலுள்ள முஸ்லிம் பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும். மாடறுப்பு உடன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் பல பௌத்த பிக்குகள் உட்பட நூற்றுக்கும் அதிகமான பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## சுண்டுக்குளி...

சென்றதாகவும், அன்றைய தினம் வவுனியாவிலிருந்து தொலைபேசியில் தன்னுடன் உரையாடியதாகவும் அதன் பின்னர் அவர் தொடர்பான தகவல்கள் தமக்குக் கிடைக்கவில்லையெனவும் இது வரையிலும் வீடு திரும்பவும் இல்லையெனவும் தெரிவித்து அவரது தந்தை தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (25)

## இலங்கையில்...

நாம் எந்தவொரு தருணத்திலும் குற்றமிழைக்கவில்லை.

எந்தவொரு சவால்கள் முன்வைக்கப்பட்ட போதும், அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும்.

குறித்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த யுத்த காலத்தில் பயங்கரவாதிகளால் பொது மக்களுக்கு இளைக்கப்பட்ட இன்னல்களை சர்வதேசம் மறந்து விட்டது.

அத்துடன் தேர்தல் அவசியமில்லை என்று கூறும் எதிர்க்கட்சியே இன்று நாட்டில் உள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தன்னிடம் இன்னமும் ஜில்மாட் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச...

வெளியேற்றப்பட்டனர். இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரி ஜனாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும், யுத்தம் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடக்கவுள்ள நிலையில் முஸ்லிம் மக்கள் நீதிக்காக காத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையை...

தெரிவுசெய்யவில்லை. எனினும் ஜெனிவாவுக்குச் செல்லும் குழுவினரை அடுத்த இரு தினங்களுக்குள் ஜனாதிபதி தெரிவு செய்துவிடுவார் என எதிர்பார்க்கின்றேன்.

இலங்கை தொடர்பாக முதலாவது பிரேரணை ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அரசாங்கம், நாட்டில் அபிவிருத்தி உட்பட பல்வேறு முன்னேற்றத்தை வெளிப்படுத்தியது எனினும் இந்த முன்னேற்றத்தை சில நாடுகள் எதிர்த்தன. அவர்கள் மத்திய கிழக்கிலுள்ள சில நாடுகளுக்கு ஏற்பட்ட நிலையை ஏற்படுத்த முயற்கின்றனர்.

இறுதிக்கட்டப் போரின்போது நாற்பதாயிரம் பொதுமக்கள் உயிரிழந்தனரென்பதை நான் முற்றுமுழுதாக மறுக்கின்றேன். இது ஐ.நா மற்றும் வேறு நபர்களாலேயே தெரிவிக்கப்படுகிறது. நாற்பதாயிரம் பொதுமக்கள் உயிரிழந்தனர் என்பதனை இவர்கள் எவ்வாறு கூறுகின்றனர் என்பது எனக்குத் தெரியாது.

எப்படியிருந்தபோதிலும் அரசாங்கம் இராணுவத்திற்கோ அல்லது வேறு எவருக்கோ துரோகம் செய்ய மாட்டாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையின் நீடித்த அமைதிக்கு அமெரிக்க காங்கிரஸில் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் நீடித்த அமைதியை உறுதிசெய்வதற்குத் தேவையான உள்ளக மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், நல்லிணக்கம் ஆகியவற்றை ஆதரிப்பதாக அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பான தீர்மானம் ஒன்றை கடந்த 6 ஆம் திகதி காங்கிரஸில் சமர்ப்பித்துள்ள செனட்டர் ரிச்சர்ட் பூர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற போரிலும் போருக்கு பின்னரும் இரு தரப்பினராலும் இழைக்கப்பட்ட போர் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் இணைந்து பொறுப்புக்கூறும் சுயாதீனமான சர்வதேச பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ரிச்சர்ட் பூர் உள்ளிட்ட ஐந்து செனட்டர்கள் சமர்ப்பித்துள்ள இந்த யோசனையை அமெரிக்க காங்கிரஸ், அதன் வெளிவிவகார குழுவிற்கு அனுப்பியுள்ளது.

இலங்கை அரசாங்கம், ஊடகங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புகளுக்கு பிரவேசிப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டும்.

அரசியல் கைதிகள், போர்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு ஊடகங்கள் செல்ல இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் ஊடக அலுவலகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் சட்டத்திற்கு முன் கொண்டு வரப்பட வேண்டும்.

அத்துடன் ஜனநாயகம், சட்ட ஒழுங்கும், மனித உரிமைகள், பொருளாதார நலன்கள், பாதுகாப்பு நலன்கள் தொடர்பிலான அமெரிக்காவின் அக்கறைகளை மேம்படுத்த இலங்கை ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கால்கள் வெட்டப்பட்ட நிலையில் கடத்தி வரப்பட்ட மாடுகள் மீட்பு

## 3 சந்தேக நபர்களும் கைது

(சாவகச்சேரி)

வன்னியிலிருந்து கடத்தி வரப்பட்ட 3 பசு மாடுகள் சாவகச்சேரி பொலிஸாரினால் மீட்கப்பட்டதுடன், 3 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

வன்னியிலிருந்து கேரதீவு, சங்குப்பிட்டி பாலம் ஊடாக முன் கால்கள் வெட்டப்பட்ட நிலையில் 3 பசு மாடுகளை உழவு இயந்திரத்தில் ஏற்றி வரும் போது ரோந்து சென்ற சாவகச்சேரிப் பொலிஸார் உழவு இயந்திரத்தை மறித்து சோதனையிட்ட போது பசுக்களைக் கடத்திச் செல்வது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உழவு இயந்திரத்திற்கு முன்பாகவும் பின்பாகவும் பாதுகாப்பிற்காக வந்த கன்ரர் வாகனச் சாரதியும், மோட்டார் சைக்கிளோட்டியும் தப்பியோடிய நிலையில் வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் மூவரும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற வாசஸ்தலத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (11)

# நல்லூருக்கு வந்தவர் சடலமாக மீட்பு



யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயச்சூழலின் மேற்கு வீதியில் இறந்த நிலையில் முதியவர் ஒருவரின் சடலம்நேற்றுக் காலை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் தட்டாதெரு அரசடி வீதியைச் சேர்ந்த மயில்வாகனம் சுந்தரமூர்த்தி (வயது-72) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தினமும் காலையில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு வந்து செல்லும் இவர், வழமைபோன்று நேற்றைய தினமும் வீட்டிலிருந்து புறப்பட்டு வந்துள்ளார்.

எனினும், நடக்க முடியாமல் உட்கார்ந்த அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மீனவர்களைக் கைது செய்வதை இலங்கை உடன் நிறுத்த வேண்டும்

## கூறுகிறார் நாராயணசாமி



தமிழக மீனவர்களை சிறைபிடிப்பதை இலங்கை அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என இந்திய மத்திய அமைச்சர் வி. நார்ரா யணசாமி தெரிவித்துள்ளார்.

இருநாட்டு மீனவர்களிடையே பேச்சுவார்த்தை நடத்தி, சுமுகமான தீர்வை எட்டி ஒப்பந்தம் செய்வதற்கு இந்தியா மற்றும் தமிழக அரசுக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்திய-இலங்கை மீனவர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் நடந்த பேச்சுவார்த்தையின்போது இருநாட்டு மீனவர்களும் எந்தெந்தப் பகுதிகளில், எந்தெந்தக் காலங்களில் மீன்பிடி தொழில் செய்வது? என்பது குறித்து இருதரப்பினருக்கிடையே ஒரு சுமுகமான உடன்பாடு எட்டப்பட்டது. பேச்சுவார்த்தைக்கு முன்னதாக மீனவர்களையும், படகுகளையும் இலங்கை அரசு விடுவித்தது.

ஆனால் காரைக்கால் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டார்களே தவிர, அவர்களது 8 படகுகளை இலங்கை அரசு இன்னமும் விடுவிக்கவில்லை. இலங்கையில் உள்ள இந்திய தூதரக துணை அதிகாரி குமரனை தொடர்பு கொண்டு பேசி, காரைக்கால் மீனவர்களின் 8 படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கை அரசு தமிழக மீனவர்களை தொடர்ந்து கைது செய்வதும், படகுகளை சிறைப்பிடிப்பதும் கண்டனத்திற்குரியதாகும். இது சுமுகமான பேச்சுவார்த்தைக்கு நல்லதல்ல.

எனவே தமிழக மீனவர்களை சிறைப்பிடிப்பதை இலங்கை அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும். இருநாட்டு மீனவர்களிடையே பேச்சுவார்த்தை நடத்தி, சுமுகமான தீர்வை எட்டி ஒப்பந்தம் செய்வதற்கு இந்தியா மற்றும் தமிழக அரசுக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்திற்கும் இடையே நடைபெற்ற இறுதிக்கட்டப் போரில், இலங்கை மனித உரிமைகளை மீறி உள்ளதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. மேலும், இது தொடர்பாக ஐ.நா. சபையில் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் தொடர்பான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்தபோது, அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா [illegible]க் களித்தது.

தற்பொழுது மீண்டும் கொண்டு வரப்பட உள்ள தீர்மானத்திற்கும் இந்தியா ஆதரவு அளிக்க வேண்டும் என்று தமிழகத்தில் கோரிக்கை வலுத்து வருகிறது. இதுதொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங் உரிய முடிவை எடுப்பார் எனவும் நாராயணசாமி மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசு - ஐ.தே.க. இடையே வேறுபாடு எதுவுமில்லை

## கண்டுபிடித்தது ஜே.வி.பி.

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், அரசாங்கத்திற்கும் இடையே வேறுபாடுகள் இல்லை என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

பாணந்துறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதனால் எதிர்ப்பு வெளிப்படாது. ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் வேறுபாடு இல்லை. எமது கட்சியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் யோசனையின் பிரகாரம் புதிய தலைவராக அநுரகுமார திஸாநாயக்கவை அனைவரது விருப்பத்துடன் தெரிவு செய்திருக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் இதனைச் செய்யமுடியாது. ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை ரணில் விக்கிரமசிங்க விட்டுக் கொடுக்கமாட்டார்.

அதனை வேறுயாருக்கும் கொடுக்கவும் மாட்டார். மக்கள் விடுதலை முன்னணி தலைமைத்துவத்தை மாற்றி வழங்கிய முன்னுதாரணத்தை முடிந்தால் ஐக்கிய தேசியக் கட்சி செய்து காட்டுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதனை அவர்களால் செய்ய முடியாது ஆகவே ஐக்கிய தேசியக் கட்சி பயனுள்ள கட்சி அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

# அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் விசனம் கொள்கிறது ஐ.தே.க.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்களில் பெரும்பாலானவை அநாவசியமான செயற்திட்டங்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழ் அத்தகைய செயற்திட்டங்களை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்றுக் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழ் மத்தள விமான நிலையம் உள்ளூர் சேவைகளுக்கான விமான நிலையமாக பயன்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 16 வயது சிறுமி துஷ்பிரயோகம் குடும்பஸ்தர் விளக்கமறியலில்

இமையாணன் கிழக்கு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சிறுவர் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சிறுமி ஆறு மாத கர்ப்பிணியான நிலையில் அவரின் பெற்றோர் கரவெட்டி பிரதேச செயலக நன்னடத்தை உத்தியோகத்தருக்கு முறையிட்டதைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை பொலிஸார் ஊடாக சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். மேலதிக மருத்துவ பரிசோதனைகளுக்காக சிறுமி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (116)

# மன்னார் மனிதப் புதைகுழி மீளவும் இன்று தோண்டப்படுகிறது

மன்னார், திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி 20ஆவது தடவையாக தோண்டும் பணி மீண்டும் இன்று மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் ஆரம்பிக்கப்படவுள்ளது

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி குறித்த பகுதியில் நீர் இணைப்பிற்கு குழாய் பொருத்துவதற்காக பள்ளம் தோண்டப்பட்ட போது மனித எலும்புக்கூடுகள் உள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் 19 தடவைகள் குறித்த திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி தோண்டப்பட்டுள்ளது. இது வரை 55 மனித எலும்புக்கூடுகள் முழுமையாகவும், எச்சங்களாகவும் மீட்கப்பட்டுள்ளது.

அவற்றில் 28 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு பொதி செய்யப்பட்டு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணத்தின் உத்தரவிற்கமைவாக மன்னார் பொது வைத்தியசாலையில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 31 ஆம் திகதி திருக்கேதீஸ்வரம் மனிதப் புதை குழியில் மேற்கொள்ளப்பட்டு வந்த அகழ்வுப்பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் இன்று ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மீண்டும் இன்று 20 ஆவது தடவையாக மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி தோண்டப்படவுள்ளது.

# நேரடி விமான சேவையை ஆரம்பிக்கிறது கொரியன் எயார்

(கொழும்பு)

கொரியன் எயார் விமான சேவை நிறுவனம் சியோலில் இருந்து இலங்கைக்கும் மாலைதீவுக்கும் தனது நேரடியான சேவைகளை ஆரம்பிக்க உள்ளது.

இந்து சமுத்திர நாடுகளில் கொரியன் எயார் தனது சேவ்வயை விஸ்தரிக்கும் வகையில், எதிர்வரும் 6 ஆம் திகதி இந்த விமான சேவை தொடங்கப்படவுள்ளது.

வாரத்தில் மூன்று முறை மாலே மற்றும் கொழும்புக்கான சேவைகள் நடத்தப்பட உள்ளதுடன், கொழும்பில் இருந்து சியோலுக்கும் இஞ்சியோன் விமான சேவைகள் நடத்தப்பட உள்ளன.

செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த விமான சேவைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 பெப்ரவரி 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.